பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 27 செவ்வாய்க்கிழமை (10.05.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :165

### மட்டு. சந்திவெளியில் நேற்று வெறியாட்டம்:

# மறியலில் ஈடுபட்ட மக்கள் மீது படையினர் சூடு; ஒருவர் பலி!

## 25 இற்கும் அதிகமானோர் காயம்



உயிரிழந்த பொதுமகனின் சடலம்.

மட்டக்களப்பு,மே10

மட்டக்களப்பு, சந்திவெளியில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள் மீது இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்; 25 பேருக்கு மேல் காயமடைந்தனர். மேலும் பலருக்குச் சிறுகாயங்கள் ஏற்பட்டுள்ளன.

ஒரு மாதத்துக்கு முன்னர் சந்திவெளியில் அமைக்கப்பட்ட இராணுவ முகாமை அங்கிருந்து அகற்றக்கோரியே பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். திடீரென அங்கு வந்திறங்கிய இராணுவத்தினர் பொதுமக்களை விரட்டியடித்துத் தாக்கினர். பின்னர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்று அங்கு நின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர். போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் இருவர் முன்னிலையிலேயே இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பு நகரிலிருந்து 13 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள சந்திவெளி என்ற இடம். இங்கு மட்டு. - சந்திவெளி வீதியில் வைத்தியசாலைக்கு முன்பாக ஒரு மாதத்திற்கு முன் இராணுவ வீதித்தடை முகாம் ஒன்று புதிதாக ஏற்படுத்தப்பட்டது. இந்த இடத்திலிருந்து வடக்கே 500 மீற்றர் தொலைவிலும் தெற்கே 500 மீற்றர் தொலைவிலும் ஏற்கனவே இரு இராணுவ முகாம்கள் இருக்கின்றன.

இந்தநிலையில், புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமை அங்கிருந்து அகற்றக்கோரி மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

நேற்றுக்காலை 9 மணிக்கு மக்களின் ஆர்ப்பாட்டமும், மறியல் போராட்டமும் ஆரம்ப

(2 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் கடும் கண்டனம்

கிளிநொச்சி,மே10

மட்டு. சந்திவெளிப் பகுதியில் பொதுமக்கள் மீது படையினர் மேற்கொண்ட கொடூரத் தாக்குதலைத் தமிழீழ விடுதலைப் புலிகள் வன்மையாகக் கண்டித்துள்ளனர்.

இதுவிடயமாக, விடுதலைப் புலிகளின் அரசியல்துறை விடுத்த செய்திக் குறிப்பில்:-

மக்களின் அமைதிவழிப் போராட்டத்தை ஆயுத வழிகொண்டு தடுப்பதானது போர் நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்பதுடன், போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கும், தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கும் அமைதி வழிப் போராட்டங்களை நடத்தும் உரிமை மக்களுக்குண்டு.

• மூன்று வருட சமாதான முயற்சிகளுக்கூடாகத் தங்கள் மீது திணிக்கப்பட்ட தடைகள், நெருக்குவாரங்கள் நீங்கி, சொந்த வாழ்விடங்களில் நிம்மதியாகச் சென்று வாழலாம் என்று எதிர்பார்த்திருந்த மக்களிற்குத் தமது எதிர்பார்ப்பு

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ முகாம் அகற்றப்படும்!

ஏறாவூர்,மே10

மட்டக்களப்பு - சந்திவெளிப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவ முகாமை அகற்ற இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று மக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தை அடுத்து இந்த முடிவு எட்டப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்தி தெரிவித்தார்.

கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். ஜெயானந்தமூர்த்தி, ரி. கனகசபை,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கில் இன்று ஹர்த்தால்

மட்டக்களப்பு, மே10

மட்டக்களப்பு சந்திவெளியில் நேற்று இடம்பெற்ற அசம்பாவிதங்களைக் கண்டித்து வடக்கு - கிழக்கில் தமிழர் தாயகம் எங்கும் இன்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

சந்திவெளிப் பகுதியில் இராணுவத்தினரால் பொதுமகன் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமை பொதுமக்களின் போராட்டம் மீது கண்மூடித்தனமாகப் படையினர் தாக்குதல் நடத்தியமை மற்றும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை ஆகிய மூன்று அம்சங்களை முன்வைத்தே இந்தக் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுகிறது என்று ஜெயானந்தமூர்த்தி எம்.பி. தெரிவித்தார்.

பொறுப்பு வாய்ந்த அரச உயர் அதிகாரிகள், நாடாளுமன்றப் பிரதிநிதிகள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் எனப் பல உயர் பிரதிநிதிகளின் முன்னிலையிலேயே இராணுவத்தினரின் இத்தகைய அராஜகம் இடம்பெற்றுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் ஊடகவியலாளர் ஒருவரும் காயமடைந்துள்ளனர்; ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

இராணுவத்தினரின் இந்தப் போக்கு உடனடியாக நிறுத்தப்படவேண்டும். சம்பந்தப்பட்ட படையினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படியான சம்பவங்கள் இனிமே

(16 ஆம் பக்கம் பார்க்க)

### பொதுக்கட்டமைப்பு விவகாரம்:

## அரசின் நிலையை ஜனாதிபதி இன்று தூதர்களுக்கு விளக்கம்

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தும் அரசின் உத்தேசத் திட்டம் தொடர்பில் கொழும்பில் இருக்கும் அனைத்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் விளக்கமளிப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

இதன்படி, இன்று மாலை ஐந்து மணிக்கு இந்தக்கலந்துரையாடலில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி மாளிகைக்கு வருமாறு ஜனாதிபதி செயலகம் அனைத்துத் தூதுவர்களுக்கும் அறிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் நிரூபமாராவ், அமெரிக்கத் தூதுவர் ஜெவ்ரி. ஜெ. லன்ஸ்டெட், கனேடியத் தூதுவர் வலரி ரேமண்ட், ஜப்பானியத் தூதுவர் அக்கியோ சூடா, நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் உட்பட அனைத்துத் தூதுவர்களுக்கும் இந்த சந்திப்பிற்கான அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாக அறிய வருகின்றது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தம் விரைவில் என்கிறார் அமைச்சர் கதிர்காமர்

கொழும்பு,மே10

ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற வடக்கு - கிழக்குப் பகுதியில் நிவாரணம், மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கான பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான ஒப்பந்தம் மிக விரைவில் கைச்சாத்தாகும் என வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜெனிவாவில் வைத்துத் தெரிவித்துள்ளார்.

அறுபதுக்கும் அதிகமான அரசசார்பற்ற உதவி வழங்கும் அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்திக்க அங்கு சென்றிருந்த சமயமே அமைச்சர் கதிர்காமர் மேற்கண்டவாறு தெரிவித்தரர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்திருப்பதாவது:-

ஆழிப்பேரலைக்குப் பின்னரான உதவிகள் வழங்குவதற்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. அவை சர்வதேச உதவி நிறுவனங்கள் ஊடாகவே வழங்கப்படவுள்ளன. இவற்றுள் மிகவும் சொற்ப அளவே, இலங்கைக்கு வந்து சேர்ந்துள்ளது; பெருமளவு உதவிகள் இனித்தான் வர வேண்டும்.

இலங்கையில் ஆழிப்பேரலைக்குப் பின்னரான மீள்கட்டுமானத்திற்கு மொத்தமாக இரு நூறுகோடி அமெரிக்க டொலர்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இதுவரை ஆக பத்துக்கோடி அமெரிக்க டொலர்களே இலங்கையில் வேலைத்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு உருவாவது தாமதிக்கும்

கொழும்பு,மே10

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்காக அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது மேலும் தாமதமாகும் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் கூட்டம் எதிர்வரும் 16,17 ஆம் திகதிகளில் (அடுத்த திங்கள், செவ்வாய்க்கிழமைகளில்) கண்டியில் நடைபெறவிருக்கின்றது.

அக்கூட்டத்துக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த அரசு முயலக்கூடும் என்றும் -

அப்படி பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்டதை ஒரு சாதகமான அம்சமாகக் காட்டி உதவும் நாடுகளிடம் அதிக நிதியுதவி பெறுவதே அரசின் திட்டம் என்றும் - கருத்து வெளியிடப்பட்டு வந்தது.

ஆனால், கண்டிக் கூட்டத்துக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான சாத்தியங்கள் தற்போது அருகி வருவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுக்கட்டமைப்பை விரைந்து ஏற்படுத்தும்படி இலங்கை அரசுக்குச் சர்வதேச சமூகம் அழுத்தம் தரக்கூடாது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அண்மையில் வெளிநாடு ஒன்றில் நடைபெற்ற வைபவம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே கல்விச்சுடர்

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இலவச இணைப்பிதழ் இன்றைய உதயனுடன் வெளியாகின்றது. உங்கள் முகவரிடம் தவறாமல் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## அரியாலை விபத்தில் வயோதிபர் மரணம்

யாழ்ப்பாணம்,மே10

அரியாலை, மாம்பழம் சந்தியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பாதசாரி ஒருவர் உயிரிழந்தார்.

யாழ். அடைக்கலமாதா வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை சந்திரசேகரம் (வயது 59) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவருக்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது என்றும் -

எனினும், சிகிச்சை பலனளிக்காத நிலையில் சிலமணி நேரத்தில் அவர் உயிரிழந்தார் என்றும்- வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

சடலம் பிரேத பரிசோதனை, மரண விசாரணைகளின் நிமித்தம் வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(எ-13-15)

# கச்சாயில் கோஷ்டி மோதல்கள் தொடர்வதால் இன்னும் பதற்றம்

கொடிகாமம்,மே10

கச்சாய்ப் பகுதியில் கடந்த சிலநாள்களாக நிலவி வரும் பதற்றநிலை காரணமாக அந்தப் பிரதேச மக்கள் சுதந்திரமாக நடமாடமுடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

மாலையானதும் வீதிகளில் நடமாடுவதற்கு இந்தப் பிரதேச மக்கள் அஞ்சுகின்ற நிலைமை காணப்படுகின்றது.

அண்மைக் காலத்தில் இந்தப் பகுதியில் உருவாகிய கோஷ்டி மோதல்கள் ஏற்படுத்திய பகைமை காரணமாக இப்போது ஆங்காங்கே ஆள்கள் தாக்கப்படுவதும் வாள்வெட்டுச் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது.

கடந்த சித்திரைப் புத்தாண்டுத் தினத்தன்று கச்சாய் கண்ணகை அம்மன் ஆலய முன்றிலில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் பெரும் மோதலாக மாறியது. இந்தச் சம்பவம் இப்போதும் அங்கு இரு சாரார்களுக்கும் இடையிலான மோதலாகத் தொடர்ந்துகொண்டிருக்கிறது.

மோதலில் ஈடுபட்டவர்கள் எனக்கூறப்படும் சிலர் கலாசாரத்தைப் பேணும் குழுவினரால் இனங்காணப்பட்டு பின்னர் ஊர்ப்பெரியார்களின் தலையீட்டால் விடுவிக்கப்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

இதன்பின்பு சிலநாள்கள் நிலைமை தணிந்திருந்தது. பின்னர் கடந்த வெள்ளிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. இதனால் பிரதேச மக்கள் மத்தியில் பீதியும் பதற்றமுமான நிலைமை தோன்றியுள்ளது.

கச்சாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக மணல் கடத்தப்படும் சம்பவங்களுடன் தொடர்புடையவர்களுக்கும் இந்த மோதல்களுக்கும் தொடர்பிருப்பதாக ஒரு தகவல் தெரிவித்தது.

இந்த மோதல்களை முடிவுக்குக் கொண்டு வர விரைந்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என அந்தப்பகுதி வாசிகள் வேண்டுகின்றனர்.

இதற்கிடையில்-

நேற்றுமாலை 3 மினிபஸ்களில் வந்த சுமார் 15 பேர் அடங்கிய இளைஞர் குழு ஒன்று கச்சாய்ப் பகுதியில் உள்ள மூன்று வீடுகளைக் கைக்குண்டு வீசித் தாக்கி அழித்தது என்றும்-

இதனையறிந்து அந்த இடத்திற்கு விரைந்த கொடிகாமம் பொலீஸார் மினிபஸ் ஒன்றைக் கைப்பற்றியதுடன், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனக் கருதப்படும் 10 இளைஞர்களைக் கைதுசெய்து தம்முடன் அழைத்துச் சென்றனர் என்றும் -

நேற்றுமுன்னிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன. (ஐ-எ-74)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே10

வடக்கு - கிழக்கு மாகாண ஒப்பந்த ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் முக்கிய கலந்துரையாடல் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களின் நிரந்தர நியமனம் தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்தில் பணிபுரியும் அனைத்து ஒப்பந்த ஆங்கில ஆசிரியர்களையும் இதில் கலந்துகொண்டு தமது விவரங்களைப் பதிவுசெய்யுமாறு வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.ஞானாகரன் கேட்டுள்ளார். (3-204)

## விவசாயக்குழுக் கூட்டம்

வலிதென்மேற்கு,மே10

வலிதென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலகத்தில் பிரதேச விவசாயக் குழுக்கூட்டம் எதிர்வரும் 12 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் பற்றிய அறிவித்தல் கடிதம் இப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சகல விவசாயிகள் சம்மேளனங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (3-135)

# எரிபொருள் நிரப்பிய கையோடு மோட்டார் சைக்கிள் எரிந்தது!

### மருதனார்மடத்தில் சம்பவம்

அரியாலை,மே10

மோட்டார் சைக்கிள் ஒன்று எரிபொருள் நிரப்பப்பட்ட சிறிதுநேரத்தில் தீப்பற்றி எரிந்தது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மருதனார்மடம் சந்திக்குச் சமீபமாகவுள்ள எரிபொருள் நிரப்புநிலையத்தில் இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளுக்கு எரிபொருள் நிரப்பிவிட்டு, அதனை 'ஸ்ராட்' செய்தபோதே திடீரெனத் தீப்பற்றியது எனக் கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிள் தீயில் எரிந்துகொண்டிருந்த போதும் அதனை அணைப்பதற்கான வசதிகள் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-17)







மட்டக்களப்பு சந்திவெளியில் பொதுமக்கள் நேற்று எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடுவதையும் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதையும் சம்பவ இடத்தில் மட்டு. எம்.பிக்கள் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

### ஆழிப்பேரலையினால் சேதமடைந்த

# வடக்கு - கிழக்கில் 15 ஆயிரம் வீடுகள் உலகவங்கி உதவியுடன் மீளமைப்பு

திருகோணமலை,மே10

வடக்கு - கிழக்கில் ஆழிப்பேரலையால் சேதமடைந்த 15 ஆயிரத்து 984 வீடுகள் உலக வங்கியின் வீடமைப்பு மீள்நிர்மாணத் திட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கின்றன.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட 31 ஆயிரம் வீடுகளை மீள்கட்டுமானம் செய்யும் இந்தத் திட்டத்தின்கீழ், ஆழிப்பேரலையால் சேதமடைந்த வீடுகளும் உள்வாங்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டம்குறித்து விடுக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த வீடுகளின் ஒரு தொகுதியை மீள நிர்மாணிக்கும் பணியினை வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் மேற்கொள்ளவுள்ளது.

இதற்கான அங்கீகாரத்தினை நகர அபிவிருத்தி மற்றும் நீர் வழங்கல் அமைச்சும், தேசத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியும் வழங்கியுள்ளன. வடக்கு - கிழக்கு மாகாணத்தின் குறிப்பிட்ட மாவட்டங்களிலுள்ள பிரதேசச் செயலகப் பிரிவுகளில் சுனாமிப்பேரலையால் பாதிப்படைந்தும் கடலோரப் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே உள்ளதுமான 18 ஆயிரத்து 984 வீடுகள் இத்திட்டத்தின்மூலம் பயனாளிகளின் பங்களிப்புடன் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இதன் அடிப்படையில், அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, ஆலயடிவேம்பு, நிந்தவூர் ஆகிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீடுகளும் -

மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்முனை தெற்கு, ஏறாவூர், மண்முனைப்பற்று, கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீடுகளும் -

திருகோணமலை மாவட்டத்தில் மூதூர், கிண்ணியா, திருகோணமலை நகரமும் சூழலும் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வீடுகளும் -

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாரிரைம்பற்று பிரதேச செயலகப்பிரிவிலுள்ள வீடுகளும் -

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணிப் பிரதேச செயலகப்பிரிவின் விடுவிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள வீடுகளும் - இந்தத் திட்டத்தின் கீழ் மீள்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

தேசத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கான செயலணியின் வழிகாட்டலின் கீழ் மாவட்ட அரச அதிபர்களின் சிபார்சின் பேரில் இந்த வீடுகள் மீள்நிர்மாணம் செய்வதற்கு வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத்திட்டம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. மேற்குறிப்பிட்ட மாவட்டங்களில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 610 வீடுகளை 2005 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் மீள் நிர்மாணம் செய்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிப்படைந்த 31 ஆயிரம் வீடுகளை மீள் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக, சுனாமிப் பேரலையால் பாதிப்படைந்த வீடுகளின் ஒருதொகுதியை மீள் நிர்மாணிக்கும் திட்டமும் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும் - என்றுள்ளது. (3)

# மறியலில் ஈடுபட்ட மக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகின. சந்திவெளி, முறக்கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான பொதுமக்களும், பாடசாலை மாணவர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதியை மறித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பாதையூடான போக்குவரத்துத் தடைப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுமக்களுடன் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர். அவர்களின் அழைப்பின் பேரில் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் அங்கு பிரசன்னமாகி இருந்தனர்.

அங்கு வந்த படை அதிகாரிகள் போக்குவரத்துக்குத் தடையாக இருப்பதால் மக்களைக் கலைந்து போகுமாறு கேட்டனர். அதற்குப் பதிலளித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களின் போக்குவரத்துக்குத் தடையாக இந்த முகாம் அமைக்கப்பட்டிருக்கிறது. எனவே, அதனை உடனடியாக அகற்றவேண்டும். அதற்காகவே மக்கள் அகிம்சை வழியில் போராடி வருகின்றனர். அவர்களைப் படையினர் அச்சுறுத்துவது முறையல்ல - என்று கூறினர்.

இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே கொம்மாந்துறையிலிருந்து வந்த இராணுவ அணியொன்று பொதுமக்களைத் தாக்கி விரட்ட ஆரம்பித்தது. இதனைத் தடுக்கக் கோரிய நாடாளுமன்ற உறுப்பினர்களை "உங்களை முதலில் சுட வேண்டும்" - என்று படையினர் மிரட்டினர் என்று ஜெயானந்தமூர்த்தி எம்.பி. உதயனுக்குக் கூறினார்.

இராணுவத்தினரின் தாக்குதலால் சிதறியோடிய பொதுமக்கள், எம்.பிக்கள் நின்ற பக்கமாக வந்தனர். தொடர்ந்தும் அவர்களை இராணுவத்தினர் விரட்டி விரட்டித் தாக்கியதால் ஆத்திரமுற்ற மக்கள், படையினரை நோக்கி கல் வீச்சை மேற்கொண்டனர். பதிலுக்குப் படையினர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

அப்போது அங்கு நின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களான தங்கேஸ்வரி, ஜெயானந்தமூர்த்தி, அரியநேந்திரன், கனகசபை ஆகியோரும் கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும் நிலத்தில் கீழே வீழ்ந்து படுத்துத் தப்பிக்கொண்டனர்.

கதிரவெளியைச் சேர்ந்த 64 வயதான யுவனப்பு கந்தசாமி என்ற முதியவர் பரிதாபமாக உயிரிழந்தார். மாணவர்கள் 5 பேர் உட்பட 15 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களில் இருவர் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏனையோர் வாழைச்சேனை, ஏறாவூர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏறாவூர் செய்தியாளரான நாஸர் என்பவரும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்தார்.

சந்திவெளி வைத்தியசாலைக்கு முன்பாகச் சுமார் ஒரு மாத காலத்திற்கு முன்னர் சம்பந்தப்பட்ட மினி இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. வீதியில் வேகத்தடைகள் ஏற்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இராணுவத்தினருடன் பொலீஸாரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வீதிமறியல் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் இராணுவத்தினர் மீது கற்களை வீசியும், சோதனைச் சாவடிகளை சேதப்படுத்தியும் இராணுவ முகாமுக்குள் நுழைய முற்பட்ட போதே தாம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டதாக இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்தார்.

எனினும், அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் மீதே இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர். இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளின் தலையீட்டையடுத்து நேற்று நண்பகல் 12.15 மணியளவில் ஆர்ப்பாட்டம் இடை நிறுத்தப்பட்டது. நிலைமைகள் ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் வந்தன. எனினும், பதற்றம் தொடர்கிறது.

இந்தச் சம்பவம் குறித்து இராணுவத் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சந்திவெளி வீதித்தடைப் பகுதியில் நேற்றுக் காலை திடீரெனக்கூடிய - விடுதலைப் புலிகளால் தூண்டப்பட்ட - 400 முதல் 500 பேர் வரையிலானோர் வன்முறையில் இறங்கியதால் பொலீஸார் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ள வேண்டியேற்பட்டது.

காலை 9 மணிக்குத் தடைநிலையத்தைச் சூழ்ந்துகொண்ட அவர்கள், அதனை அகற்றுமாறுகோரி வாழைச்சேனை - மட்டக்களப்பு வீதியை மறித்து நின்றனர்.

பொலீஸாரும், கண்காணிப்புக்குழு உறுப்பினர்களும், தமிழ்க்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவரும் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது குறித்துக் கலந்துரையாடிக் கொண்டிருந்தனர். அப்போது திடீரென ஆர்ப்பாட்டக்காரர்கள் வன்முறையில் இறங்கினர். இராணுவத்தினர் மீதும், பொலீஸார் மீதும் கற்களை வீசினர்.

பதற்றம் அதிகரித்ததனால் பொலீஸார் துப்பாக்கிச் சூடு நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டனர். பாதுகாப்புக்காக வான்நேர்க்கிச் சுடுமாறு அவர்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கல் எறியால் மூன்று பொலீஸாரும், ஐந்து இராணுவத்தினரும் காயமடைந்தனர்.

இதேவேளை, ஆண் ஒருவரின் சடலம் அப்பகுதியில் காணப்பட்டது. இந்த சம்பவத்தில் உயிரிழந்தவருடையதாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

பொலீஸாரும் கண்காணிப்புக் குழுவினரும் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்தி வருகின்றனர் - என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3-13)

# அமிர்தசரஸ் - லாகூர் பஸ் போக்குவரத்து: இஸ்லாமாபாத்தில் இன்று பேச்சுவார்த்தை

இஸ்லாமாபாத்,மே10

இந்திய வாகா எல்லைப்புற வழியாக பஞ்சாப் மாநிலத்தில் உள்ள அமிர்தசரஸ் நகருக்கும் பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகருக்கும் இடையே புதிய பஸ் போக்குவரத்து தொடங்குவது பற்றி இன்று இந்திய பாகிஸ்தான் நாடுகளிடையே பேச்சு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக இந்திய போக்குவரத்துப் பிரதிநிதிகளைச் சேர்ந்த உயர்மட்டக் குழு ஒன்று நேற்று பாகிஸ்தானில் பேச்சு நடத்தியது.

இந்தியா - பாகிஸ்தான் நாடுகளிடையே மோதல் போக்கு குறைந்து தற்போது பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேச்சு சுமுகமாக நடைபெற்று வருகிறது. பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் தன்னுடைய போக்கை மாற்றி சற்று இறங்கி வந்து இப்போது இந்தியாவுடன் பல பிரச்சினைகள் குறித்துப் பேச்சு நடத்தி வருகிறார். சில வாரங்களுக்கு முன் டில்லி சென்ற அவர், பிரதமர் மன்மோகன் சிங்குடன் பேச்சு நடத்தி பின்னர் தான் புதிய மனதுடன் நாடு சென்றதாக அவர் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருக்கும்போதே அப்போதைய பிரதமர் வாஜ்பாயுடன் முஷாரப் பேச்சு நடத்தினார். ஆக்ராவில் நடந்த அந்த பேச்சுத் தோல்வியடைந்தாலும் கூட டில்லி - லாகூர் இடையே பஸ் போக்குவரத்து மட்டும் தொடங்கப்பட்டது. அப்போது போடப்பட்ட அந்தப் பிள்ளையார் சுழி இன்றைக்கும் பல நல்ல காரியங்களுக்கு வழி வகுத்துக்கொண்டிருக்கிறது என்றே சொல்லாம். சமீபத்தில் ஸ்ரீநகருக்கும், முஷாபராபாத்திற்கும் இடையே பஸ்போக்குவரத்து தொடங்கப்பட்டது. தீவிரவாதிகளின் மிரட்டலையும் மீறி இந்த பஸ் போக்குவரத்து தற்போது வெற்றிகரமாக நடைபெற்றுவருகிறது.

இந்த நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப் ஆகியோர் டில்லியில் வெளியிட்ட கூட்டறிக்கையில் அமிர்தசரஸ் - லாகூர் இடையேயான பஸ் போக்குவரத்துப் பற்றியும் குறிப்பிட்டு இருந்தார்கள். அமிர்தசரஸிற்கும் லாகூருக்கும் இடையே மொத்தம் 56 கி.மீ. தூரம்தான் உள்ளது. இந்தத் தூரத்திற்கான பஸ் போக்குவரத்தைத் தொடங்குவது பற்றி இன்று இஸ்லாமாபாத்தில் பேச்சு ஆரம்பித்துள்ளது. இந்தப் பேச்சுக்காக இந்திய போக்குவரத்து பிரதிநிதி குழுவொன்று இஸ்லாமாபாத் சென்றுள்ளது. இந்தக் குழுவினர் நாளை பேச்சு நடத்துகிறார்கள். இந்தப் பஸ் போக்குவரத்து தொடங்கப்பட்டால் அது மூன்றாவது பஸ் போக்குவரத்தாக இருக்கும். ஏற்கனவே, டில்லி - லாகூர் இடையேயும் ஸ்ரீநகர் - முஷாபராபாத் இடையேயும் பஸ்கள் ஓடுகின்றன. இந்த முயற்சி வெற்றிபெற்றால் அமிர்தசரஸ் - லாகூர் பஸ் இந்தியா - பாகிஸ்தான் இடையே ஓடும் மூன்றாவது பஸ் போக்குவரத்தாக அமையும்.

ஏற்கனவே, இரு நாடுகளிடையே விமானப் போக்குவரத்து ரயில் போக்குவரத்து ஆகியவை நடந்துகொண்டிருக்கின்றன. பாகிஸ்தானில் உள்ள லாகூருக்கும் இந்தியாவிலுள்ள அத்தாரி என்ற இடத்திற்கும் இடையே ரயில் ஓடிக்கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை -

பஸ் போக்குவரத்து பேச்சு நடக்கும் அதே வேளையில் இன்று இந்திய கடலோர காவல் படை அதிகாரிகளும் பாகிஸ்தான் கடலோரப் காவல்படை அதிகாரிகளும் இஸ்லாமாபாத்தில் பேச்சு நடத்துகின்றனர்.

பஸ் போக்குவரத்து பேச்சு நடக்கும் அதே வேளையில் இன்று இந்திய கடலோர காவல் படை அதிகாரிகளும் பாகிஸ்தான் கடலோர காவல்படை அதிகாரிகளும் இஸ்லாமாபாத்தில் பேச்சு நடத்துகின்றனர்.

பாதுகாப்பு அம்சங்கள், மீனவர் பிரச்சினை குறித்து இவர்கள் பேச்சு நடத்துகின்றனர். பாகிஸ்தான் அரசு இந்திய மீனவர்களை அவ்வப்போது கைதுசெய்து வருகிறது. அதேபோல் குஜராத் கடலோரப் பகுதிகளில் அத்துமீறி மன் பிடிக்கும் பாக். மீனவர்களும் அவ்வப்போது கைதுசெய்யப்படுகின்றார்கள். இந்தப் பிரச்சினை குறித்தும் இந்திய - பாக். நாடுகள் பேச்சு நடத்தவுள்ளன. மேலும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் இருநாட்டு அதிகாரிகள் இந்த வாரம் பேச்சில் ஈடுபடுகிறார்கள். இதன் மூலம் இரு தரப்பு உறவு வெகுவிரைவில் சீரடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (க-8)

# முக்கிய தீவிரவாதி ஈராக்கில் கைது!

பக்தாத்,மே10

ஈராக்கில் தொடர்ச்சியாக கார்க்குண்டுத் தாக்குதல்களை நடத்தி வந்த அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் ஈராக்கிய கிளையின் பிரதான உறுப்பினர் ஒருவரை படையினர் கைது செய்துள்ளனர் என பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் பக்தாத்திற்கு அருகிலுள்ள வீடொன்றினுள் பதுங்கியிருந்தவேளை அமெரிக்கப் படையினரும் உள்ளூர் படையினரும் சுற்றிவளைத்து அவரைக் கைதுசெய்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமர்-அல்-சுபாய்தி எனப்படும் அவர் அல்கெய்டா தீவிரவாத அமைப்பின் ஈராக் கிளைத் தலைவராக அபு - முஸாப் அல் - சர்கவிக்கு அடுத்த நிலையில் இருப்பவர் என்றும் -

ஈராக்கில் நடக்கும் கார்க்குண்டுத் தாக்குதல்களைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதும் இவரே என்றும் -

இவர் மறைந்திருந்த வீட்டில் இருந்து ஏராளமான வெடிகுண்டுகள், ஆயுதங்கள் என்பனவையும் கைப்பற்றப்பட்டன என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

ஈராக்கில் தினந்தோறும் நடைபெறும் கார்க்குண்டுத் தாக்குதல்களில் பல உயிர்கள் பலியாகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

# இரண்டாம் உலகப் போரின் 60ஆம் ஆண்டு நிறைவு விழா வைபவங்கள் மொஸ்கோவில்

## 56 நாடுகளின் தலைவர்கள் பங்களிப்பு

மொஸ்கோ,மே10

இரண்டாம் உலகப் போர் முடிவடைந்து அறுபது ஆண்டுகள் நிறைவு வைபவம் நேற்று மொஸ்கோவில் நடைபெற்றது. அமெரிக்கா, பிரான்ஸ், இந்தியா உட்பட 56 உலக நாடுகளின் தலைவர்கள் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர்.

உலகின் பல நாடுகளின் தலைவர்கள் மொஸ்கோவில் கூடியிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் செச்சினியத் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த எத்தனிக்கலாம் என்ற காரணத்தினால் ரஷ்ய அரசு இதுவரை இல்லாத அளவுக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இரண்டாம் உலகப் போரின்போது உயிரிழந்த படையினருக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அணிவகுப்புகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து ரஷ்ய படையினரின் சதுக்கத்தில் மலர்வளயம் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் உலகத் தலைவர்கள் அனைவருக்கும் மொஸ்கோ கிரம்ளின் மாளிகையில் விருந்துபசாரம் நடைபெற்றது.

இவ்விழாவிற்காக மொஸ்கோ நகரின் முக்கியசாலைகள் அனைத்தும் பொலீஸாரால் தடைசெய்யப்பட்டன. 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலீஸாரும் அதிரடிப்படையினரும் குவிக்கப்பட்டுள்ளனர். உலகத் தலைவர்கள் தங்கியுள்ள ஹோட்டல்களுக்கு பல சுற்றுப் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தன.

மொஸ்கோ நகர வீதிகளில் ஞாயிற்றுக் கிழமை முதலே மக்கள் நடமாட்டம் குறைந்து காணப்பட்டன. வீதிகளில் ஒரு சில வாகனங்கள் மட்டுமே காணக்கூடியதாக இருந்தது. பெரும்பாலும் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் வாகனங்கள் மட்டுமே வீதிகளில் சென்றன.

மொஸ்கோ நகரில் விமானங்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டிருந்தது. உலகத் தலைவர்களின் விமானங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது சுமார் 2 கோடியே 70 லட்சம் சோவியத் படையினர் உட்பட 4 கோடிக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர்.

ஹிட்லரின் நாசிப் படையினர் 1945 ஆம் ஆண்டு மே மாதம் 8ஆம் திகதி சோவியத் படையினரிடம் சரணடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (க-8)

உலக அரங்கில்

காஷ்மீர் எல்லையில்

# பனிப்பாறைகள் உருகியமையால் தீவிரவாதிகள் ஊடுருவும் அபாயம்

ஸ்ரீநகர்,மே10

காஷ்மீர் எல்லையில் பனிப்பாறைகள் உருகியதால் பாதைகள் திறந்துள்ளன. இந்தப் பாதைகளினூடாக இந்தியாவுக்கு ஊடுருவ 2 ஆயிரத்து 500 தீவிரவாதிகள் தயாராக உள்ளனர் என இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைப் புலனாய்வுத் தலைவர் தெரிவித்தார்.

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படைப் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் கே.சீனிவாசன் தொடர்ந்து கூறியதாவது:-

பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவும் வழிகள் இதுவரை பனியால் மூடப்பட்டு இருந்தன. இப்போது கோடை காலம் ஆரம்பித்துள்ளதனால் பனி உருகி பெரும்பாலான பாதைகள் தீவிரவாதிகளுக்கு வசதியாகத் திறந்துள்ளன.

எல்லைக்கு அப்பால் பாகிஸ்தான் பகுதியில் 2ஆயிரத்து 500 தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர்களில் பாகிஸ்தானியர் ஆக்கிரமிப்பு காஷ்மீரைச் சேர்ந்தவர்கள் பாகிஸ்தானில் வசிக்கும் காஷ்மீர் பிரஜைகள் ஆகியோர் உள்ளனர்.

பனி உருகிப் பாதைகள் திறந்தால் அவர்களில் 400 பேர் முதல் கட்டமாக இந்தியாவுக்குள் ஊடுருவ எல்லையில் தயாராக உள்ளனர். அவர்களைத் தொடர்ந்து மற்றத் தீவிரவாதிகளும் அணி அணியாக அனுப்பிவைக்கப்படுவார்கள்.

அவர்கள் ஊடுருவலைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படையும் இராணுவமும் தயார் நிலையில் உள்ளன.

பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருந்ததால் பாரமுல்லா, குப்வாரா, பூஞ்ச் பகுதியில் 10 ஊடுருவல் முயற்சிகள் இதுவரை முறியக்கடிப்பட்டன. ஊடுருவிய 36 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களிடம் இருந்து ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன என்று அவர் கூறினார்.

இதேவேளை -

காஷ்மீர் மாநிலத்தின் குளிர்கால தலைநகராக ஜம்மு நகரும் கோடைக்கால தலைநகராக ஸ்ரீநகரும் உள்ளது. தற்போது கோடை தொடங்கிவிட்டதால் தலைநகர் ஸ்ரீ நகருக்கு மாற்றப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-8)

# ஐ.நா. பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளின் 'வீட்டோ' அதிகாரம் ரத்துச் செய்யவேண்டும்

மொஸ்கோ, மே 10

ஐ.நா.பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து நாடுகளுக்கும் 'வீட்டோ' அதிகாரத்தை ரத்துசெய்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியது என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் ரஷ்யா சென்ற அதிகாரிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையில் 'வீட்டோ' அதிகாரம் வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தவில்லை.

அனைத்து நாடுகளுமே சமமாகக் கருதப்படவேண்டும் என்ற வகையில் 'வீட்டோ' அதிகாரம் யாருக்கும் இல்லாதவாறு ரத்துச் செய்யப்பட்டால் மகிழ்ச்சி.

ஐ.நா. சபையின் சீர்திருத்தங்கள் அனைத்தும் மிகவும் கடினமானவை. உறுப்பினர் பதவி என்பதை ஜனநாயகமயமாக்க வேண்டும் - இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

# எரிசக்தி, தகவல் தொழில்நுட்பத் துறைகளில் இந்தியா-ரஷ்யா மேலும் வலுப்படுத்த முயற்சி

மொஸ்கோ,மே10

ரஷ்யா சென்றுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நேற்று அந்நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் புடினைச் சந்தித்து முக்கிய பேச்சு நடத்தினார் என இந்தியத் தூதுவர் கன்வல் சிபல் தெரிவித்தார்.

இரண்டாவது உலகப் போரின் 60 ஆவது ஆண்டு வெற்றிவிழாவில் உலகத் தலைவர்களுடன் கலந்துகொள்ளவதற்காக பிரதமர் மன்மோகன் சிங் ஞாயிற்றுக் கிழமை மாலை மொஸ்கோ சென்றார். வைபங்களில் கலந்துகொண்ட அவர் நேற்று ரஷ்ய ஜனாதிபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார். அவர்களது பேச்சு குறித்து கன்வல் பத்திரிகையாளர்களுக்கு தெரிவித்ததாவது:-

56 நாடுகளிலிருந்து உலகத் தலைவர்கள் இநத விழாவில் பங்கேற்கும் நிலையிலும் ஒரு சில நாடுகளின் தலைவர்களையே ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனிப்பட்ட முறையில் சந்தித்துப் பேசினார். இதன்மூலம் இந்தியாவுக்கு ரஷ்யா அளிக்கும் முக்கியத்துவத்தைப் புரிந்துகொள்ளலாம்.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் புடின் இந்தியா வந்தபோது இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பல அம்சங்களில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

எரிசக்தித் துறையைப் பொறுத்தவரை ரஷ்யாவில் எண்ணெய் மற்றும் எரிவாயு துரப்பணப் பணியில் பெருமளவு முதலீடு செய்வதில் இந்தியா ஆர்வமாகவுள்ளது. ரஷ்யாவும் இந்தியாவின் முக்கியவத்துவதை உணர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு புடின் பெங்களூர் சென்று இன்.'.பொலீஸ் நிறுவனத்தின் செயற்பாடுகளைப் பார்வையிட்டார். நாடு திரும்பிய பிறகு பலமுறை இந்தியாவின் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்துப் பேசியுள்ளார். இதில் இந்தியா பின்பற்றும் கொள்கைகளை ரஷ்யாவும் பின்பற்றவேண்டும் என்று கூறியுள்ளார்.

இத்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்த கூட்டு நடவடிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் கூட்டம் விரைவில் நடைபெறும். இந்திய தகவல் தொழில்நுட்பமுறை அமைச்சர் ரஷ்யா வரும்போது இரு நாடுகளுக்கிடையே இத்துறையில் புதிய உடன்பாடு காணப்படும்.

இந்திய வர்த்தகங்களுக்கு ரஷ்யா விஸா வழங்குவதில் தேவையற்ற தாமதம் ஏற்படுவதால் இத்துறையில் கசப்புணர்வு உள்ளது. அதைச் சரிப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பல அம்சங்கள், மன்மோகன் சிங் - புடின் பேச்சுக்களில் இடம்பெறும். இந்தியா - பாகிஸ்தான் உறவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், சீனா மற்றும் ஜப்பான் பிரதமர்கள் சமீபத்தில் இந்தியாவில் மேற்கொண்ட சுற்றுப்பயணம் ஆகிய அம்சங்கள் குறித்தும் இதில் விவாதிக்கப்படும் என்று கன்வல் சிபல் கூறினார்.

பிரதமர் மன்மோகன் சிங் ஞாயிற்றுக்கிழமை மாலை தஜிகிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் அதிபர்களைச் சந்தித்துப் பேசினார். (க-8)




# பட்டதாரிப் பயிலுநர்களுக்கு தனிச் சிங்களத்தில் கடிதங்கள்!

## மத்திய அரசின் நடவடிக்கையால் விசனம்

வலி.வடக்கு,மே10

பட்டதாரிப் பயிலுநர்களுக்கு மத்திய அரசில் இருந்து தனிச் சிங்களத்தில் கடிதங்கள் வருகின்றன. அதனால் கடிதங்களில் உள்ளதை அறிவதில் பட்டதாரிப் பயிலுநர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

அண்மைக் காலங்களில் பட்டதாரிப் பயிலுநர்களிடம் பல்வேறு அமைச்சுகளும் வேலைவாய்ப்பு விண்ணப்பங்களைக் கோரியிருந்தன. அதற்கு அந்த அமைச்சுகளிடமிருந்து அனுப்பிவைக்கப்படுகின்ற கடிதங்களே தனிச் சிங்களத்திலேயே வருகின்றன.

இதனால், அவர்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கிவருகின்றனர். (த-86)

## மானிப்பாய் கூட்டுறவுச் சங்க கட்டடத்துக்கு நிதி

வலி.தென்மேற்கு,மே10

யாழ்.அரச செயலக நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சுப் பிரிவு மானிப்பாய் பலநோக்கு கூட்டுறவுச்சங்க புனரமைப்புப்பணிகளை மேற்கொள்வதற்காக 30 இலட்சம் ரூபாவை சங்கத்திற்கு வழங்கியுள்ளது.

இந்த நிதியைக் கொண்டு சங்கத் தலைமை அலுவலகம் உட்பட புதிய கட்டடத் தொகுதி ஒன்றை நிர்மாணிப்பதற்கு சங்கம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக சங்கத் தலைவர் மா.செல்வராசா தெரிவித்தார்.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் அண்மையில் நடப்பட்டது.

இப்புதிய கட்டட நிதிக்கு சங்கத்தில் கடமையாற்றும் பணியாளர்களும் நிதிஉதவி புரிய முன்வந்துள்ளனர் என்று சங்கத்தின் பொது முகாமையாளர் நா.துரைசாமி தெரிவித்தார். (த-135)


## கண்ணீர் அஞ்சலி

எமது விவசாய பீட விவசாய பொருளியல்துறை விரிவுரையாளர்
திரு.க.உமாசங்கர் அவர்களின் அன்புத் தந்தை

**பொன்னுச்சாமி கனகசிங்கம்**

அவர்கள் 07-05-2005 இல் காலமான செய்திகேட்டு மிகவும் வருந்துகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விவசாய பீட மாணவர் ஒன்றியம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-42751)(26-11-18-42)





## வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயப் பொங்கல்

23.05.2005 திங்கட்கிழமை

## வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான நிலம் வழங்குதல்

**மேற்படி ஆலயப் பொங்கல் விழாவின் போது வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கான நிலம் எதிர்வரும் 19.05.2005 வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்கு வழங்கப்படும். குறித்த நேரத்திற்கு வர்த்தகர்கள் நேரில் சமுகமளித்து பணத்தினைச் செலுத்தி தங்களுக்கான நிலத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.**

மு.குகதாசன்
தலைவர்
ஆலய பரிபாலன சபை.

(45174)(42-11-18)



## BEAUTY & HAIR
## Personal Grooming Class

Beauty Center இற்கு செல்லாமலே பெண்கள் தங்களின் சருமகேச அழகுப் பராமரிப்பை தாங்களே மேற்கொள்வதற்கு ஏற்ப வடிவமைக்கப் பட்டபயிற்சி நெறி

1. Hair care - HenaTreatment - இது ஒரு மூலிகைச் சிகிச்சைமுறை பொடுகு, நரைமுடி உருவாவதைத் தடுக்கும். அத்துடன் முடி நுனியில் ஏற்படும் பிளவு, முடி உதிர்தலை கட்டுப்படுத்தும்
2. Pimple herbal facial & Fruit Facial — முகப்பருவை நீக்கும், கட்டுப்படுத்தும் முகத்தை பளபளப்பாக வைத்திருக்க உதவும்
3. Manicure Pedicure & Nail Care — கை, கால்களை அழகாக வைத்திருக்க உதவும்
4. Evening and Day Makeup : Eyebrow Shapping & Waxing உட்பட
5. Hair styles & Blow dry:
6. Body Beautiful, Diet & Figure control
7. Fashion Sense & Saree drapes

பயிற்சி ஆரம்பம்: 28.05.2005 (சனிக்கிழமைகளில் மாத்திரம் 9.30-12.30) (40ர் 5 கிழமைகள் பயிற்சி நடைபெறும்)

இடம்: இல.92, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி (இந்து குருகுலம் அருகில், DCM Tution முன்)

பயிற்சி வழங்குவோர் : Directress of Moon Beauty care and Dance Teacher Mrs.B.Ageelah (Dip in Beauty culture Dip in Dance Visartha in Kathah )

பயிற்சிக் கட்டணம்: 4750/= (பதிவுக் கட்டணம் இல்லை)

மேலதிக விவரங்களுக்கும் பதிவுகளுக்கும்:

**0777-570138**

(45189)(42-11-18)


# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

செம்பியன்பற்று,மே10

வடமராட்சி, புலோலிப் பகுதியில் மீண்டும் வீடுகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இரவுநேர விழிப்புக்குழுக்களை அங்கு மீண்டும் இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென கலாசாரம் பேணும் குழுவிடம் கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

இதேவேளை-

புலோலிப் பகுதியில் இரு வீடுகளில் அண்மையில் திருட முயற்சி செய்தவேளை வீட்டுக்காரர்கள் விழித்து உசாரடைந்தமையால் திருடர்கள் தப்பியோடியமை குறிப்பிடத்தக்கது.(8-36)

# சமய சந்நிதிகளில்

செம்பியன்பற்று,மே10

பருத்தித்துறை சிவன்கோயில் மகாகும்பாபஷேகப் பெருவிழா எதிர்வரும் 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

12 ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறும். (த-36)

★ ★ ★

காரைநகர்,மே10

காரைநகர், கிழவன்காடு ஸ்ரீ கந்தசுவாமி கோயில் மண்டலாபிஷேக பூர்த்தி நிகழ்வும் 1008 சங்காபிஷேகமும் நாளை புதன்கிழமை காலை 8 மணிமுதல் நடைபெறவுள்ளன.

மாலை 7 மணிக்கு திருக்கல்யாண உற்சவம் இடம்பெறும். தொடர்ந்து சுவாமி திருவீதியுலா வரும் நிகழ்வு நடைபெறும்.

கடந்த மாதம் 27, ஆம் திகதி நடைபெற்ற மகாகும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து 15 தினங்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (த-73-204)

★ ★ ★

சங்கானை,மே10

பொன்னாலை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த பெருந்திருவிழா கடந்த 3, ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

இன்று செவ்வாய்க்கிழமை மாலை சப்பரத் திருவிழா நடைபெறும். நாளை புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

மாலை வேளைகளில் இசைக் கச்சேரி நடைபெறும். (த-29-204)

# யாழ்.கல்வி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

அச்சுவேலி, மே10

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான "தமிழ்த்தினப் போட்டிகள்" வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையில் எதிர்வரும் 16 ஆம், 21 ஆம், 22 ஆம் திகதிகளில் நடைபெறும் என யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார். (த-11)

# மக்களுக்கு இடையூறு செய்தவருக்கு அபராதம்!

தென்மராட்சி,மே10

மது போதையில் பொதுமக்களுக்கு இடைஞ்சல் செய்யும் விதத்தில் நடந்து கொண்ட நபர் ஒருவருக்கு சாவகச்சேரி நீதிவான் ஒரு மாதச் சிறைத் தண்டனை விதித்தார்.(த-117)

# இடமாற்றம்

குருநகர்,மே 10

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.கே.பாலசுந்தரம் இம்மாதம் 2 ஆம் திகதி முதல் கிளிநொச்சி பிரதிமாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இந்த இடமாற்றத்தை யாழ் பிரதி மாகாண சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் பணிப்பிற்கிணங்க வழங்கியுள்ளது.

இதேவேளை -

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கத்துக்கு தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சால் இரத்துச் செய்யப்பட்டுள்ளது எனவும் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகம் அறிவித்துள்ளது. (8-51)


## இளைஞர்களுக்கான இலவச பயிற்சி

சர்வதேச வாழும் கலை அறநிறுவனம், இந்து கலாசார அமைச்சின் அனுசரணையுடன் அளிக்கிறது.
18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் 18.05.2005 ஆம் திகதி முதல் 24.05.2005 வரை... 7 நாள்களுக்கு 7.30 மணிமுதல் மாலை 6 மணிவரை ... இலவச உணவுடன்

குறைந்த இடமே உள்ளதால் இலவச அனுமதிச் சீட்டுப் பெற்றுக்கொள்ள உடன் கீழ்க்கண்ட இடங்களில் தொடர்பு கொள்ளவும்.

பதிவு செய்யும் நேரமும் இடமும்
காலை 10 மணிமுதல் மாலை 4 மணிவரை

நாவலர் மணிமண்டபம், (கந்தசுவாமி கோயில் எதிரில்) யாழ்ப்பாணம் ☎ 222 3893

இந்து சமயபேரவை, பலாலி வீதி, கந்தர்மடம், தொ.பே.இல.222 6048

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்

(45182)(21-11-34-38)


# பெண்கள் உயர்தர பாடசாலையில் புதிய மாடிக்கட்டடம் திறப்பு

வலி.தென்மேற்கு, மே10

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையில் எஸ்.டி.சி (Swiss Development and Co-operation) நிறுவனத்தின் நிதி உதவித் திட்டத்தின் கீழ் சுமார் 60 இலட்சம் ரூபா செலவில் புதிதாக நிறுவபபட்ட மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா கடந்த 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி கிருபாசக்தி சிவராசா தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட திருகோணமலையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாணக்கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் சம்பிரதாய முறைப்படி நாடாவை வெட்டிக் கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவில் சுவிஸ் நாட்டின் எஸ்.டி.சி. நிறுவனத்தின் பணிப்பாளர், நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். வடக்கு - கிழக்கு மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், வலிகாமம் கல்விவலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், தென்மராட்சி வலய கல்விப்பணிப்பாளர் திருமதி றெயினா இருதயநாதன், கல்வித்திணைக்கள பொறியியலாளர் எஸ்.சிவபாலன், எஸ்.டி.சி.நிறுவன சிரேஷ்ட வெளிக்கள அலுவலர் பொறியியலாளர் எஸ்.குகானந்தன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு இவ்விழாவில் வாழ்த்துரை வழங்கினர். (த-135)

## பஸ்தரிப்பு நிலையம் விஷமிகளால் நாசம்

வலி.வடக்கு,மே10

ஊரெழுப்பகுதியில் உள்ள பேருந்து தரிப்பு நிலையம் இனந்தெரியாதவர்களினால் நள்ளிரவு நேரம் இரண்டாவது தடவையாக சேதமாக்கப்பட்டுள்ளது.

பலாலி வீதியில் புன்னாலைக்கட்டுவன் சந்திக்கும் ஊரெழு இராணுவ முகாமிற்கும் இடைப்பட்ட பகுதியில் உள்ள பேருந்து தரிப்பிட நிலையமே நேற்றுமுன்தினம் இரண்டாவது தடவையாகவும் சேதமாக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் இந்த நிலையம் சேதமாக்கப்பட்டது. இதனையடுத்து, அந்த பஸ்நிலையம் புனரமைக்கப்பட்டது. தற்போது மீண்டும் அந்தப்பஸ்தரிப்பு நிலையம் விஷமிகளால் சேதமாக்கப்பட்டுள்ளது.


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி சி.மகேந்திரகுமார்,
அவர்களது பாசமிகு தந்தையும், ஆசிரியர்
திரு.வீ.மகேந்திரகுமார் அவர்களது
அன்பு மாமனருமாகிய

**நிலையினார் சின்னையா**

அவர்களின் மறைவையொட்டி மிகுந்த துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/மிருசுவில் அ.த.க. பாடசாலை. மிருசுவில்.
அதிபர், ஆசிரியர்கள்.

(45179)(21-11-38-34)



## D.A.M. வைத்திய சங்க அறிவித்தல்

**D.A.M.** வைத்தியர்களும், பதிவுசெய்யப்பட்ட ஆயுள்வேத வைத்தியர்களும் தனியார் வைத்திய நிலைய உரிமத்தைப் பெற்றுக்கொள்வதற்கான அடிப்படை ஒழுங்குக்கோவையை
222, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணத்திலுள்ள
நடனமுருகன் வைத்திய நிலையத்தில்
13-05-2005 வெள்ளிக்கிழமைக்கு
முன்பு தவறாது பெற்றுக்கொள்ளும்படி வேண்டிக் கொள்ளுகின்றோம்.

Dr.க.நவரத்தினம், தலைவர்.
Dr.க.தங்கத்தாமரைச்செல்வன், செயலாளர்.

(45188)(26-11-38-34)





## வற்றாப்பளைக் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல் உற்சவம்

23.05.2005 திங்கட்கிழமை

மேற்படி பொங்கல் உற்சவத்தின்போது ஒலி, ஒளி சேவைகள் வழங்குபவர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

1. ஒளி வழங்குதல்: 800 மின் குமிழ்கள் வரை (ரியூப்பல்ப்) பொருத்தப்பட வேண்டும். இதனை மொத்தமாகவோ, 200இற்கு குறையாத பகுதிகளாகவோ பொருத்தி ஒளி வழங்குபவர்கள் எதிர்வரும் 15.05.2005 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பித்தவர்கள் 15.05.2005 முற்பகல் 10 மணிக்கு ஆலயத்திற்கு நேரில் வருகைதந்து உறுதிசெய்து கொள்ளவும்.

குறிப்பு:

1. மின்பிறப்பாக்கி எம்மால் வழங்கப்படும்.
2. 15 இற்கு குறையாத ஒலி பெருக்கி வசதி செய்யக் கூடியவர்கள் 15.05.2005 ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆலயத்திற்குச் சமுகந்தரவும்.

மு.குகதாசன்
தலைவர்
ஆலய பரிபாலனசபை.

(45175)(21-18-34)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## வெறும் வாய்வீச்சால் பயன் ஏதும் இல்லை

"அமைதி முயற்சிகள் விடயத்தில் வெறும் வாய்ப் பேச்சில் அர்த்தமில்லை. இனி அவற்றை விடுத்து செயலுக்குப் போவோம்"

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. தமது கூட்டமைப்பு அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி.அமைச்சர்களையும் பக்கத்தில் வைத்துக்கொண்டே இவ்வாறு பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார் அவர்.

இப்பத்தியில் நாம் நீண்டகாலமாகச் சுட்டிக்காட்டி வந்த விடயத்தை இவ்வாறு அவர் ஒப்புக்கொண்டிருக்கிறார். அவ்வளவே.

இரண்டு தசாப்த கால யுத்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குத் தமிழர்களின் உடனடி - அவசர - அவசிய - மனிதாபிமானத் தேவைகளை நிறைவு செய்வதற்கான இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை உருவாக்கும் விடயத்திலாகட்டும் -

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்கு கரையோர மக்களுக்குரிய நிவாரணம் மற்றும் மீள்கட்டுமானப் பணிகளை முன்னெடுப்பதற்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தும் விடயத்திலாகட்டும் -

இலங்கை அரசுத் தலைவி ஜனாதிபதி குமாரதுங்க வெறும் வாய்ப்பந்தல் போடுகின்றார்; செயலில் ஏதும் செய்கிறார் இல்லை என்று இப்பத்தியில் திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டிவந்தோம். அதை ஒப்புக்கொள்வதுபோல "வெறும் வாய்ப் பேச்சில் அர்த்தமில்லை. இனி அவற்றை விடுத்து செயலுக்குப் போவோம்" - என்று கடந்த காலம் குறித்து ஒப்புதல் வாக்கு மூலம் அளித்திருக்கிறார் ஜனாதிபதி.

சரி. பகிரங்கமாக இப்படி அறிவித்து விட்ட ஜனாதிபதி, இனியாவது பேச்சை விடுத்து செயலுக்குப் போவாரா? அதுவும் சந்தேகம்தான்.

'வெறும் வாய்ப்பேச்சை விடுத்து இனி செயலுக்குப் போவோம்.' என்ற ஜனாதிபதியின் கூற்றுக் கூட அந்த 'வெறும் வாய்ப்பேச்சு' வரிசையில் ஒன்றாக அடங்கிவிடும் என்றுதான் எமது பட்டறிவு கூறுகின்றது.

'நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அந்தப் பதவிக்கு வந்து ஓராண்டுக்குள் ஒழிப்பேன்.' - என்று பதினொரு வருடங்களுக்கு முன்னர் வழங்கிய உறுதிமொழியிலிருந்து, இனப்பிரச்சினைக்கு பேச்சு மூலம் விரைந்து தீர்வு என்ற அறிவிப்பு வரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பிரகடனங்கள் எல்லாம் வெறும் வாய்வீச்சு என்பதுதான் இலங்கை மக்களின்அனுபவம்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் கூட இந்தா செய்யப்போகிறேன், அந்தா செய்யப் போகிறேன் என்று வாய்ச் சவடால் அறிவிப்புகளை அவர் வெளியிடுகின்றாரே தவிர, பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் உருப்படியாக ஒரு முன்நகர்வையும் அவர் எடுக்கிறார் இல்லை.

துணிச்சலாக - அரசியல் திடசங்கற்பத்தோடு - விளைவுகளைத் துச்சமாக மதித்து - அரசியல் முடிவுகளை எடுப்பவர் எனத் தம்மைக் காட்டிக் கொள்ளும் விதத்தில் ஜனாதிபதி குமாரதுங்க அறிவிப்புகளை விடுப்பார். அத்தகைய 'தைரியசாலித் தலைவர்' என்ற மனப்படிவத்தை மக்களின் கருத்தில் ஏற்படுத்துபவர் போன்று அவரது பிரகடனங்கள் இருக்கும். ஆனால், செயலில் எல்லாம் புஸ்வாணமாகிவிடும்.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு விடயத்தில் தமது கூட்டமைப்பு அரசின் பங்காளிக்கட்சியான ஜே.வி.பி. மற்றும் ஜே.வி.பியின் தாளத்துக்கு ஆடும் இலங்கை மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் போன்றவை எல்லாவற்றையும் தூக்கி எறிந்து, துணிச்சலோடு காரியம் செய்யப் போகின்றவர் போல ஜனாதிபதி அறிக்கை வெளியிட்டார்.

ஆனால், நடந்தது என்ன?

தொழிற்சங்கங்களுக்கும் ஜே.வி.பிக்கும் ஜனாதிபதியும் அவரது அரசும் அடிபணிய வேண்டியதாயிற்று. இது சம்பந்தமாகத் தாம் நிறைவேற்றிய அமைச்சரவைப் பத்திரம் பற்றிய தீர்மானத்தை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தில் - முன்னைய கூட்ட அறிக்கை வாசிக்கும்போது - அங்கீகரிக்காமல் விடும் நிலைக்கு அவரது அரசு தள்ளப்பட்டுள்ளது. அதாவது, தொழிற்சங்கங்களுக்கு மண்டியிடப் போகாதவர்போல முதல் வாரத்தில் அறிவித்தவர், அடுத்த வாரத்துக்குள் அது விடயத்தில் நசிந்து - விட்டுக்கொடுத்து - அடிபணிந்து - போகின்றவராகி விட்டார்.

அமைதி முயற்சிகள் விடயத்தில் இனி வெறும் வாய்ப் பேச்சில்லை, செயலுக்குப் போவோம் என்ற ஜனாதிபதியின் அறிவிப்புக் கூட அவரது அரசியல் தீர்மானங்கள் போல குப்பைக் கூடைக்குள் போகாது என்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை.

ஆரவார அறிவிப்புகளால் பயன் இல்லை. சொற்களைச் செயலாக்கும் அர்த்தமுள்ள நடவடிக்கைகளே இப்போது அவசியமானவை; அவசரமானவை.

## சுழிபுரம் திருவடிநிலைக் கடற்பரப்பில் மீனவர்கள் மீது கடற்படையினர் கெடுபிடி

### மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே10

சுழிபுரம் திருவடிநிலைக் கடற்பரப்பில் கடற்படையினரின் கெடுபிடித்தனம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுழிபுரம் அலைமகள் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினரே இந்த முறைப்பாட்டினைச் செய்துள்ளனர்.

திருவடிநிலைக் கடற்பரப்பில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் அண்மைக் காலமாக மக்கள் தமது சொந்தக் காணிகளுக்குள் சென்று விறகு எடுப்பதற்குக் கூட அனுமதி மறுத்துவருகின்றதாகவும் அத்துடன் மீனவர்கள் கடலுக்குச் சென்று தமது தொழிலை மேற்கொள்ள முயாதவாறு 'பாஸ்' நடைமுறையிலும் கடுமையான கட்டுப்பாடுகளை கடைப்பிடிப்பதாகவும் இதனால், அப்பகுதி மக்களுக்கும் கடற்படையினருக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறுகல் நிலையினை அடுத்து அப்பகுதி கடற்படைப் பொறுப்பதிகாரி வட்டுக்கோட்டை பொலீஸாரிடம் முறைப்பாட்டினைச் செய்துள்ளதாகவும் -

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வட்டுக்கோட்டை பொலீஸ் நிலையத்துக்கு வருமாறும் பொலீஸார் மீனவர் சங்கத்திடம் கோரியுள்ளனர்.

ஆயினும், தாம் விசாரணைகளுக்கு சமுகமளிக்கமாட்டோம் என அப்பகுதி மீனவர்கள் சங்கத்திடம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை -

இத்தகைய முறுகல் நிலையினையடுத்து கடந்த இருநாள்களாக மீனவர்களை கடலுக்குச் செல்ல கடற்படையினர் அனுமதி மறுத்துவருவதாகவும் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு கொடுத்துள்ள முறைப்பாட்டுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டுக் கடிதத்தின் பிரதி, போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் மேற்படி மீனவர் சங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(8-13)

## இலங்கை ரயில் பாதைகளில் பாதுகாப்பற்ற கடவைகள் 990

கொழும்பு,மே10

இலங்கையிலுள்ள ரயில் பாதைகளில் 990 பாதுகாப்பற்ற ரயில் பாதைக் கடவைகள் உள்ளன.

அவ்வாறான இடங்களில் பாதுகாப்புக் கடவைகளை அமைக்க ஏற்கனவே திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ள போதிலும் அது தொடர்பான நிதிக்கொடுப்பனவுகள் கிடைக்கப்பெறாமையால் அத்திட்டங்களைச் செயற்படுத்த இயலாத நிலை ஏற்பட்டுள்ளதாக ரயில் போக்குவரத்துச் சபையின் தலைவர் எஸ்.எம்.சந்திரதிலக்க தெரிவித்துள்ளதாகக் கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்களப் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் ரயில் - பஸ்வண்டி விபத்து இடம்பெற்ற யாங்கல் மோதற ரயில் பாதைக் கடவையில் பொருத்தப்பட்டுள்ள தானியங்கித் தடை ரயில் ஒன்று 300 மீற்றருக்கு அப்பால் வரும் போதே மணியோசை எழுப்பியவாறு சிவப்பு விளக்குச் சமிக்ஞையோடு தானாகவே மூடிக்கொள்ளும் விதமாக அமைக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறான கடவைத் தடைகளை பாதுகாப்பற்ற ரயில் பாதைக் கடவைகளில் பொருத்துவதற்கு 15 மில்லியன் ரூபாய்கள் வரையில் தேவைப்படுமெனவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(8-206)

## இரு வேறு சம்பளத் திட்டங்களினால் சுகாதார சேவை ஊழியர்கள் கவலை

குருநகர்,மே10

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகம் மற்றும் அதன்கீழ் இயங்கும் வைத்திய நிலையங்களில் சேவை புரியும் இணைந்த சேவை ஊழியர்களுக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள இரு வெவ்வேறான சம்பள அளவுத்திட்டம் காரணமாக அங்கு சேவை புரிந்து வரும் இணைந்த சேவையைச் சேர்ந்த ஊழியர்களுக்கிடையில் சம்பள நிலைகளில் ஏற்றத்தாழ்வு உருவாகியுள்ளது.

ஒரே கடமைகளை ஆற்றி வரும் இவ்விரு முகாமைத்துவ சேவை ஊழியர்களிடையே இந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டுள்ளதால் அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் மிகக் கவலையும் மனவேதனையும் அடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்திலும் இதன்கீழ் இயங்கிவரும் வைத்திய நிறுவனங்களிலும் அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்களும் சுகாதார முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்களும் சேவை புரிந்து வருகிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஏனைய அரச திணைக்களங்களில் மாகாண முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்கள் மட்டுமே சேவை புரிகிறார்கள்.

சுகாதார முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் அரசினால் அமுல்படுத்தப்பட்டுள்ள புதிய சம்பள அளவுத் திட்டத்தில் உள்ள சம்பள முரண்பாடுகள் காரணமாக சுகாதார முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர்களின் சம்பளம் அரச முகாமைத்துவ சேவை ஊழியர்களை விட உயர்வாக உள்ளது எனவும், அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த தரம் I ஊழியர்களின் சம்பளம் சுகாதார முகாமைத்துவ சேவை தரம் II இன் சிரேஷ்ட ஊழியர்களை விடக் குறைவாக உள்ளது எனவும் அலுவலகங்களில் சேவை புரிபவர்கள் தெரிவித்தனர்.

உதாரணமாக அரச முகாமைத்துவ சேவையைச் சேர்ந்த ஊழியர் ஒருவரின் முதல் நியமன அடிப்படை ஆரம்பச் சம்பளம் மாதாந்தம் ரூபா 5,790 ரூபாவாகவும், சுகாதார முகாமைத்துவ சேவை ஊழியரது முதல் நியமன ஆரம்பச் சம்பளம் மாதாந்தம் ரூபா 7435 ரூபாவாகவும் உள்ளதுடன் சாதாரண தொழிலாளி ஒருவரது முதல் நியமன ஆரம்பச் சம்பளம் ரூபா 6,180 ரூபாவாகவும் உள்ளது.

இதன் காரணமாக ஒரே திணைக்களத்தில் கடமைபுரியும் ஒரே வேலையை மேற்கொள்ளும் இவ்விரு சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடையே நிலவி வரும் சம்பள முரண்பாடுகளால் ஊழியர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் சாதாரண தொழிலாளியின் சம்பளத்தை விட எமது சம்பளம் குறைவாக உள்ளதால் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அங்கு கடமைபுரியும் அரச முகாமைத்துவ சேவையைச் சார்ந்த ஊழியர்கள் தெரிவித்தனர்.

(8-51)

## 'கடல் வரைந்த ஓவியம்' ஓவியக் கண்காட்சி

குருநகர்,மே10

யாழ். திருமறைக் கலாமன்ற ஓவியக் கலைவட்டம் நடத்தும் ஆழிப்பேரலை அனர்த்தத்தை வெளிப்படுத்தும் 'கடல் வரைந்த ஓவியம்' என்ற தலைப்பிலான ஓவியக் கண்காட்சி எதிர்வரும் 14ஆம் திகதி சனிக்கிழமை முதல் 21ஆம் திகதி சனிக்கிழமை வரை யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலாமுற்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஓவியக் கண்காட்சி ஏற்கனவே திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, கொழும்பு, மாத்தளை ஆகிய இடங்களில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்குகளில் காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(8-51)

### நாளை

*சித்திரை 28*
*புதன்கிழமை*
*11.05.2005*
*திதி : திருதியை*
*பிற்பகல் 04.44 வரை*
*நட்சத்திரம் : மிருகசீரிடம்*
*நள்ளிரவு 12.01 வரை*
*சுபநேரம் : 04.24 - 05.54*
*ராகுகாலம்: 11.54 - 01.24*
*(யாவும் பழைய நேரப்படி)*

## யாழ். கடற்கரையோரங்களில் பாதுகாப்பு அணைகளை நிறுவுக

### கடற்றொழிலாளர்கள் அரச அதிபரிடம் கோரிக்கை

குருநகர்,மே10

யாழ்.குடாநாட்டுக் கடற்கரையோரங்களைப் பாதுகாப்பதற்காக கரையோரங்களில் பாதுகாப்பு அணைகளைத் துரிதகதியில் அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை யாழ்.செயலகத்தில் அரச அதிபருடன் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே இக்கோரிக்கையை விடுத்ததாக யாழ். பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் எஸ்.மிக்கேல்ராசா தெரிவித்தார்.

இராணுவம் தங்கியுள்ள பிரதேசங்களில் வசிக்கமுடியாமல் வேறு இடங்களில் வசித்துவரும் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமெனவும், இதுவரை வழங்கப்படாமல் இடைநிறுத்தப்பட்டுள்ள மீனவர்களுக்கான நிவாரணத்தைத் துரிதமாக வழங்குவதற்கு ஆவன செய்யுமாறும் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான வறுமைப்பட்டியலைத் தயாரிக்க முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கடற்றொழிலாளர்கள் அரச அதிபரிடம் கோரினார்கள்.

(8-51)

## 'சிவபூமி' நிறுவனம் நிதியுதவி

ஆழிப்பேரலைத் தாக்கத்தினால் பெற்றோர்களை இழந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், யாழ். மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள 'சிவபூமி' நிறுவனத்தினரால் நிதி நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்கூறிய காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 'சிவபூமி' அறக்கட்டளை நிதியில் இருந்து நிதி நன்கொடை வழங்கப்படவுள்ளதாக 'சிவபூமி' நிறுவனத்தைச் சேர்ந்த என்.சதாசிவ ஐயர் தெரிவித்துள்ளார்.

சுனாமி பேரலையால் தமது பெற்றோர்களை இழந்த யாழ்.பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்கள் 30 பேருக்கு நாளை புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு 'சிவபூமி' காரியாலயத்தில் வைத்து நிதி நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன.

அதேபோல எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேற்படி காரியாலயத்தில் வைத்து நிதி நன்கொடைகள் வழங்கப்படவுள்ளன. புற்றுநோயாளர்கள் வைத்தியசாலை கிளினிக்குச் செல்லும் அடையாள அட்டையுடன் வருகைதருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(8-152)

### உதவாக்கு

பிறப்பும் இறப்பும் மட்டுமல்ல வாழ்க்கை. இரண்டுக்குமிடையில் என்ன செய்துமுடிக்கிறோம் என்பது தான் வாழ்க்கை.

– பி.சி.கணேசன்

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள T.VS விக்டர் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்பு: T.P.: 077 6576492, 077 6071143. (45168)

## வீடு, காணி விற்பனைக்கு

'ராச வில்லா" கரம்பொன், ஊர்காவற்றுறையில் 6 பரப்புக் காணியில் அமைந்த வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அன்ரன் கிளெறன்ஸ் இம்மானுவேல் T.P No. 026 - 2222160, 077 6109343. (45115)

இல.30, கல் ஒழுங்கை, கரம்பொன், ஊர்காவற்றுறையில் 12 பரப்புக் காணியிலமைந்த வீடும் (பகுதியாகச் சேதமடைந்த வீடு) காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அன்ரன் கிளெறன்ஸ், இம்மானுவேல், T.P 026 - 2222160, 077 6109343. (45116)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

அழகிய நிறங்களிலான போமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: K.தர்மறட்ணம், 12/6, கனடி வீதி, நாவாந்துறை. (45167)

## திருமண சேவை

சீதனம் இல்லாமல் திருமணம் செய்யாதிருப்பவர்கள், கொடுத்துச் செய்யக்கூடியவர்கள், வசதியில்லாது திருமணஞ் செய்யாதிருக்கும் பெண்களை மணம் விரும்பி ஏற்கும் ஆண்கள் எங்களிடம் வெளிநாட்டு ஜாதகங்கள் உள்ளன. புகைப்படம், ஜாதகத்துடன் நேரிலோ, தபால் மூலமோ தொடர்புகொள்ளவும். ஸ்ரீ நாகபூசணி அம்மன் திருமண மாலை, இல.289A, பட்டாணிசசூர், மன்னார் றோட், வவுனியா. T.P.: 024 4588410, 0776 630207 (45057)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, கனடாவில் தொழில்புரியும், 39 வயது, ஆங்கில உயர்நிலைப் பட்டதாரிக்கு M.A.(Eng.Lit.), 29-33 வயதிற்கும் உட்பட்ட, படித்த மணப்பெண் வேண்டும். 7இல் செவ்வாய், சதயம், உயரம் 5'7" ஜாதகம், சீதனம் முக்கியம் இல்லை. தொடர்பு: தங்கமணி சின்னையாபிள்ளை, கேணியடி வீதி, மீசாலை மேற்கு. T.P.077 9084848, 0776102559. (45014)

## வீடு வாடகைக்குத் தேவை

உரும்பிராய், இருபாலை, கோப்பாய்ப் பகுதிகளில் வளவுடன் கூடிய மூன்று பேர் வசிப்பதற்கு ஏற்ற வீடு வாடகைக்கு உடன் தேவை. தொடர்பு: 077 - 3053165 (45169)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் 11.05.2005 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும். றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, கௌரி ஸ்ரோர்ஸ், பிரதான வீதி, பண்டத்தரிப்பு, றஞ்சித் 517, ஸ்ரான்லி றோட், P.ரவி, சாவகச்சேரி, ராதா, மாவடி, வட்டுக்கோட்டை, ஹரீஸ் ஸ்ரோர்ஸ், வடக்கம்பரை, தொல்புரம். T.P 222 2867, 222 3529 (45176)


## பிரதேச சபை செயலர்கள் பதவி ஏற்பதில் தடங்கல் எனப் புகார் தெரிவிப்பு

அச்சுவேலி,மே10

யாழ்.மாவட்டத்தில் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதேச சபைகளின் செயலர்கள் பதவி ஏற்பதில் தடங்கல்கள் ஏற்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள பதின்மூன்று பிரதேசசபைகளுக்கும் புதிதாக பிரதேச சபைச் செயலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் நியமனங்கள் வருட ஆரம்பத்தில் நடைமுறைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், காலங்கடத்தப்பட்டு கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்ட சிலர் பதவி ஏற்பதற்கு தயாராக உள்ள போதிலும் பதவியில் இருக்கும் சிலர் பொறுப்புக்களை ஒப்படைப்பதில் விருப்பமின்றி முரண்பட்டுவருவதாகவும் - தெரியவந்துள்ளது.

(எ-11)


## விற்பனைக்கு

சகல வகையான கையடக்கத் தொலைபேசிகளும் அதற்கான உதிரிப்பாகங்களும் விற்பனைக்குண்டு. உங்கள் சொந்தப் பெயர்களுக்கு சிம் காட்டும் வழங்கப்படும். பழுது பார்த்துத் திருத்தும் சேவையும் உண்டு.

**யாழ்.போன்சொப்**

10, நவீனசந்தை மேல்மாடி, ஆஸ்பத்திரி வீதி, (திறீஸ்டார் ஹோட்டலுக்கு முன்பாக), யாழ்ப்பாணம் (எ.42495)

**STCA**

Computer Typing, கட்டெழுத்து, சுருக்கெழுத்து, MS Office, Page Maker, Coreldraw, Photoshop, Graphic Designing -தனிப்பட்ட கவனிப்பு, கற்கையை எக்காலத்திலும் ஆரம்பிக்கலாம்

**STCA** (21-11-16)

149(37), சிவன்பண்ணை வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

(45166) (வைத்தீஸ்ராக் கல்லூரிக்கு அண்மையில்)


## கரையோரத் தடை வலய விவகாரம்

# இடம்பெயர்ந்த மக்களின் சமூக, சூழல் பாதிப்பை அரசு கவனத்தில் எடுக்கவில்லை என்கிறது உலக வங்கி!

கொழும்பு,மே10

ஆழிப்பேரலையின் பின் அரசு முன்மொழிந்துள்ள கரையோரப் பாதுகாப்பு வலயம் விஞ்ஞான ரீதியான அடிப்படையில் அமைந்ததல்ல எனவும் கலந்தாலோசனை ரீதியிலும் ஏற்படுத்தப்பட்டதல்ல எனவும் உலக வங்கி விடுத்துள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள இவ்வலயம், ஆழிப்பேரலையால் இடம்பெயர்ந்துள்ள பெரும் எண்ணிக்கையான கரையோர மக்களின் சமூக, சூழலியல் பாதிப்பை அரசு போதுமான அளவு கருத்தில்கொள்ளவில்லை எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டியில் அடுத்தவாரம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டுக்கு முன்பாக இவ்வறிக்கை உலக வங்கியால் தயாரிக்கப்பட்டது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட மக்களுடன் அரசு, இவ்வலயம் பற்றி போதுமான அளவு கலந்தாலோசிக்கவில்லை. அவர்களது வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் பாதிக்கவிருக்கும் மாற்றங்கள் குறித்து அவர்களுக்கு அரசு எடுத்துக்கூறவுமில்லை.

அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள நூறு மீற்றர், இருநூறு மீற்றர் கரையோரப் பாதுகாப்பு வலயம் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் கட்டடங்கள் நிர்மாணிப்பதைத் தடுக்கிறது. இந்தத் தடையை எதிர்த்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியுள்ளனர்.

எனினும், கரையோர ஆபத்தைக் குறைக்கக் கரையோரப் பாதுகாப்பு வலயம் அவசியமாகலாம் எனும் பரவலான கருத்தை உலக வங்கி ஏற்றுக்கொள்கிறது.

ஆழிப்பேரலையுடன் தொடர்புடைய ஆபத்துகளைக் கையாள்வதற்கும் மக்கள் வாழ்வை உத்தரவாதப்படுத்த முடியாத நிலைமையைத் தவிர்ப்பதற்கும் கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதையே உலக வங்கி தனது ஆலோசனையாகத் தெரிவிக்கிறது.

கரையோர வலயத்தில் மீள்கட்டுமானம் குறித்துத் தரமான விடயங்கள் அதில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1997ஆம் ஆண்டில், கரையோரப் பரிபாலனத் திணைக்களம் கரையோர வலய முகாமைத்துவத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியது. கலந்தாலோசனை முறையில்தான் இது வடிவமைக்கப்பட்டது. பல்வேறு கரையோர ஆபத்து, கரையோர நிலைமையைக் கருத்திற்கொண்ட தடைப்பகுதியையும் இது முன்மொழிந்துள்ளது.

ஆபத்தைக் கருத்திற்கொண்டு, கரையோரப பரிபாலனத் திணைக்களம், தடைப்பகுதியாக 25மீற்றரிலிருந்து 125மீற்றர் வரை முன்மொழிந்துள்ளது.

கரையோர வலய முகாமைத்துவத் திட்டம் அதில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால், இது நடைமுறைப்படுத்தப்படுவது மந்தமாக உள்ளது - இவ்வாறு உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கரையோரப் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட 60 வீதமான வீடுகள் கிட்டத்தட்ட 70,000 வீடுகள் - இவ்வலயத்திற்கு வெளியில் மீளமைக்கப்படல் வேண்டும்.

புதிய வீடுகளை அமைப்பதற்கான காணிகளை இனங்கண்டு கொள்வதில் தாமதம் ஏற்பட்டுவருகிறது. இதனால், வீடமைப்புத் திட்டம் தாமதமாகிறது எனவும் வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலும் அம்பாறை மாவட்டங்களிலும் முன்மொழியப்பட்டுள்ள இவ்வலயத்தின எல்லை இருநூறு மீற்றராகும். இம்மாவட்டங்கள ஒடுக்கமான அமைப்பைக் கொண்டுள்ளன. இதனால், இங்கு மக்களை மீளக்குடியமர்த்தும் போது மிகமோசமான சமூக விளைவுகள் ஏறபடலாம் எனவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

மக்களை மீளக்குடியமர்த்துவதற்கென இனங்காணப்பட்டுள்ள பகுதிகளை அபிவிருத்தி செய்வது பெரும் செலவை ஏற்படுத்தும் திட்டமாகும். ஏனெனில், அப்பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளும் சேவைகளும் இல்லாதிருககின்றன.

முன்மொழியப்பட்டுள்ள இப்பாதுகாப்பு வலயத்தில் ஏற்படவுள்ள சமூக, சூழலியல் பாதிப்புக் குறித்து அரசு இன்னும் கருத்தில் கொள்ளவில்லை என உலக வங்கியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-8)

# இரு அதிகார சக்திகள் இருப்பதால் பொதுக்கட்டமைப்பு அவசியமே

## ஆங்கில வாரஏடு தலையங்கம்

கொழும்பு,மே10

வடக்கு - கிழக்கில் இரண்டு அதிகார சக்திகள் செயற்பட்டுவருவது உண்மை நிலையாகும். இந்த அதிகாரம் முறையாகப் பெறப்பட்டதா இல்லையா என்று வாதிடுவதில் அர்த்தமில்லை. அரசின் ஆணை முழு வடக்கு - கிழக்கிற்கும் செல்லுபடியாகாமல் இருக்கின்றது. அதேபோல், அப்பிரதேசம் முழுமைக்கும் விடுதலைப் புலிகளின் அதிகாரம் செல்லுபடியாவதில்லை. எனவே, இவ்வாறு இரண்டு அதிகார சக்திகள் செயற்படும் உண்மை நிலையைக் கருத்திற்கொண்டு முனைப்பானதொரு பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவது அவசியமாகின்றது.

இவ்வாறு எழுதியிருக்கின்றது ஞாயிற்றுக் கிழமை வெளிவந்துள்ள 'சண்டே ஒப்சேவர்' பத்திரிகை அதன் ஆசிரிய தலையங்கத்தில் 'பொதுக்கட்டமைப்புக்கு ஒரு சந்தர்ப்பம் வழங்குக' என்ற தலைப்பில் இந்த ஆசிரியர் தலையங்கம் எழுதப்பட்டுள்ளது.

அரசின் தற்போது நடைமுறையில் உள்ள மாகாண மற்றும் உள்ளூர் அதிகாரக் கட்டமைப்புகள் மூலமே இந்த வேலைகளைக் கையாள முடியும் என்று சிலர் வாதிக்கிறார்கள்.

தென்னிலங்கையிலும்கூட இந்த அமைப்பு சரியாக வேலைசெய்யாத நிலையில் எப்படி அங்கே சாத்தியமாகும். தென்னிலங்கையிலும் கூட மாகாண அதிகாரிகள் அக்கறையில்லாத பார்வையாளர்களாகவே இருந்துள்ளார்கள் என்று அத்தலையங்கம் கூறுகின்றது.

சில அரசியல் கட்சிகளும் ஸ்தாபனங்களும் பொதுக்கட்டமைப்பொன்று உருவாக்கப்படுவதற்கு எதிராகப் பெரும் கூச்சல் போடுகிறார்கள். அது நாட்டை இரண்டு கூறாக்கி விடும் என்கிறார்கள் அவர்கள். இந்தக் கருத்துக்கு ஆதாரமில்லை. பொதுக்கட்டமைப்பென்பது ஆழிப பேரலை அனர்த்த நிவாரணங்களை நிர்வகிக்கவும் மீள்கட்டமைப்புக்குமானதொரு தற்காலிக அமைப்பு மட்டுமே வேறென்றுமில்லை. முழு வடக்கு - கிழக்கிற்கும் புலிகளுக்கு அதிகாரத்தை அது வழங்கிவிடாது என்று எழுதியுள்ள அத்தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள சில கருத்துகள் வருமாறு:-

சில அரசியல்கட்சிகளால் குறிப்பாக ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய கட்சிகளால் கடைப்பிடிக்கப்படும் அரசியல் முறையானது நாட்டின் இறைமைக்குப் பெரும் அச்சுறுத்தலாகும். இது தமிழ்மக்களின் பிரிவினைக் கோரிக்கையை மேலும் பலப்படுத்துவதாகும். பொதுக்கட்மைப்பிலும்கூட புலிகளை இணைத்துக்கொள்ள இவர்கள் மறுப்பதானது அவர்களை மீண்டும் போரைத் தொடங்குவதற்கு நெருக்குவதாகவே இருக்கிறது.

இன்றைய காலகட்டத்தில் சர்வதேச சமூகத்தின் நல்லெண்ணமும் உதவியும் அவசியமாகவிருப்பதால் அவர்களின் பிரதிபலிப்புகள் பற்றியும் நாம் கவனயீனமாக இருந்துவிடமுடியாது. பொதுக்கட்டமைப்புப் பற்றிய விவகாரத்தை நாங்களே தீர்த்துக்கொள்ளட்டும் என்று அவர்கள் கைகளைக் கட்டிக்கொண்டு வாளாவிருக்கமாட்டார்கள். அவ்வாறான கட்டமைப்பு இல்லாதவிடத்து மனிதாபிமான நிலைமைகளை உத்தேசித்து அரசை ஓரங்கட்டிவிட்டு நேரடியாகவே உதவிகளைப் புலிகளுக்கு அவர்கள் வழங்குவதற்கு முடிவுசெய்யவும் கூடும். இதனால் பலஸ்தீன அதிகார சபை உருவாக்கப்படுவதற்கு முன்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு அளிக்கப்பட்டிருந்த சர்வதேச அங்கீகாரம் புலிகளுக்கும் கிடைத்துவிடுவதற்கு வசதியாகிவிடும்.

சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள் புலிகளுக்கு நேரடியாக உதவிகளை வழங்குவதற்கும் ஆயத்தமாகவிருக்கின்றார்கள் என்று அத்தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வலி.தெற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்

உடுவில் பிரதேச செயலக திணைக்கள தலைவர்கள் கலந்து கொள்ளும் பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று செவ்வாய்க் கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலர் எஸ்.திருவாகரன் தலைமையில் நடைபெறும்.

பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை தொடர்ந்து விவசாயிகள்குழுக் கூட்டம் நடைபெறும். (8-152)

## விவரங்களைப் பதிவு செய்யக் கோரிக்கை

குருநகர் கடற்கரையோரங்களில் குடியமர்ந்து தற்காலிகமாக வேறிடங்களில், தங்கி வசித்து வரும் மக்கள் குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் தமது விவரங்களை உடனடியாகப் பதிவுசெய்து கொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் மிக்கேல்ராசா அறிவித்துள்ளார். எதிர்வரும் 13ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4.00 மணிவரை இப்பதிவுகள் மேற்கொள்ளப்பட உள்ளன எனவும் குடும்ப அட்டையுடன் வருகைதருமாறு அவர் அறிவித்துள்ளார். (8-51)


## மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHO THERAPY) இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

10-05-2005 - 15-05-2005

முன்கூட்டியே பதிவுசெய்யவும்

இளைஞர்களே!

☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம் ☆ நடுக்கம்
☆ நித்திரைக் குறைவு ☆ ஆண்மைக் குறைவு ☆ நீரிழிவு நோய்

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள். ஆண்மைச் சக்திக் குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரண சுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதி நேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப் பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூண்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-42701) (21-11-16)



உ
சிவமயம்

## நீங்காத நினைவில் மூன்றாண்டுகள்

மண்ணில் 1930 — 12 — 18



விண்ணில் 2002 — 05 — 13

## அமரர் தம்பையா கணபதிப்பிள்ளை

(முன்னாள் முகாமையாளர், புலோலி ப.நோ.கூ.சங்க எரிபொருள் நிலையம். புற்றளை சாயி தொண்டர் பஜனை நிலையம்)

திதி: 10-05-2005

அறக்கொடையாளி தருமசீலர் சாயி தொண்டர்
தெய்வத்திருப்பணிகளுக்கு வாரிக்கொடுக்கும் வள்ளல்
கொடுத்துச் சிவந்தகரம் செயலிழந்து ஓய்ந்ததேனோ?
அன்பான பேச்சை, ஆறுதல் வார்த்தையை இனி
எப்போ காண்போம்? அமைதியும் சாந்தமும்
தவழும் இனிய முகத்தை இனி எங்கு காண்போம்?
மூன்றாண்டுகள் ஓடி மறைந்தாலும் மூன்றுயுகம் சென்றது
போல் உணர்கின்றோம். உங்கள் பாதம்
படாத எமதுஇல்லம் பொலிவிழந்ததாயிற்று
உருவழிந்தாலும் மனத்திரையில் என்றும் நிலைத்த
உரு என்றும் அழியாது!

மூன்றாண்டு நினைவில் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்.

'சாயி இல்லம்',
புற்றளை, புலோலி.

## ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கென

# இடைத்தங்கல் முகாம்களுக்கு அருகே விளையாட்டு மைதானங்கள் அமைப்பு

கிளிநொச்சி,மே10

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு அச்சமும் துயரமும் நிறைந்து காணப்படும் சிறுவர் மனங்களை ஆறுதல்படுத்தும் பொருட்டு இளையோர் விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர்.

இளையோர் விளையாட்டுக் கழக உறுப்பினர்களுக்கான விளையாட்டு உபகரணங்களை இளையோர் செயற்பாட்டு நிறுவன பணிப்பாளர் விஜி வழங்கினார்.

புதிய விளையாட்டு மைதானத்தில் பளை சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களான வடமராட்சி கிழக்கில் 17 மைதானங்களையும் முல்லைத்தீவுப் பிரதேசத்தில் 13 மைதானங்களையும் நிர்மாணித்து வருகிறது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான தற்காலிகக் குடியிருப்புகளுக்கிடையே இந்த மைதானங்கள் நிர்மாணிக்கப்



சிறுவர் பாதுகாப்பு நிதிய ஆலோசகர் செல்வி ஏ.பி.கிறாண்ட் மைதானத்தைத் திறந்துவைப்பதையும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (8)

களின் தற்காலிக குடியிருப்புகள் அமைந்துள்ள இடங்களில் உருவாக்கப்பட்ட இந்த விளையாட்டு மைதானங்களின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றன.

வடமராட்சி கிழக்கு மாமுனையில் அமைக்கப்பட்ட விளையாட்டு மைதானத்தைச் சிறுவர் பாதுகாப்பு நிதிய பாதுகாப்பு ஆலோசகர் செல்வி ஏ.பி.கிறாண்ட் நாடாவெட்டி சம்பிரதாய பூர்வமாகத் திறந்துவைத்தார்.

விளையாட்டு மைதானப் பெயர்ப்பலகையை சிறுவர் பாதுகாப்பு நிதிய அலுவலர் சுதன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் அருட்தந்தை நேசன் அடிகளார் விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன், வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன், இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழ மத்திய கல்லூரி அரும்புகள் பயிலரங்க மாணவர்களின் உதைபந்தாட்டக் காட்சிப் போட்டி இடம்பெற்றது. இவ்விளையாட்டிற்கு வடமராட்சி கிழக்குப் பிரதேச விளையாட்டு உத்தியோகத்தர் முகுந்தன் மத்தியஸ்தம் வகித்தார்.

தொடர்ந்து செம்பியன்பற்று இளையோர் விளையாட்டு மைதானத்தை வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் நிலவன் திறந்து வைத்தார்.

இளையோர் விளையாட்டு மைதான பெயர்ப்பலகையை இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன் திரை நீக்கம் செய்துவைத்தார்.

இதேவேளை -

இளையோர் செயற்பாட்டு நிறுவனம் சிறுவர் பாதுகாப்பு நிதியத்துடன் இணைந்து பட்டு வருகின்றன.

அத்துடன், இக்குடியிருப்பில் வசிக்கும் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கான இளையோர் கழகங்களும் உருவாக்கப்பட்டு விளையாட்டு உபகரணங்களும் அன்பளிப்புச் செய்யப்படுகின்றன.

விளையாட்டுப் பயிற்சிகளுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

அமைக்கப்பட்டுள்ள கழகங்களுக்கிடையேயான உதைபந்து, கரபந்து, வலைப்பந்து, கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடத்தப்படவுள்ளதாகவும் இளையோர் செயற்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர். (8-204)

## சுகாதாரப் பகுதியினர் திடீர்ச்சோதனை

பரந்தன்,மே10

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் சுகாதாரப் பகுதியினர் திடீர்சோதனைகளை நடத்தி வருகின்றனர்.

கரைச்சிப்பிரதேச சபையினரும், தமிழீழ சுகாதார சேவைப்பிரிவினரும் இந்தச் சோதனைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

தேநீர்க்கடைகள், உணவகங்கள் போன்ற அனைத்துக் கடைகளிலும் இவர்கள் சுகாதாரம், பொருள்களின் தரம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு வருகின்றனர்.

(எ-352-203)

## ஆயுள்வேத வைத்திய சேவை இணையத்துக்கு புதிய நிர்வாகம்

முல்லைத்தீவு,மே10

முல்லைத்தீவு சித்த ஆயுள்வேத வைத்திய சேவைகள் இணையத்திற்கான புதிய நிர்வாகத் தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் தமிழீழ சுகாதார வைத்திய அதிகாரி விக்கிரமன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இணையத்தின் தலைவராக அ.சேவியரும், உப தலைவராக க.சரவணமுத்துவும் செயலாளராக தி.நேசதுரையும், இணைச்செயலாளராக பி.திருச்செல்வமும், பொருளாளராக எஸ்.நாகேந்திரமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவர்களுடன் க.செபஸ்தியாம்பிள்ளை, எஸ்.ஆறுமுகம், எஸ்.பாலசுந்தரம் மற்றும் எஸ்.ரவிநாதன் ஆகியோர் நிர்வாக சபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக திட்டப்பணிப்பாளர் லோறன்ஸ் திலகர் உட்பட முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சுதேச வைத்தியர்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் தமிழீழ சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர்.

(8-410)

## முல்லைத்தீவு ஆசிரியர்களுக்கு புதுக்குடியிருப்பு ம.வியில் செயலமர்வு

முல்லைத்தீவு, மே10

முல்லைத்தீவு கல்விவலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வுகள் கடந்த 7 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின.

இந்தச் செயலமர்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை தரம் 9, தரம் 11 ஆகிய வகுப்புகளுக்கு சைவ சமயத்தையும் தரம் 6 தொடக்கம் 11 வரை கிறிஸ்தவத்தையும், தரம் 10 இற்கு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், மனைப்பொருளியலையும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் தரம் 11 இற்கு மனைப்பொருளியல், வணிகக்கல்வி என்பவற்றையும் தரம் 1 முதல் தரம் 5 வரையான ஆரம்பகல்வி போதிக்கும் ஆசிரியர்களுக்கும்-

எதிர்வரும் 15 ஆம் திகதி உடற்கல்வியும் சுகாதாரத்தையும் தரம் 9 இற்கு போதிப்போருக்கும்.

எதிர்வரும் 16 ஆம் திகதி தரம் 11 இல் ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்குமே இந்தச் செயலமர்வுகள் நடத்தப்படவுள்ளன.

தினமும் காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ள இந்த செயலமர்வுகளில் சம்மந்தப்பட்ட பாட ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கேட்டுள்ளார். (எ-410-353-203)

## சேவைநலன் பாராட்டு விழா

முல்லைத்தீவு,மே10

முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளராக இருந்து கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் பெற்றுச்சென்ற கல்விப்பணிப்பாளர் த.குருகுலராசாவிற்கான சேவைநலன் பாராட்டு விழா நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

விழா நாயகன் மு/சிறிசுப்பிரமணிய வித்தியாலயத்தில் இருந்து நிகழ்விடத்திற்கு ஊர்வலமாக அழைத்துவரப்படுவார். முல்லை வலயத்தைச் சேர்ந்த அனைத்து உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் உட்பட அனைவரையும் குறித்த நேரத்திற்குச் சமுகமளிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (எ-410)

## சாரணர்களுக்கான கலந்துரையாடல்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள சாரணர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முல்லைத்தீவுக் கல்விப்பணிமனையின் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

ஆவணப்பத்திரம், பாடசாலைப் பதிவுச் சான்றிதழ், மற்றும் அவத்தைச் சான்றிதழ் ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட சாரணிய உதவி ஆணையாளர் வே.ஜேம்ஸ் சபாபதி கேட்டுள்ளார்.(8-410-353)

## வீரமுரசு நிகழ்வும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பும்

ஒட்டுசுட்டான் பிரதேசத்தின் மாதாந்த வீரமுரசு நிகழ்வும் மாவீரர், பெற்றோர் கௌரவிப்பும் கருவேலன் கண்டல் பொதுநோக்கு மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றன.

மானுரிவி கமக்கார அமைப்பின் செயலாளர் நாதன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினைக் கருவேலன் கண்டல் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் பா.இரத்தினசிங்கம் ஏற்றிவைத்தார். கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், ஊடகப் பேச்சாளர் சி.வேதனம் ஆகியோர் நிகழ்த்தினர் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.(8-341-202)




## விடுதி புனரமைக்கப்படவில்லை நோயாளருக்குச் சிரமங்கள்

புதுக்குடியிருப்பு,மே10

புதுக்குடியிருப்புக் கிராம வைத்தியசாலையின் விடுதி புனரமைப்புச் செய்யப்படவில்லை. இதனால், நோயாளர்கள் மழைகாலங்களில் தங்கியிருந்து சிகிச்சை பெறமுடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மேற்படி வைத்தியசாலையில் விடுதி வசதிகள் ஓரளவு இருந்தபோதிலும் அவை நோயாளர்களால் பாவனைக்குப் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதாகவும் முறைப்பாடு தெரிவிக்கப்படுகின்றது

மழை பெய்யும் நேரங்களில் மழைநீர் நோயாளர்கள் பயன்படுத்தும் கட்டில்களை நனைத்துவிடுகின்றன. இதனால், நோயாளர்கள் மட்டுமல்லாது தாதிமாரும் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவும் மழை காலங்களில் நோயாளர்கள் சிகிசசை பெறமுடியாத பிரிவாக மாறிவிட்டது என்றும் - கூறப்பட்டது.

எனவே, இந்த வைத்தியசாலையின் விடுதியையும் வெளிநோயாளர் பிரிவையும் புனரமைப்புச் செய்ய உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நோயாளர்கள் தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

(எ-353-203)



சுனாமி அனர்த்தத்தால் பாதிப்புற்ற முல்லைத்திவு மாவட்டத்தில் சேவையாற்றும் தொண்டர்களுக்கான உள்ளகப் பயிற்சிப் பட்டறை கடந்த 2 ஆம் திகதி சிலாவத்தையில் அமைந்துள்ள நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தின் உபபணிமனையில் நடைபெற்றது.

யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் மூன்று நாள்கள் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்டோருக்கு அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி தலைமையிலான குழுவினர் பயிற்சியளிப்பதைப் படத்தில் காணலாம். (8-204)

## ஒருலட்சம் தென்னை நாற்றுகள் உற்பத்தி

கிளிநொச்சி.மே10

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஒருலட்சம் நல்லின தென்னை நாற்றுகளை உற்பத்தி செய்து வழங்கவுள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கைச் சபையின் தலைவர், பிரதிப் பொதுமுகாமையாளர் மற்றும் தென்னை ஆராய்ச்சிச் சபையின் ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் தமிழீழத்திற்கு விஜயம் செய்து, மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் அடிப்படையில் இந்த தென்னை நாற்று உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது.

முதற்கட்டமாக 14 ஆயிரத்து 250 விதை தேங்காய்கள் மேடையிடப்பட்டுள்ளது எனவும் இந்தமாத முடிவுக்குள் மிகுதி தேங்காய் மேடையிடப்படும் எனவும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

(8-204)

## சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை புனரமைப்பு

புளியங்குளம்,மே10

போரினால் பாதிக்கப்பட்ட புளியங்குளம் சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனை மீளமைக்கப்பட்டு வருகின்றது.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் கீழ் (CAARP) வவுனியா வடக்கு, புளியங்குளத்தில் 61 இலட்சத்து 68 ஆயிரம் ரூபா செலவில் மீளமைக்கப்படுகின்றது.

அண்மையில் திறக்கப்பட்ட சுகாதார வைத்திய அதிகாரி விடுதியை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையாக இயக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டும் இதுவரை அவ்வாறான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (8-202)

# பொதுக்கட்டமைப்பை முஸ்லிம்கள் மீது திணித்துவிட நினைப்பது வெறும் கனவு

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் கூறுகிறார்



கொழும்பு,மே10

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான மீள்கட்டுமான மற்றும் நிவாரணப் பணிகளுக்கான உத்தேச பொதுக்கட்டமைப்பை அரசு, விடுதலைப் புலிகள், நோர்வேத் தரப்பு இணைநது முஸ்லிம்கள் மீது திணிக்க நினைத்தால் அது வெறும் பகல் கனவு என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம்.

முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்ட மாநாடு அதன் அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன் தலைமையில் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொணடு உரைநிகழ்த்தும்போதே ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரைநிகழ்த்துகையில் கூறியதாவது:-

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசும் விடுதலைப் புலிகளும் நோர்வேத் தரப்பும் இணைந்து தீர்மானங்களை எடுத்துவிட்டு முஸ்லிம்களை ஒருவாறு சமாளித்துவிடலாம் என்று நினைத்தால் அது தவறு. அப்படிப்பட்ட இனமல்ல நாங்கள்.

ஜே.வி.பி. ஒரு கட்சி. அது ஓர் இனம் அல்ல. முஸ்லிம்கள் ஒரு தேசிய இனம் என்பதை இந்த அரசு உணர்ந்து அவர்களுக்குக கொடுக்கவேண்டிய அனைத்து உரிமைகளையும் கொடுக்கவேண்டும்.

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு நாங்கள் ஒன்றைக்கூற விரும்புகின்றோம். எங்களது கட்சியைப் பலவீனப்படுத்த நினைப்பவர்கள் எதிர்காலத்தில் சரியான பாடத்தைப் படிப்பார்கள். அதற்குரிய காலம் வெகுதொலைவில் இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ள முஸ்லிம் மக்களின் அரசியல் அபிலாஷைகள் மற்றும் அவர்களின் உரிமைகள மறுக்கப்படுமிடத்து அதற்கெதிராகப் போராடவும் நாங்கள் தயாராக உள்ளோம்.

பொதுக்கட்டமைப்பை யார் எதிர்த்தாலும் அதனை ஏற்படுத்தியே தீருவேன் என்று இன்று ஜனாதிபதி பேசுகிறார். முஸ்லிம்களின் கருத்துகள் கேட்கப்படாமல் அந்தப் பொதுக கட்டமைப்பு அமையுமானால் அது தோல்வியிலேயேமுடியும் - என்றார் ஹக்கீம். இம்மாநாட்டில் முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர், ஹஸன் அலி, தேசிய அமைப்பாளர் கே.ஏ.பாயிஸ், கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சபீக் ரஜாப்தீன், தவிசாளர் பஷீர் சேகுதாவூத் ஆகியோரும் உரை நிகழ்தினர். முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களான பைஸால் காசிம், நிஜாமுதீன் ஆகியோரும் கட்சியின் உயர்பீட, உச்சபீட மற்றும் மாகாணசபை, மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.(த-க)


நிபுணத்துவ முறையில் சகல விதமான
போட்டோ கொப்பியர்கள், பெக்ஸ் மெஷின்கள்
பழுதுபார்த்தல், சேர்விஸ் செய்தல்.
SHARP•CANON•TOSHIBA•GESTETNER
மிகவும் நம்பிக்கையான சேர்விஸ் சென்டர்.
• உத்தேச செலவு தொகை விபரம் இலவசமாக வழங்கப்படும்.
• அதி நவீன முறையை கையாண்டு, உத்தரவாதத்துடன் பழுதுப்பார்க்கப்படும்.

சகல போட்டோ கொப்பி இயந்திரங்களுக்கு தேவையான உதிரிப்பாகங்களும், டோனர்களும் எம்மிடம் உண்டு.
Canon 1215 Toner Cartridge Rs.400
Sharp 1118 - SF 126 Rs.1850 (Genuine)
ஸ்டார்லைட் இலக்ட்ரோனிக்ஸ்
763, 2nd Division, Maradana Rd, Colombo - 10
Tel: 2693655, 2681711, Fax: 2681712.
TALENT


## ஒன்பதாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 03 - 10 - 1933

மறைவு 19 - 04 - 1996

அமரர் ஆறுப்பிள்ளை இராசநாயகம்

(Divisional R.M.O அனுராதபுரம் - பொலன்னறுவை)

திதி: 10.05.2005

மண்ணில் தோன்றுபவை யாவும் நிலைப்பதில்லை
ஆனால் எங்கள் மனதில் என்றும் நீங்கள் நிலைத்து இருப்பீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பாசமிகு குடும்பத்தினர்.

பாணாவெட்டி,
தொல்புரம்.

(44985) (39-45-18)

### மின்சாரசபை மறுசீரமைப்பு விவகாரம்:

# அரசு – ஆசிய அபிவிருத்தி வங்கி பிரதிநிதிகள் நாளை சந்திப்பு

கொழும்பு,மே10

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைக்கும் விவகாரத்தில் அரசுக்கும் மின்சாரசபை தொழிற்சங்கங்களுக்குமிடையில் இணக்க நிலை ஏற்படாமல் இழுபறி நீடிக்கும் சூழ்நிலையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர்மட்டப் பிரதிநிதிகளுக்கும் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவுக்கும் இடையிலான முக்கிய பேச்சுகள் நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிபந்தனைகளின்படியே இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்க அரசு தீர்மானித்தது. ஆனாலும், இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டிருப்பதால் இதனை மேற்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில் நாளை புதன்கிழமை நடைபெறும் பேச்சு மிகமுக்கியமான ஒன்றெனக் கருதப்படுகிறது. பிலிப்பைன்ஸைத் தலைமையகமாகக் கொண்டுள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் உயர் மட்ட அதிகாரிகள் இந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதேவேளை - இலங்கை மின்சார சபை தொழிற்சங்கங்களுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகளுக்கு மிடையில் சந்திப்பொன்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மின் சக்தி, எரிபொருள்துறை அமைச்சு மேற் கொண்டுவருவதாக மின்சக்தி, எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

இவ்வாறான பேச்சு நடைபெறுமாயின் தொழிற்சங்கங்கள் தமக்குள்ள சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளமுடியுமென்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (த-க)

## தென்மராட்சியில் இதுவரை 20 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்வு

தென்மராட்சி,மே10

தென்மராட்சிப் பிரதேசத்தில் கடந்த மார்ச் மாதம் வரை 20 ஆயிரத்து 346 குடும்பங்களைச் சேர்ந்த 72 ஆயிரத்து 746 பேர் மீளக் குடியமர்ந்துள்ளனர் எனப் பிரதேச செயலகப் புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

2002.02.22 ஆம் திகதிக்குப் பின்னர் பிரதேசத்தில் இக் குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

இவர்களில் 19 ஆயிரத்து 991 குடும்பங்களைச் சேர்ந்த 71 ஆயிரத்து 412 பேர் தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் - ஏனையோர் ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் -தெரிவிக்கப்பட்டது.(எ-117)

## முக்கிய அறிவித்தல்


கிருஸ்ணா அடகு கடை
376, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T. P: 222 5046
பதிவு இல. J/DS/BR/472


மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2003 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு (31.12.2003) முன்னர் அடகு வைத்து மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகள் யாவும் 2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி (15.06.2005) விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

376, K. K. S. Road, Jaffna.

(45078) (54-

A.S. சுரேந்திரன்
உரிமையாளர்.


## 5 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தாயின் மடியில் 05 - 11 - 1978

தாய் மண்ணின் மடியில் 10 - 05 - 2000

சோதிலிங்கம் யாதவன்

(கப்டன் வீரமணி)

(இம்ரான் பாண்டியன் படையணி)

காற்றோடு கலந்து விட்ட கண்மணியே!
உனது பூ முகம் என்றும்
எம் கண் முன் நின்று தெரிகின்றதே!
நிம்மதியாக கல்லறையில் நீ உறங்க
நிம்மதி இல்லாமல் தவிக்கிறோமே– நாம் இங்கு

ஏழாலை மேற்கு, ஏழாலை. - குடும்பத்தினர்.

(45138) (39-18-45)

## நீர்வேலியில் மோதல்; மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,மே10

நீர்வேலி வடக்குப் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவமொன்றில் மூவர் படுகாயமடைந்தனர். இவர்களில் ஒருவர் தனது இடது கண்ணை இழந்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இச்சம்பவத்தில் நீர்வேலி வடக்கு ஆர்.சி. லேனைச் சேர்ந்தவர்களான ஜேசுராசா ஜெயராசா (வயது31), தர்மலிங்கம் தயானந்தரூபன் (வயது 33), தயானந்தசீலன் உசாந்தினி (வயது27) ஆகிய மூவருமே காயமடைந்தவர்களாவர்.

காயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (3-12)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி





அருளம்பலம் அருளாநந்தஸ்ரீ — தோற்றம் 30.09.1953 — மறைவு 08.05.2003

திருமதி திருஞானசோதி குனேந்திரன் — தோற்றம் 28.02.1957 — மறைவு 03.05.2003

நேசம் மறக்கவில்லை நெஞ்சம்
விழியிலிருந்து மறையவில்லை உருவம்
பசுமையான வாழ்வு பாலைவனமானால்
வேதனையும் விரக்தியுமே மிஞ்சும்.

குறுக்கு வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி. - குடும்பத்தினர்.

(45136) (39-45-18)

# பரீட்சைச் சாதனைகள் பற்றி மாணவர்கள் மனம் திறக்கிறார்கள்

செவ்வி: கவிதரன்

அண்மையில் வெளியிடப்பட்ட ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் குடாநாட்டைச் சேர்ந்த 23 மாணவர்கள் பத்துப்பாடங் ளிலும் 'ஏ' சித்தி பெற்றுள்ளனர்.

ஒப்பீட்டளவில் குடாநாட்டின் கல்வித் தரம் வீழ்ச்சி கண்டுவருவதாகக் கூறப்படு கின்றது. எனினும், இந்த மாணவர்களின் பரீட்சைச் சாதனைகள் யாழ். மாவட்டத் துக்குப் பெருமை சேர்த்திருக்கின்றன.

'10ஏ' சித்திபெற்ற மாணவர்களை அணுகி உங்கள் கல்விச் சாதனை பற்றி ஏதாவது கூறுங்களேன் என்று கேட்டோம்.

பெருமையுடன் பேசினார்கள். நீங்களும் படித்துப்பாருங்கள்.

இந்த மாணவர்கள் எதுவாக வேண்டும் என்ற இலக்குடன் நகர்கிறார்களோ அதுவாகி இந்த மண்ணிற்கு சேவை புரியவேண்டும் என 'உதயன்' மனப் பூர்வமாக வாழ்த்துகிறான்

பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்த குடா நாட்டு மாணவர்களின் செவ்விகள் இன்றுடன் நிறைவுபெறுகின்றன.

தமது வெற்றிக்கான காரணங்களை 'உதயன்' வாசகர்களுடன் பகிர்ந்து கொண்ட மாணவ மணிகளுக்கு எமது நன்றிகள்.

## "...பெற்றோரின் விடாமுயற்சியே எனது பெறுபேறுக்குக் காரணம்..."



**அரியரட்ணம் - கார்த்திக்**
**(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5 வரை கல்விகற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்டேன்.

அப்பா ஒரு விவசாயி, அம்மா சாவகச்சேரி தபாற்கந்தோரில் அஞ்சல் அலுவலராகக் கடமையாற்றுகின்றார். தினமும் இரவு 9.30 மணிவரை தான் படிப்பேன். அதிகாலை 5 மணிக்கு நானாக எழும்பிப் படிப்பேன். காலைப் படிப்புத்தான் எனக்கு ஞாபகமிருக்கும். அதனால், அந்த நேரத்தில் அதீத கவனமெடுத்துப் படிப்பேன்.

என்னுடைய '10ஏ' பெறுபேற்றுக்குக் காரணம் என்னைவிட என் பெற்றாரின் முயற்சியென்றுதான் சொல்லவேண்டும். அத்துடன், அன்றன்று கிடைக்கின்ற 'நோட்ஷெ'ல்லாம் உடனுக்குடன் படிப்பேன்.

இதற்கு மேலாக எங்களுடைய வகுப்பு மாணவர்களிடையே உள்ள கடும்போட்டியும் காரணம். அதாவது, ஒருவரையொருவர் விட்டுக்கொடுக் காமல் நான் முந்தி... நீ முந்தி... என்று படிப்போம்.

நான் கூட அவ்வாறு ஒரு போட்டிக்கு மத்தியில்தான் படித்தேன. கலவித்துறை சார்ந்த ஆங்கிலதினப் போட்டிகள், ஓவியப்போட்டிகளில் பங்கு பற்றி மாவட்டமட்டம் வரை சென்றுள்ளேன்.

உயர்தரக் கல்விக்காகக் கணிதத் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். என்னுடைய சிறுவயது இலட்சியம் ஒரு பொறியியலாளராக வரவேண்டுமென்பதே. அந்த இலக்கை நோக்கி நகர்கிறேன். நிச்சயம் அந்த இலக்கை அடைவேன். என்ற நம்பிக்கை எனக்குண்டு...

நிறைவாக... ஓ.எல்.பரீட்சையில் '10ஏ' பெறுபேறு எடுத்துவிட்டேன் என்று பெருமை கொள்ளவில்லை. ஏனெனில், ஓ.எல் என்பது சாதாரணமாக சித்தியடையக்கூடியது. அடுத்தது, ஏ.எல் என்பதுதான் பரந்துபட்ட விடயம். அதிலும் '3ஏ' எடுத்தால்தான் எதிர்காலத்தைத் தீர்மானிக்கமுடியும். அதற்காகத்தான் பயிற்சி - முயற்சி - என்பவற்றுடன் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்கிறேன். ❐

## "....கல்வியில் முன்னேற்றமடைய விளையாட்டு ஒரு தடையல்ல...."



**கலாமணி முரளிதரன்**
**(நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்)**

தரம் 4 வரை தேவரையாளி இந்துக் கல்லூரியில் கற்று தரம் 5 இற்கு கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் இணைந்தேன். அங்குதான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் தரம் 6 இல் இருந்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இணைந்து கொண்டேன்.

அப்பா யாழ்.பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவுள்ளார். அம்மா தேவரையாளி இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

இரவு 10 மணிவரை தான் படிப்பேன். அதிகாலை 5 மணிக்கெல்லாம் தினமும் நானாக எழும்பிப்படிப்பேன். படி என்று யாரும் கட்டாயப்படுத்துவதில்லை.

பெற்றோரின் ஒத்துழைப்பு நிறைய இருந்தது. அத்துடன், எமது வித்தியாலய அதிபர் மிக நல்லவர். குறிப்பாக எந்த மாணவரையும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுமென நினைப்பவர். அவர் என்னுடைய கல்வியிலும் அதீத அக்கறை கொண்டிருந்தார்.

படிப்போடு மட்டும் நிற்கவில்லை விளையாட்டுக்களில் பங்கு பற்றியுள்ளேன. அதன் பிரகாரம் மாவட்ட மட்டப் போட்டிகளில் பரிசில்கள் பெற்றுள்ளேன்.

பாடசாலையிலுள்ள துடுப்பாட்ட அணியில் பல வருடங்களாக அங்கம வகித்து வருகின்றேன். என்னைப் பொறுத்தவரையில் கல்வி தவிர்ந்த இத்தகைய செயற்பாடுகள் கல்வியைப் பாதிக்கும் என்ற கருத்து தப்பானது. ஏனெனில், அந்தந்த நேரத்தில் அதை அதை செய்தால் போதும். எதிலும் வெற்றி பெறலாம்.

உயர்தரக்கல்விக்காக கணிதத்துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பது எனது இலக்கு. அதை அடைவேன் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல என் பெற்றோருக்கும் மற்றும பாடசாலை சமூகத்துக்கும் உண்டு - நிச்சயம் வெல்வேன். ❐

## "....ஆசிரியப் பெருந்தகைகளின் ஒத்துழைப்போடு படித்தேன்...."



**சிதம்பரநாதன் இலக்கியா**
**(உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)**

நான் ஆரம்பத்திலிருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் தான் கற்றுவருகிறேன். புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன்.

அப்பா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முகாமையாளராக உள்ளார். அம்மா வீட்டுப்பணி செய்பவர்.

இரவு 10 மணிவரைதான் படிப்பேன். அதிகாலை 4 மணிக்கெல்லாம் அம்மா தினமும் எழுப்பிவிடுவார்.

"10ஏ" பெறுபேறு எதிர்பார்த்தேன் கிடைத்தது. என்னை விட அம்மா, அப்பாவுக்குத் தான் அதிக சந்தோஷம்.

என்னுடைய இந்த வெற்றிக்கு மூல காரணம் அம்மா என்றுதான் சொல்லவேண்டும். அத்துடன், எங்களுடைய கல்லூரி அதிபரின் ஒத்துழைப்பும் இன்றியமையாததொன்று.

படிப்போடு மட்டும் நின்றுவிடவில்லை.

பாடசாலைமட்டத்தில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் அதிகம் பங்குபற்றுவேன்.

தற்போது உயர்தரக் கல்விக்காக கணிதத்துறையினைத் தேர்ந்தெடுத்துள்ளேன். எதிர்காலத்தில் ஒரு பொறியியலாளராக வரவேண்டும் என்பது என்னுடைய இலக்கு. நிச்சயம் அதற்கு எனது கல்லூரித்தாயின் ஆசிரியப் பெருந்தகைகள் கைகொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில்தான சொல்கிறேன். அந்த இலக்கை அடைவேன். ❐

## "....விடாப்பிடியாக நின்றால் எதிலும் வெற்றிபெறலாம்...."



**விக்னேஸ்வரமூர்த்தி நிஷாந்தி**
**(வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி)**

நெல்லியடி மெதடிஸ்தமிஷன் பாடசாலையில் தரம் 5 வரை கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து பின்னர் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இணைந்து கொண்டேன். அப்பா பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். அம்மா பொலிகண்டி இ.த.க.பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றுகிறார்.

இரவு 10 மணிவரை தான் படிப்பேன். அதிகாலை 5 மணிக்கெல்லாம் அப்பா தினமும் எழுப்பிவிடுவார். என்னுடைய இந்தப் பெறுபேற்றுக்குக் காரணம் அப்பாதான்.

படிப்புத்தவிர விளையாட்டுத் துறைகளில் கோட்ட, வலயமட்டங்களில் பங்குபற்றியுள்ளேன் ஆங்கிலதினப் போட்டியில் ஒவ்வொரு தடவையும் பங்குபற்றுவேன்.

என்னுடைய எதிர்கால இலட்சியம் ஒரு வைத்தியராக வேண்டுமென்பது. அது எனது விருப்பம் மட்டுமல்ல அப்பாவின் விருப்பமும் அதுதான்.

அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கே உயிரியல் துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். நிச்சயம் ஏ.எல் பரீட்சையிலும் '3ஏ' பெறுபேறு எடுப்பேன். அதில் நான் உறுதியாகவுள்ளேன். தன்னம்பிக்கையுடன் உள்ளேன்.

நிறைவாக என்னுடைய அனுபவத்திலிருந்து.......

ஒருவிடயத்தில் விடாப்பிடியாக, மனஉறுதியுடன் மனதை அங்கலாய்க்கவிடாமல் துணிவுடன் இறங்கினால் நிச்சயம் வெற்றிபெறலாம். ❐

## "....எல்லோரும் 'உயிரியல்' படி என்கின்றனர் நான் வர்த்தகத்தையே தெரிவு செய்தேன்...."



**சூரியகுமாரன் தர்சிகா**
**(சாவகச்சேரி இந்துக் கல்லூரி)**

சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் தரம் 5வரை கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்து பின்னர்தான் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இணைந்துகொண்டேன்.

அப்பா ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றுகிறார். அம்மா சாவகச்சேரி பிரதேச செயலகத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றுகிறார்.

நான் இரவு 10 மணிவரை தான் படிப்பேன். அதிகாலையில் எழுந்து படிப்பதில்லை. இர்வு மட்டும் படித்தால் போதுமென்று என் நிலைப்பாடு இருந்தது.

"10ஏ" பெறுபேறு கிடைக்குமென்று ஆழமான - உறுதியான நம்பிக்கையிருந்தது. அந்த நம்பிக்கைக்குக் காரணம், என்னுடைய இலக்கு அவ்வாறான பெறுபேறு எடுக்கவேண்டுமென்பதே.

கல்வியைத் தவிர வேறு துறைகளில் ஈடுபடவில்லை. உயர்தரக் கல்விக்காக வர்த்தகத் துறையினைத் தேர்ந்தெடுத்துள்ளேன். என்னைச் சுற்றியுள்ள உறவினரெல்லாம் உயிரியல் துறையினையே தேர்ந்தெடுக்குமாறு அறிவுரை சொன்னார்கள்.

ஆனால், என்னுடைய விருப்பம் வர்த்தகத் துறையினையே தேர்ந்தெடுக்க வேண்டுமென்பது. ஏதோ தெரியவில்லை வர்த்தகத் துறை மீது எனக்கொரு அலாதிபிரியம். அதனைத் துறைபோகக் கற்கவேண்டுமென்பது என்னுடைய இலக்கு. நிச்சயம் அதில் '3ஏ' பெறுபேறு எடுப்பேன். அதற்காக என்னை முழுமையாக அர்ப்பணித்து சாவகச்சேரி இந்து அன்னைக்கும், என்னுடைய பெற்றோருக்கும் பெருமை தேடிக்கொடுப்பேன் என்பதில் உறுதியாகவுள்ளேன்.

என்னைப் பொறுத்தவரையில் ஓ.எல்.பரீட்சையில் இலகுவாக வெற்றிபெறலாம்.

ஒரு மாணவன் தான் எந்த இலக்கை நோக்கி நகர நினைக்கின்றாரோ அந்த இலக்கை அடைய முழு அர்ப்பணிப்புடனும் அதீத நம்பிக்கையுடனும் பயணத்தைத்தொடர வேண்டும். ❐

## "....புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றபோதும் மனம் தளராது கடுமையாகப் படித்தேன்...."



**சண்முகராசா தவக்குமரன்**
(யாழ்.மத்திய கல்லூரி)

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் தரம் 8 வரை கல்வி கற்று பின்னர்தான் யாழ்.மத்திய கல்லூரியில் இணைந்து கொண்டேன். அப்பா பலசரக்குக் கடை வைத்திருக்கிறார். அம்மா வீட்டுப்பணி செய்பவர்.

புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றியிருந்தேன். சித்தியடையவில்லை. 'கட்அவுட்' புள்ளி 110. எனக்குக் கிடைத்த புள்ளி 107. மூன்று புள்ளி வித்தியாசத்தில் சறுக்கிவிட்டேன். இருப்பினும் அந்தப் பரீட்சையில் சித்தியடையவில்லையே என்று மனதைத் தளரவிட வில்லை. தன்னம்பிக்கையுடன் - மன உறுதியுடன் கல்வியைத் தொடர்ந்தேன்.

'10ஏ' பெறுபேறு எடுப்பேன் என்ற நம்பிக்கையிருந்தது. இரவு 10 மணிவரைதான் படிப்பேன். அதிகாலை 5.30 மணிக்கு அப்பா எழுப்பி விடுவார்.

ரீ.வி பார்ப்பதில்லை, படிப்பைத்தவிர வேறுதுறைகளில் ஈடுபடவில்லை. வினாவிடைகளை அதிகம் செய்து பார்ப்பேன். படிக்கின்றபோது, ஏதாவது சந்தேகங்களைத் தீர்க்கவேண்டுமானால் கல்லூரியில் ஆசிரியர்களைக் கேட்பேன்.

உயர்தரக் கல்விக்காக கணிதத்துறையைத் தேர்ந்தெடுத்துள்ளேன். எதிர்காலத்தில் பொறியியலாளராக வரவேண்டுமென்பதே என்னுடைய இலக்கு. அதற்கும் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

மனதில் உறுதியும், தன்னம்பிக்கையும், எதையும் எதிர்கொள்ளும் சக்தியும் இருக்குமானால் எதிலும் ஜெயிக்கலாம் என்பது என்னுடைய இளவயது அனுபவம். ❐

**திருமணக் கார் (குளிரூட்டியது) வாடகைக்கு**



★ திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
★விசேட வைபவங்கள் ★ சுற்றுலாக்கள்
போன்ற அனைத்துச் சேவைகளுக்கும்
புத்தம் புதிய [ஆங்கில இலக்கம் கொண்ட]
குளிரூட்டிய நவீன கார் சாரதியுடன்
நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன்
வாடகைக்குக் கிடைக்கும்.

T.P.: 0777 - 903090,
077-3086939,
0777-246117,
077-6018467. (44881)

தொடர்பு: [illegible],
சோமசுந்தரம் பாலர் பாடசாலை,
22,சோமசுந்தரம் அவனியூ,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
(26-18-16-24)



**மே 7 முதல்**

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை
மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும்
லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

**மாபெரும் புத்தகக் கண்காட்சியும்**
**மலிவு விற்பனையும்**

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும் அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல...

இடம்: யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம்: 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதிவரை
நேரம்: காலை 9 மணிமுதல் மாலை 6 மணிவரை (புதிய நேரம்)
(வார இறுதி நாள்களும் விடுமுறை நாள்களும் உட்பட)

சிறப்பு விலைக் கழிவு

தொடர்புகளுக்கு:
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.
(சி-42629) (18-16-24)


## 31 ஆம் நாள் நினைவலைகள்



**சங்ரப்பிள்ளை வரதராசா**
(கைதடி கிழக்கு)

அன்பினால் அனைவரையும் அரவணைத்து
ஆன்மீகம் நிறைந்த மனத்துடன்
இன்சொல்லால் எமைக் கவர்ந்த
எம்மினிய சோதரனே!
என்று நாம் உனைக் காண்போம்?
ஏங்கித் தவிக்கின்றோம்!

நகரசபை,
சாவகச்சேரி.
(சி/42726) (32-18-16-24)
செயலாளர்,
உத்தியோகத்தர், ஊழியர்கள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம்
02 - 06 - 1953



மறைவு
10 - 04 - 2005

**அமரர் சங்கரப்பிள்ளை வரதராசா**

கடந்த 10-04-2005 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவன் சங்கரப்பிள்ளை வரதராசா அவர்களின் சபிண்டீகரண வீட்டுக்கிரியைகள் இன்று (10-05-2005) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் மேற்படி கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

"சந்நிதி இல்லம்"
கைதடி கிழக்கு, கைதடி. (45003)(46-18-16-24)
தாய், மனைவி,
பிள்ளைகள்.

## வதிவிடச் செயலமர்வு

வலி.தெற்கு,மே10

[illegible] கல்வி, அழகியற் கல்வி, ஆரம்பகல்வி ஆகிய துறைகளைச் சேர்ந்த நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்களுக்கான வதிவிடச் செயலமர்வு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் 5 நாள்கள் இச்செயலமர்வு நடைபெறும்.

இச்செயலமர்வில் பங்குபற்ற விரும்பும் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பப் படிவங்களைத் தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன் கல்வியியற் கல்லூரிக்கு அனுப்பிவைக்குமாறு பீடாதிபதி ஆர்.ரீ. கமலநாதன் கேட்டுள்ளார். (8-152-204)

## மீன்பிடி வலைகள் அடிக்கடி திருடப்படுவதாக முறைப்பாடு

தென்மராட்சி,மே10

சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடி வலைகள் மற்றும் உபகரணங்கள் அடிக்கடி திருட்டுப் போவதாகக் கடற்றொழிலாளர்கள் தெரிவித்தனர்.

படையினரின் கடல் பாதுகாப்பு வலயத்தை யொட்டிய பகுதிகளில் களங்கண்டிகளிலுள்ள வலைகள், இறால் கூடுகள், கம்புகள் ஆகியவை இரவிரவாகத் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாலை 7 மணிதொடக்கம் அதிகாலை 5 மணிவரை கடற்றொழிலாளர்கள் கடலுக்குச செல்ல அனுமதிக்கப்படாததால் இத்திருட்டுச் சம்பவம் தொடர்பாக உயர் அதிகாரிகளிடம் முறையிடவுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர். (எ-117)

## குற்றச் செயல்கள் அதிகரிப்பு எனப் புகார்

செம்பியன்பற்று,மே10

வடமராட்சிப் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி அதிகரித்துள்ளமையால் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடமராட்சியில் குடிசைக் கைத்தொழிலாகவும் நிறுவனத் தொழிலாகவும் பல மறைவிடங்களில் கசிப்பு உற்பத்தியை மேற்கொண்டு வருகின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்த வடமராட்சிப் பொலீஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.(எ-36)

## மீனவர் நலன் கருதி விற்பனை நிலையங்கள்

செம்பியன்பற்று,மே10

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கடற்றொழிலாளர், பொது மக்களின் நன்மை கருதி இரு விற்பனை நிலையங்களைத் திறந்துவைக்கவுள்ளது.

இதன்படி கட்டைக்காட்டில் கடற்றொழிலாளர்களின் மீன்பதனிடும் வசதிகருதி அரைத்த உப்பு விற்பனை நிலையம் ஒன்றும் -

ஏ-9 வீதி, புதுக்காட்டுச் சந்தியில் பொது மக்களின் நன்மை கருதி கருவாடு விற்பனை நிலையம் ஒன்றும் திறந்துவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன எனச் சமாசப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். (எ-36)


வாடிக்கையாளர்களே...
பாஸ்போட், அடையாள அட்டை படங்களை (Colour/B/W) உடனுக்குடன் (5-15 நிமிடங்களில்) மேலதிக கட்டணமின்றி படம்பிடித்து பிரதியாக்கம் செய்து தருகின்றோம்.

மூர்த்தி ஸ்ருடியோ அன் டிஜிரல் கலர் லாப்

[illegible] வீதி, (பழைய தபால் கந்தோர் ஒழுங்கை.) யாழ்ப்பாணம். 0714168475
யாழ். வீதி, மானிப்பாய். T.P.: 021-222 2884
E.mail: moorthylazer@yahoo.com
(C-42686) (54-18-16-24)



**முதலாவது பிறந்தநாள் வாழ்த்தும் அழைப்பும்**

அன்புடையீர்,
நிகழும் மங்களகரமான பார்த்திப ஆண்டு சித்திரைத் திங்கள் 27 ஆம் நாள் (10.05.2005) செவ்வாய்க்கிழமை நிறஞ்சன் - ஜெசிந்தா தம்பதிகளின் புத்திரி **செல்வி யஸ்மியா** அவர்கள் தனது முதலாவது பிறந்த தினத்தைக் குதூகலத்துடன் தமது இல்லத்தில் கொண்டாடி மகிழ்கின்றார். இவரை அம்மப்பா, அம்மம்மா, பெரியம்மா, சித்திமார், மாமாமார், மச்சிமார், பூட்டிமார், பூட்டன்மார், அப்பப்பா குடும்பத்தினர் நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். இந்த பிறந்தநாள் வைபவத்தில் கலந்துகொண்டு செல்வியை வாழ்த்தும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



**செல்வி யஸ்மியா**

சங்குவேலி வடக்கு, மானிப்பாய்.
தங்கள் நல்வரவை நாடும்: திரு. திருமதி நிறஞ்சன் குடும்பத்தினர்.
(45093) (38-18-16-24)



**மே 9 முதல்**

வர்த்தகப் பெருமக்களே!
ஆசிரியப் பெருந்தகைகளே!
மாணவ மணிகளே!

மாபெரும் மலிவு விற்பனை

பாலர் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரையான பாடப்புத்தகங்களுக்கு 20% - 50% வரையான கழிவும் உபகரணங்களுக்கு 10% கழிவும் இந்தியப் புத்தகங்களுக்கு 20% கழிவும் வழங்கப்படும்.

இச்சலுகை ஜீன் 9 வரை மட்டுமே.

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
212, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 222 5542
(சி-42739) (46-18-16-24)



**இதோ!**



எமது வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

கும்பழாவளை வீதி, அளவெட்டியில் மூன்று ஆண்டுகள் தனது மகத்தான சேவையை ஆற்றி இப்போது நான்காவது வருடத்தில் காலடி பதிக்கும் இந்த நல்வேளையில்,

**சுகப்பிரதா தொலைத்தொடர்பு சேவை**

வழங்குபவர்கள்:
இம்மாதம் முதல் (இன்ரநெற் சேவை ரூ.7/-)
இந்தியா ரூ.25/-, அரபு நாடுகள் ரூ.30/-
இரவு 9 மணிமுதல் இலங்கை முழுவதும் உரையாட ரூ.4/-

✳ குறைந்த கட்டணத்தில் நிறைந்த சேவை!

உள்வரும் அழைப்புகளுக்கு 60 நிமிடத்துக்கு மேல் இலவசம்

இரவு - பகல் சேவை

உள்ளூர் இல.: 021 2227123
021 4591285
0602 213322

நாடுங்கள் :
**சுகப்பிரதா தொலைத்தொடர்பு சேவை**
கும்பழாவளை வீதி, அளவெட்டி.
(45155)(32-18-16-24)





**நூற்றாண்டு நிறைவு 1904 - 2004**
**யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி**

**நூற்றாண்டு நிறைவைக் குறிக்கும் மாபெரும் கல்விக்கண்காட்சி**

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன் இக்கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக
★ யாழ்ப்பாண மின்னகத்தின் LG-அப்பான்ஸ் காட்சிக் கூடம்
★ அன்னை நாகபூட் சிற்றியின் நீல்கமால் - பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக் கூடம்
★ குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் - மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம்
★ IIS-கணனி நிறுவனத்தின் காட்சிக் கூடம் ★ யாழ்.CD-City- இன் காட்சிக்கூடம்
இன்னும் பல காட்சிக் கூடங்கள். இங்கு - சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்யலாம்.
சிறுவர்களுக்குப் பெருவிருந்தாக ★ மெரிக்கோரவுண்ட் ★ பாதாள கிணற்றில் மோட்டார் சைக்கிள் சவாரி

காலம்: 2005 - மே 12 ஆம், 13 ஆம், 14 ஆம் நாள்
இடம்: பாடசாலை வளாகம்

விளம்பர அனுசரணை:
ரஞ்சனாஸ் நவீன சந்தை வீதி, சாவகச்சேரி.
கஸ்தூரி நவீன சந்தை வீதி, சாவகச்சேரி.
(C-42720)(50-14)

# முருங்கைக்காய் விலை தொடர்ந்தும் முன்னிலை

கரவெட்டி,மே10

முருங்கைக்காயின் விலை ஏனைய காய்கறிகளின் விலையைவிட குடாநாட்டுச் சந்தைகளில் தொடர்ந்தும் முன்னிலையிலேயே உள்ளது.

கடந்த மாதம் வடமராட்சி, பருத்தித்துறை, நெல்லியடி, உடுப்பிட்டி போன்ற பொதுச் சந்தைகளில் ஒரு கிலோ முருங்கைக்காய் 350 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது அது குறைவடைந்து 100 ரூபா வரை விலை போகின்றது. எனினும் ஏனைய காய்கறிகளின் விலையைவிட முருங்கைக்காய் விலை முன்னிலையிலேயே உள்ளது. (த-70)

# விவசாய உள்ளீடு விற்பனை நிலையம் கோப்பாயில் நேற்றுத் திறந்துவைப்பு

யாழ்ப்பாணம்,மே10

வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்தி சேவைகள் தனியார் நிறுவனத்தின் விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையம் கோப்பாயில் நேற்று வைபவரீதியாகத் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக்காலை நடைபெற்ற இந்தத் திறப்பு விழா நிகழ்விற்கு புத்தூர் கமநல சேவைகள் நிலையத்தின் தலைவர் கு.பூபாலசிங்கம் தலைமைவகித்தார்.

கட்டடத்தின் பெயர்ப்பலகையை இலங்கை வங்கியின் வடபிராந்திய பொது முகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து கமநல சேவைகள் நிலையத்தின் உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் நாடாவை வெட்டி கட்டடத்தைத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சி நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி விஜயரட்ணம், வடக்கு - கிழக்கு கிராமிய அபிவிருத்திச் சேவைகள் தனியார் நிறுவனப் பணிப்பாளர் ப.விஜிதரன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (த-7)





கோப்பாயில் நேற்று திறந்துவைக்கப்பட்ட விவசாய உள்ளீடுகள் விற்பனை நிலையத்தின் பெயர்ப்பலகையினை மக்கள் வங்கியின் வடபிராந்திய பொதுமுகாமையாளர் எஸ்.பாலசுப்பிரமணியம் திரைநீக்கம் செய்துவைப்பதை முதலாவது படத்திலும் கமநல சேவைகள் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் நாடாவை வெட்டி நிலையத்தைத் திறந்துவைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். *(படங்கள் : பிரபா)*

# கொக்குவில் கேணியடியில் மின்குமிழ் ஒளிரவில்லை

குருநகர்,மே10

கொக்குவில் கேணியடிச் சந்தியில் உள்ள தெருவிளக்கு கடந்த ஆறுமாதங்களாக ஒளிராமலுள்ளது. இதனை திருத்தியமைக்குமாறு இப்பகுதி மக்கள் இலங்கை மின்சாரசபையினருக்குப் பலதடவைகள் அறிவித்திருந்தனர். அத்துடன், சேதமடைந்த மின் உபகரணங்களுக்குப் பதிலாக அவர்கள் புதிய மின்குமிழ்களை வழங்கியிருந்தனர் என்றும் கூறப்பட்டது. எனினும், இதுவரை திருத்தவேலைகள் மேற்கொள்ளப்படவில்லை என்று பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டது. (த-51)

# கற்கோவளத்தில் தங்கியுள்ள குடும்பங்களுக்குக் கதிரைகள்

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வழங்கியது

யாழ்ப்பாணம்,மே10

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலுள்ள தும்பளை கிழக்கு, கற்கோவளத்தைச் சேர்ந்த 403 குடும்பங்களுக்குத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் கதிரைகள் வழங்கியுள்ளது.

கற்கோவளம், தும்பளை கிராமப் பொது மண்டபத்தில் இடம்பெற்ற கதிரைகள் வழங்கும் நிகழ்வில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன உபதலைவர் பேராசிரியர் ப.சிவநாதன், நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் தே.தேவானந்த், கிராம சேவையாளர்கள், கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

ஒரு குடும்பத்திற்கு 4 கதிரைகள் வீதம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-202)

# குடாநாட்டுத் தென்னை மரங்களில் மயிர்ப்புழுவின் தாக்கம் அதிகரிப்பு

வலி.தெற்கு,மே10

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னை மரங்களில் மயிர்ப்புழுவின் தாக்கம் அதிகரித்து வருவதாக தென்னை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மயிர்ப்புழு நோய் பரவாமல் தடுப்பதற்கேற்ற தடுப்புமுறைகள் மேற்கொள்ளப்படாமையாலேயே இவற்றின் தாக்கம் அதிகரித்துள்ளது.

முன்னர் மிகக்குறைவாகவே இந்த நோயின் தாக்கம் இருந்துவந்துள்ள போதிலும் நோய் பரவாமல் தடுக்கும் தடுப்புமுறைகளை மேற்கொள்ளாமையால் நோயின் தாக்கம் அதிகரித்து வருவதாக தென்னை அபிவிருத்தி சபையினர் தெரிவித்துள்ளனர்.

தென்னைச் செய்கையாளருக்கு மயிர்ப்புழு நோயைத் தடுக்கும் முறைகள் பற்றி விளக்கம் அளித்துவரும் தென்னை அபிவிருத்திச்சபை அதிகாரிகள் ஆரம்பத்திலேயே இந்நோயின் தாக்கத்தைக் கட்டுப்படுத்துமாறும் கூறியுள்ளனர்.

மருந்து விசிறும் கருவிகள் கமநலசேவை நிலையங்களுக்கு வழங்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-152)

# யாழ். கோட்டைப் பகுதியில் சமூகச் சீரழிவுகள் அதிகரிப்பு

மண்டைதீவு,மே10

யாழ். கோட்டை துரையப்பா விளையாட்டரங்கு, முனியப்பர் ஆலய சுற்றாடல் பகுதிகளில் சமூகச் சீரழிவுச் செயற்பாடுகள் அண்மைக் காலத்தில் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பகுதிகளில் குறிப்பிட்ட நேரங்களில் கலாசாரத்தைப் பேணும் இளைஞர்கள் குழு ஒன்று கண்காணிப்பில் ஈடுபட்டுவருகின்றபோதும் ஏனைய நேரங்களில் சீரழிவுச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன என பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சீரழிவு நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் சிலர் அவ்வப்போது கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு எச்சரிக்கப்பட்டும் வருகின்றனர். இருந்தாலும் அத்தகைய நடவடிக்கைகள் குறைவதாகத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-88)

# அனுமதியின்றிக் கட்டடங்களை அமைப்போர் மீது நடவடிக்கை

பிரதேச சபையின் அனுமதி பெற்றே புதிய கட்டடங்கள், மதில்கள் என்பன கட்டப்படவேண்டும் என்றும் அனுமதி பெறப்படாமல் புதிதாக நிறுவப்படும் கட்டடங்கள், மதில்கள் ஆகியவற்றின் உரிமையாளர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.

எனவே, புதிதாக கட்டடங்களை அமைப்போர் வலி.கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகங்களான அச்சுவேலி, புத்தூர், உரும்பிராய், கோப்பாய், நீர்வேலி ஆகியவற்றின் பொறுப்பதிகாரிகள் ஊடாக விண்ணப்பித்து உரிய முறையில் அனுமதியை பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது. (த-11)

# பருத்தித்துறை கூட்டுறவுச் சங்க ஊழியர் போராட்டம் வெற்றி

கரவெட்டி,மே10

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி அண்மையில் நடத்திய மறியல் போராட்டம் வெற்றியில் முடிவடைந்தது.

கடந்தமாத இறுதியில் மேற்படி ஊழியர்கள் 2ஆயிரத்து 500 ரூபா சம்பள உயர்வு கோரி மறியல் போராட்டத்தை நடத்தினர்.

இப்போராட்டத்தின் பயனாக சம்பள உயர்வு கிடைத்துள்ளதாகப் பருத்தித்துறை கூட்டுறவுத் தொழிலாளர் சங்க சமாசத் தலைவர் தெரிவித்தார்.

இதுதொடர்பாகப் பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் பா.பத்மநாதக் குருக்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

எமது சங்கம் பெரும் கடனில் மூழ்கியுள்ளது. வங்கியிலும் பெருமளவு கடன்பட்டுள்ளோம். இதனால்தான் எமது ஊழியர்களுக்கு வழங்கப்படவேண்டிய சம்பள உயர்வில் தாமதம் ஏற்பட்டது. அவற்றைச் சீர்செய்து அவர்களுக்குரிய சமபள உயர்வை வழங்குவதற்கு நாம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தபோது எமது ஊழியர்கள் போராட்டத்தில் குதித்துவிட்டார்கள்.

எனினும், ஊழியர்களின் போராட்டத்தால் பொதுமக்கள் பாதிக்கப்படக்கூடாது என்ற நோக்கில் அவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கியுள்ளோம் என்று அவர் தெரிவித்தார்.

# உடைந்த வள்ளங்களுடன் வீதியில் இறங்கி மறியல்!

செம்பியன்பற்று,மே10

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்கள் தமக்கு சுயதொழில் உபகரணங்களை வழங்க அரசோ, சம்மேளனங்களோ நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனச் சுட்டிக்காட்டி அடுத்தவாரமளவில் எதிர்ப்புப் போராட்டமொன்றில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர்.

தமக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமது உடைந்த வள்ளங்களுடன் வீதியில் இறங்கி மறியல் போராட்டங்களில் ஈடுபடப்போவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-36)






யாழ்.பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவாநிலையத்தில் கடந்த மாதம் 22ஆம் திகதி நபிகள் நாயகத்தின் பிறந்தநாள் விழா நடைபெற்றது. விழாவில் ஒஸ்மானியாக் கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள், மாணவிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இனமத ஒற்றுமையை மேம்படுத்தும் நோக்குடன் இந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

சாயி நிலையத் தலைவர் அன்பளிப்பு வழங்குவதையும் ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் ஜனாப் எம்.எஸ்.ஏ.எம் முபாரக் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (ஐ)

# கப்பூதுக் கிராமத்துக்கு விரைவில் மின்சாரம்

சாவகச்சேரி,மே10

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள கப்பூது கிராமம் மின்சார வசதிபெறவுள்ளது. இக்கிராமத்திற்கான மின்சாரம் தென்மராட்சிப் பிரதேச மூடாக வழங்கப்படவுள்ளது.

இலங்கை மின்சார சபையின் சாவகச்சேரி அலுவலகத்தால் கனகன்புளியடிச் சந்தியில் இருந்து உயர் மின் அழுத்த மார்க்கமாக சரசாலை வெளியூடாக நீட்டம் செய்யப்படவுள்ளது.

இத்திட்டத்திற்கான முதற்கட்ட நடவடிக்கையான மின்கம்பங்கள் நடுவதற்கு மின்சார சபை உத்தியோகத்தர்களால் அளவீடுகள் செய்யப்படுகின்றன.

கனகன்புளியடிச் சந்தியில் இருந்து சுமார் 4 கிலோமீற்றர் தூரத்தில் கப்பூதுக் கிராமம் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-31)

*எமது வாடிக்கையாளர்களே!*

எமது ஸ்தாபனத்தின் மூன்றாம் ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு -
விசேட அன்பளிப்புகள் காத்திருக்கின்றன!

இந்த விசேட அன்பளிப்புகள்
அனைத்தும் 09.05.2005 முதல் 12.05.2005 வரை
கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே
வழங்கப்படும்.

★ திருமணப் பட்டுப் புடைவைகளா?
★ நவீன டிசைன்களிலான சாறிகளா?

அனைத்துக்கும் விசேட தள்ளுபடிகளும் உண்டு.

நாடுங்கள்:

**மிலேனியம் பெஷன் அன் பொம்பே பஜார்**

10, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் (மலாயன் கபே முன்பாக).

(சி/42747-24-11-16)

# மின்சாரசபை மறுசீரமைப்புத் திட்டம் யார் எதிர்த்தாலும் செய்தே தீருவேன்

## அடித்துக் கூறுகின்றார் ஜனாதிபதி குமாரதுங்க

பதவிகளையோ அல்லது மக்களின் வாக்குகளையோ இலக்கு வைத்துக்கொண்டு யதார்த்தத்திற்கு நாம் முகங்கொடுக்கமுடியாது. நாட்டுக்குத் தேவை என்று கருதினால் சில அதிரடித் தீர்மானங்களையும் எடுக்கத்தான் வேண்டும். இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்புத் தொடர்பில் யார் என்ன கூறினாலும் அந்த மறுசீரமைப்பு நடவடிக்கையை நான் நிச்சயம் செய்தேதீருவேன்.

- இவ்வாறு அடித்துக் கூறினார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் அரசினது இரண்டாம் கட்டத் திட்டம் நேற்றுமுன்தினம் அனுராதபுரம், கஹட்டகஸ்திகிலியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

இலங்கை மின்சார சபையின் நிர்வாகச் சீரழிவிற்கும் ஊழல் நிறைந்த தன்மைக்கும் நாட்டை ஆட்சிசெய்த அனைத்து அரசுகளும் பொறுப்புக் கூறவேண்டும். இன்று இலங்கை மின்சாரசபை ஒன்பதாயிரம் கோடி ரூபா நட்டத்தில் இயங்குகிறது. மக்கள் வங்கியின் ஒத்துழைப்பினால்தான் சபை முன்நோக்கி நகர்கின்றது.

இலங்கை மின்சாரசபை மறுசீரமைப்பு விடயம் பதினொரு மாத காலம் ஆராயப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் மின்சார சபையின் நட்டமும் மும்மடங்காக அதிகரித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் இப்போது நாம் இரண்டில் ஒன்றைத் தீர்மானிக்கவேண்டும் - இவ்வாறு ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (க-8)




LG Digitally yours
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, POWER HOUSE ROAD, JAFFNA
TEL: 021-222-5766

## சட்டவிரோத மின் பாவனை அதிகரிப்பு

கரவெட்டி,மே10

வடமராட்சிப் பிரதேசத்தில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சட்டவிரோத மின்பாவனையாளர்கள் பல்வேறு இடங்களில் வயர்களை நிலத்துக்கடியில் புதைத்து மின்சாரத்தைப் பெறுவதால் மின்சாரத் தாக்கத்திற்கு ஆளாக நேரிடுமோ என்ற அச்சம் பொதுமக்களிடம் நிலவுகின்றது.

அத்துடன், மின்பாவனையாளர்களும் சட்டவிரோத மின்பாவனையால் குறைந்தளவான மின்சாரம் கிடைக்கப்பெறுவதாகக் குற்றஞ் சாட்டுகின்றனர்.

இதுதொடர்பாக பொதுமக்களால் மின்சார சபைக்குப் பல தடவைகள் முறையிட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது. (8-202-70)

## கோப்பாய் ஆஸ்பத்திரியில் சைக்கிள்கள் 'அபேஸ்!'

கோப்பாய்,மே10

கோப்பாய் சுற்றயல்கூறு மருத்துவமனையில் கடந்த நான்கு மாதங்களில் சிகிச்சைபெற வந்த நோயாளிகள் ஐவரின் சைக்கிள்கள் களவு போயுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இவ்விடயத்தில் ஆஸ்பத்திரி நிர்வாகம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று நோயாளர்கள் தரப்பில் கேட்கப்பட்டுள்ளது. (த-72)

**வீடு விற்பனைக்கு**

பருத்தித்துறை, தும்பளை நெல்லண்டை வீதியில் அமைதியான சூழலில் B28 இலக்கமுடைய 2½ பரப்புக் காணியில் கல்வீடு ஒன்று விற்பனைக்குண்டு.

*குறிப்பு: தரகர்களின் ஊடான தொடர்புகள் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளன.*

நேரடித் தொடர்புக்கு: 077 3107578

(சி-42748) (39-11-16-24)

**இயக்குநர் தேவை**

தொலைத்தொடர்பு நிலையத்துக்கு தொலைபேசி இயக்குவதற்கு (பெண், ஆண்) இயக்குநர் தேவை.

தொடர்பு: நாதன் களஞ்சியம்
பிரதான வீதி.
பருத்தித்துறை.

(சி-42749) (39-11-16-24)

## குன்றும் குழியுமாக பண்டத்தரிப்பு வீதி

வலி.தென்மேற்கு,மே10

மாதகலிலிருந்து பண்டத்தரிப்பு சந்திவரை செல்லும் பிரதான வீதி குன்றும் குழியுமாக போக்குவரத்திற்குச் சீர்கெட்ட நிலையில் உள்ளது.

இவ் வீதியைத் திருத்தம் செய்து தருமாறு மாதகல் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் யாழ். வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேற்படி சங்கத்தின் செயலாளர் இ.தங்கராசா இந்தக் கடிதத்தை சங்கத்தின் சார்பில் இவ்வாரம் அனுப்பிவைத்துள்ளார். (த-135)

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலயத் தொண்டர் சபை

**பொதுக்கூட்ட அறிவித்தல்**

**24.05.2005**

அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்பாள் ஆலயத் தொண்டர் சபையின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 24.05.2005 செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும். புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற இருப்பதால் அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்கவும்.

**- செயலாளர்.**

(45171) (39-11-16-24)

## நீங்காத நினைவுகள்

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**



**திருமதி அன்னலெட்சுமி மாரிமுத்து**

-நாச்சிமார் கோயிலடி-

| | |
|---|---|
| அன்னையின் மடியில் | 10.07.1932 |
| இறைவன் கரத்தில் | 10-04-2005 |

அளவெட்டி வடக்கைப்
பிறப்பிடமாகவும் நாச்சிமார்
கோயிலடியை வசிப்பிடமாகவும்
கொண்டு அன்பின் உருவமாய்
பண்பின்உறைவிடமாய்
பாசமுள்ள தாயாக,
பரிவுள்ள மாமியாக
ஆசையுள்ள அப்பம்மாவாகவும்
அம்மம்மாவாகவும் இருந்து
எம்மை நல்வழிப்படுத்தி
வாழவைத்த அன்புத் தெய்வமே!
உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் எண்ணங்களில்
என்றென்றும் நிலைத்திருக்கும்

அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கு எமது குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு.

இன்று (10.05.2005) செவ்வாய்க் கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

658/6, கே.கே.எஸ் வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

ஆத்ம சாந்திக்காகப்பிரார்த்திக்கும்
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**5ஆவது ஆண்டு நினைவஞ்சலி**



**லெப்டினன் ஈழவாசன்**

*சாள்ஸ் அன்ரன் சிறப்புப்படையணி*

**கதிரமலைப்பிள்ளை அருள்வண்ணன்**

- அளவெட்டி வடக்கு -

| | |
|---|---|
| தாயவள் மகிழ்ந்திட | 04-09-1979 |
| வீரச்சாவு | 10-05-2000 |

தமிழினத்தின் தலைவனின் ஆணையின் கீழ்
தமிழீழம் காணப்புறப்பட்டாய்
புறப்பட்ட நாள் தொடக்கம்
புயலாய்க் களமாடி
உமையாள்புரம் தனில் உடல்
தனில் ஊறுபட்டாய்,
ஓயாத அலை 3 இல் நாவற்குழிப்பால
சமரதனில்
உன்னுயிரைத் தமிழ் மண்ணிற்கு ஈய்ந்தாய்.

**- குடும்பத்தினர்.**

அளவெட்டி வடக்கு.
அளவெட்டி.

(45177)(42-11-16-24)

உ

# நாதஸ்வரக் கலைஞனுக்குப் பட்டமளிப்பு



யாழ்.-அத்தியடி பிள்ளையார் கோயிலில்
தொடர்ந்து
பத்து வருடங்களாக
"நாதஸ்வர கானமழை" பொழிந்துவரும்
இளம் நாதஸ்வரக் கலைஞன்

**சுப்புசாமி பாலமுருகனுக்கு**

ஆலய வருடாந்த மகோற்சவ நிறைவு நாளில் நடைபெற்ற நிகழ்வில் கோயில் நிர்வாகத்தின் சார்பில் தலைவர் **து.கனகசபை** அவர்களால் வாழ்த்தி **"நாதஸ்வர கான விநோதன்"** என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.

அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(45165) (32-11-16-38-24)

*- பிள்ளையார் பணியில்
கோயில் நிர்வாகம்.*

# இன்றைய ஆட்டத்தில் மோதும் அணிகள்

## யாழ்.பல்கலைக் கழக அணி



தரையில் இருப்பவர்கள் -
இடமிருந்து வலமாக எஸ்.ஜெயகாந், என்.மகேந்திரராசா, வி.சொருபன்,
கதிரையில் இருப்பவர்கள் - இடமிருந்து வலமாக - ஜே.சரவணபவ ஐயர் (முகாமையாளர்), என்.எடிசன், என்.ஜேம்ஸ் கொலின்ரன், வீ.கிருபாகரன் (தலைவர்), ஜே.ரவணகுமார், எம்.இளம்பிறையன் (பயிற்றுவிப்பாளர்).
நிற்பவர்கள் - இடமிருந்து வலமாக - என்.மேரிபஸ்ரியன், ஏ.யூட் பிரசாந்தன், எஸ்.நிரோஜன், ரி.ஏ.புஸ்பராஜ், எஸ்.தேவராஜ, கே.சத்தியசீலன், கே.பிரதீபன், ரி.ஜெயா நந்தசீலன், யு.ஜோசப்ரஜன், பி.கிசோக் குமார், K.அனந்தசஜனன்.

## லக்கிஸ்ரார் அணி



கஜரூபன், ரமேஸ் காந்த், விஜிதகுமார், ஜெயந்தன், ரமேஸ்குமார், சுரேஷ்குமார், கிங்ஸ்சிலி, சுதாகரன், மதிவண்ணன், டினோசன், கேதீஸ்வரன், அஜந்தன், நிலான்ராஜா.

விளையாட்டு

## உதயன் ஊடக அனுசரணையுடன்

# எல்லைப்படை மாவீரர் உதைபந்தாட்டம் மின்னொளியில் இன்று ஆரம்பமாகின்றது

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும் சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத்துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் 'உதயன்' ஊடக அனுசரணையுடன் வலிகாமம் லீக் நடத்திவரும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று மீண்டும் ஆரம்பமாகின்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் கடந்த மார்ச் மாதம் 16ஆம் திகதிமுதல் நடத்தப்பட்டுவரும் இந்தச் சுற்றுப் போட்டியில் 57 கழகங்கள் பங்குபற்றின.

கடந்த மாதம் 10ஆம் திகதியுடன் கால் இறுதி ஆட்டத்துடன் ஆட்டம் நிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும். இந்த ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகி நான்கு நாள்கள் இடம்பெறவுள்ளன.

இன்று மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டங்களில் முதலில் நடைபெறும் அரையிறுதி ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகமும் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக்கழகமும் மோதுகின்றன.

பலமான இரு அணிகள் மோதும் இன்றைய ஆட்டம் ரசிகர்களுக்குப் பெருவிருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆட்டத்தை அடுத்து 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான ஆட்டம் இடம்பெறும். கிளிநொச்சி லீக்கும் யாழ்.லீக்கும் இந்த ஆட்டத்தில் மோதவிருக்கின்றன. (3-86)

# அச்சுவேலி விக்கினேஸ்வரா சம்பியன்

யாழ்ப்பாணம்,மே10

கைதடி வடக்கு நவ சனசமூக நிலையத்தினால் மின் ஒளியில் நடத்தப்பட்ட கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியன் ஆகி வெற்றிக் கிண்ணத்தினைத் தனதாக்கிக்கொண்டது.

கடந்தவாரம் கைதடி வடக்கு நவ சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழக அணி மோதியது.

அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகம் 25:17, 20:25, 25:22, 19:25, 10:15 என்ற செற அடிப்படையில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தினை வெற்றிகொண்டது.(3-190)

# ஆவரங்கால் மத்தி வி.க.வெற்றி

யாழ்ப்பாணம்,மே10

கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 49ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மின் ஒளியில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால மத்தி விளையாட்டுக் கழகஅணி வெற்றிபெற்று வெற்றிக்கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது.

கடந்தவாரம் கைதடி மேற்கு சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழக அணி மோதியது.

ஆவரங்கால் மத்தி விளையாட்டுக் கழக அணி 25:15, 20:25, 25:20, 25:22 என்ற செற் கணக்கில் அச்சுவேலி விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக அணியை வெற்றிகொண்டது.(3-190)

## மொறட்டுவவில் நடைபெறும் கிரிக்கெட்

# முதல் இரு ஆட்டங்களிலும் யாழ்.பல்கலை வெற்றிவாகை

கொழும்பு,மே10

மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் அழைக்கப்பட்ட பல்கலைக்கழக அணிகளுக்கிடையில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியல் முதலிரு ஆட்டங்களிலும் யாழ்.பல்கலைக் கழகம் வெற்றிபெற்றது.

கடந்த வியாழக்கிழமை நடந்த முதலாவது ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியும் கொழும்பு பல்கலைக்கழக அணியும் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொழும்பு பல்கலைக்கழக அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ரஜீவ் நிர்மலசிங்க 44 ஓட்டங்களையும் பண்டார 22 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணிவரர் ஜெயந்தன் 5.1 ஓவர்கள் பந்துவீசி 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் சர்வானந்த, செந்தூரன், நிஷாந்தன், யாதர்தன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணியினர் 3 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மணிவண்ணன் 43 ஓட்டங்களையும் சர்வானந்த 29 ஓடடங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கொழும்பு பல்கலைக்கழக அணிவீரர் ஜெனசேன, சேரரத்தின, ரஜீவ்நிர்மலசிங்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை வீழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழக அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இந்த ஆட்டத்தில் சிறந்த ஆட்டநாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணிவீரன் மணிவண்ணன் தெரிவுசெய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மற்றோர் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து மொறட்டுவ பல்கலைக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக் கழக அணியினர் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 48.2 ஓவர்களின் 232 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் கௌரிபாகன் 68 ஓட்டங்களையும் ஜேந்தன் 42 ஓட்டங்களையும், அருள்ராஜ் 23 ஓட்டங்களையும் மணிவண்ணன் 31 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் மொறட்டுவ பல்கலைக்கழக அணிவீரர் நவிரா 9 ஓவர்கள் பந்துவீசி 22 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டையும் சித்தாங்கன் 7 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும்,, பனுகா 10 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

233 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என களம் இறங்கிய மொறட்டுவ பல்கலைக்கழக அணியினர் 37.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 130 ஓட்டங்களை மட்டும் பெற்றுள்ளனர். இதில் அமில் 25 ஓட்டங்களையும் நவிரா 28 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் யாழ்.பல்கலைக்கழக அணி வீரர் அருள்ராஜ் 9.5 ஓவர்கள் பந்துவீசி 10 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டினையும் மணிவண்ணன் 5 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டினையும், ரவி சங்கர் 5 ஓவர்கள் பந்துவீசி 21 ஓட்டங்களைப் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் செந்தூரன் 8 ஓவர்கள் பந்து வீசி 21 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

யாழ்.பல்கலைக்கழக அணியினர் 102 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இப் போட்டியில் சிறந்த ஆட்டநாயகனாக யாழ்.பல்கலைக்கழக அணிவீரன் கௌரிபாகன் தெரிவுசெய்யப்பட்டார். (3-190)

# 2 ஆவது ஆட்டத்தில் 'டக்வோர்த் லூயிஸ்' விதிப்படி 8 விக்கெட்டுக்களால் தென்னாபிரிக்க அணி வெற்றி!

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையே கிங்ஸ்டனில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 2 ஆவது ஒருநாள் ஆட்டத்தில் 'டக்வோர்த் லூயிஸ்' முறைப்படி தென்னாபிரிக்கா 8 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது.

இதன்படி 5 ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரில் 2-0 என்ற முன்னிலையில் தென்னாபிரிக்கா உள்ளது.

இந்த ஆட்டத்துக்கான தென்னாபிரிக்க அணியில் முன்னணி துடுப்பாட்டவீரர் பிறின்ஸ் இடம்பெறவில்லை. அவருக்குப் பதிலாக ஒன் டொவ் சேர்க்கப்பட்டார். மேற்கிந்தியத்தீவுகள் அணியில் வேகப்பந்து வீச்சாளர் பெட்ரோ கொலின்ஸ் நீக்கப்பட்டு பவல் சேர்க்கப்பட்டிருந்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் கிரஹம் ஸ்மித் மேற்கிந்தியத் தீவுகளை முதலில் துடுப்பெடுத்தாடுமாறு அழைத்தார். இதன்படி களமிறங்கிய மேற்கிந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 152 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.



மேற்கிந்திய அணி வீரர் ஆட்டமிழக்கும் காட்சி.

இந்த ஆட்டத்தில் மேற்கிந்திய வீரர்களின் துடுப்பாட்டம் மிக மோசமாக இருந்தது. முன்னணி வீரர்கள் எவருமே சிறப்பாக ஆடவில்லை. விக்கெட் காப்பாளர் பிரவுணி, அணித்தலைவர் சந்தர்போல் ஆகிய இருவர் மட்டுமே ஓரளவு ஓட்டங்களைக் குவித்தனர்.

மேற்கிந்திய அணி சார்பாக பிரவுணி ஆட்டமிழக்காமல் 46 ஓட்டங்களையும் சந்தர்போல் 36 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் தென்னாபிரிக்கா சார்பாக பொலக், லாங்வெல்ட் ஆகியோர் தலா 2 விககெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மதிய போசன இடைவேளையின் போது மழை பெய்ய தென்னாபிரிக்கா துடுப்பெடுத்தாட தாமதம் ஏற்பட்டது. சுமார் 2 மணித்தியாலயங்களில் மழை நிற்க ஆட்டம் தொடர்ந்தது.

இதில் 'டக்வோர்த் லூயிஸ்' முறைப்படி 33 ஓவர்களில் 124 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்கு தென்னாபிரிக்காவிற்கு நிர்ணயிக்கப்பட்டது. அதறகு பதிலளித்தாடிய தென்னாபிரிக்கா 26.4 ஓவர்களில் 2 விக்கெட்டுககளை இழந்து 124 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்படி இநத ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 8 விக்கெட்டுக்களால் வெற்றியடைந்தது. அணி சார்பாக டிப்பென்னார் ஆட்டமிழக்காமல் 60 ஓட்டங்களையும், கிப்ஸ் ஆட்டமிழக்காமல் 44 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பிரட்ஷே 16 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

தென்னாபிரிக்கா சார்பாக சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய டிப்பென்னார் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார். (க-3)

# தமிழரின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்க அரசு சதித்திட்டம்

## தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே10

தமிழ்மக்களின் போராட்ட உணர்வுகளை மழுங்கடிப்பதற்கு அரசு சதித்திட்டம் தீட்டுகின்றது. அதனை மக்கள் விளங்கிக் கொண்டு அவற்றைத் தகர்த்தழித்து எமது இலட்சியப் பயணத்தில் வீறுநடை போட வேண்டும்.

தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக்கழகம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

'பொதுக்கட்டமைப்பில் சந்திரிகா காட்டும அக்கறையின் உள்நோக்கம் என்ன?' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

பொதுக்கட்டமைப்பு என்பது சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களையும் மக்களையும் பழைய நிலைக்கு கொண்டு செல்வதற்கான வழியை ஏற்படுத்துவதற்குரிய ஒரு செயற்றிட்ட அமைப்பு மட்டுமே.

இந்தப் பொதுக்கட்டமைப்பிற்கும் இலங்கையின் அரசியலுக்கும் எந்தவிதமான தொடர்புகளுமே இல்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எந்த விமோசனத்தையும் தேடித்தரப் போகின்ற ஒரு அமைப்புமுறை அல்ல.

ஆனாலும், சந்திரிகா அம்மையார் இந்த விடயத்தையும் தனது சுய அரசியலுக்காக பயன்படுத்த முற்படுவதை தமிழ் மக்களாகிய நாம் தெளிவாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

ஜே.வி.பியினர் மற்றும் சிங்களப் பேரினவாதிகள் இதனைக் கடுமையாக எதிர்ப்பதாகவும் - தான் தமிழ்மக்கள் மீது கொண்டுள்ள அக்கறையினால் தனது பதவி பறிபோனாலும் தனது அரசு ஆட்சி கவிழ்ந்தாலும் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் என்று கூறுவதனூடாக பல இலாபங்களை அடைய எத்தனிக்கின்றார் சந்திரிகா அம்மையார்.

குறிப்பாக, சர்வதேச ரீதியாக தன்னை ஒரு மனிதாபிமானம் மிக்க அரசுத் தலைவியாக காட்ட அவர் முற்படுகின்றார். இது தவிர சந்திரிகா இவ்விடயத்தில் உறுதிகொண்டு சன்னதமாடத் தொடங்கிய நாள்கள் என்பதும் சர்வதேசமும் தமிழ் மக்களும் சந்திரிகா அரசு மீது கடும் கொதிப்புற்றிருந்த ஒரு காலப்பகுதியாகும்.

அதாவது, பத்திரிகையாளரும் இராணுவ ஆய்வாளருமான சிவராம் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இலங்கை அரசினதும் ஆட்சியாளர்களதும் உண்மையான முகத்தோற்றத்தை சர்வதேச சமூகம் கண்டுகொண்டது. அதனால், ஏற்படப்போகும் தாக்கங்களைத் தவிர்த்துக்கொள்ளும் நோக்கோடு சர்வதேச சமூகத்தை திசைதிருப்ப சந்திரிகா பொதுக்கட்டமைப்பு என்ற எதுவுமே இல்லாத ஒரு விடயத்தைப் பெரிதாக்கி, தனது அரசியலில் இலாபம் தேட எத்தனிக்கின்றார்.

இது தவிர அடுத்து வரப்போகும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்திலும் இவ்வாறான ஒரு கட்டமைப்பு உருவாக்காதவிடத்து தனது அரசுக்கான உதவிகள் தடைப்பட்டு விடும் என்பது சந்திரிகா அம்மையார் புரிந்து கொண்ட உண்மையே. எனவே, உலக நாடுகளிடம் உதவிகளைப் பெற்றுத் தன்னைப் பலப்படுத்திக்கொள்ளவும் சந்திரிகாவிற்கு இன்று பொதுக்கட்டமைப்பின் அவசியம் இன்றியமையாததாகவே உள்ளது.

எனவே, சுனாமிப் பாதிப்பிற்காக தோற்றம் கொள்ளவேண்டிய பொதுக்கட்டமைப்பு இன்று பத்திரிகையாளர் மாமனிதர் சிவராமின் படுகொலையை மூடிமறைக்கவும், இலங்கை அரசு உதவி வழங்கும் நாடுகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளவும், சந்திரிகா தென்னிலங்கை அரசியலில் தொடர்ந்து தம்மைத் தக்கவைத்துக்கொள்வதற்காகவுமே தோற்றம் பெற்றுக்கொண்டிருப்பதை நாம் அனைவரும் விளங்கிக்கொண்டு செயற்பட வேண்டியவர்களாக உள்ளோம்.

பொதுக்கட்டமைப்பை ஜே.வி.பி. மற்றும் பேரினவாத அமைப்புகள் எதிர்ப்பதும் அவர்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியில் சந்திரிகா அம்மையார் அதனை உருவாக்க உழைப்பது போல காட்டிக்கொள்வதும் அரசினால் தயாரிக்கப்பட்டு நடத்தப்படுகின்ற ஒரு நாடகம் என்பதனையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இத்தருணத்தில் தமிழீழ மக்களாகிய நாம் இலங்கை அரசு சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் எமது மக்கள் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கவும் தீட்டுகின்ற ஒவ்வொரு திட்டங்களையும் விளங்கிக்கொண்டு அவற்றைத் தகர்த்தழித்து எமது இலட்சியப் பயணத்தில் வீறுநடைபோட்டுச் செல்ல வேண்டும்.


## வெளிவந்து விற்பனையாகின்றது!

### ஆங்கிலம் பயிற்சி நூல்

**தரம் 7**

தொகுப்பு:

**கே.பிறேமதாஸன்**

(Sp.Eng. Td, Dip. in Eng.)




வெளியீடு

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை,**
**235, காங்கேசன்துறை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(அ-42754)(24-18-15-38)


## முக்கிய கலந்துரையாடல்

மரத்திலும் இரும்பிலும் (ஒட்டுவேலை) தளபாட உபகரணங்கள் உற்பத்தி செய்வோரும் அரச ஸ்தாபனங்களின் கேள்வி கோரலுக்குப் பொருள் விநியோகிப்போரும் அதைப் பொறுப்பேற்று செய்வோருக்குமான கலந்துரையாடல் யாழ். மாவட்ட நிர்மாணத் துறையினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தவறாது கலந்து கொள்ளவும்.

இடம்: யாழ். ப.நோ.கூ. மண்டபம்
கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

காலம்: நாளை (11-05-2005) புதன்கிழமை

நேரம்: பி.ப. 3 மணி

நிர்மாணத்துறை,யாழ். மாவட்டம்.

(45191)(24-18-15-38)

## துயர்பகிர்கிறோம்

எமது கல்விக் கோட்டத்தில் கடமையாற்றும்

**திருமதி பத்மினி இந்திரகுமார்**

அவர்களின் அன்புக் கணவர்

**கனகரத்தினம் இந்திரகுமார்**

அவர்கள் காலமானதையிட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் கோட்டக் கல்வி,
பணிப்பாளரும் ,பணியாளர்களும்.

(45195)(46-18-15-38)

## மரண அறிவித்தல்

**திருமதி பரஞ்சோதி கதிர்காமர்** [வறுத்தலைவிளான்]

வறுத்தலைவிளான், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் இல.11, கம்பல் பிளேஸ், தெஹிவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரஞ்சோதி கதிர்காமர் நேற்று (09-05-2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் க.கதிர்காமர் (ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - சின்னத்தங்கம் தம்பதியரின் ஏகபுத்திரியும் அமிர்தாம்பிகை (வதனி), காலஞ்சென்ற உமா மகேஸ்வரன் மற்றும் நிர்மலாம்பிகை (பபி - ஆசிரியை, மகாஜனக் கல்லூரி), ஞானேஸ்வன் (லண்டன்), யோகேஸ்வரன் (பிரான்ஸ்), தியாகேஸ்வரன் (ஈசன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற ஐயாத்துரை மற்றும் அகிலேஸ்வரி (பிரான்ஸ்), இராசதுரை, கௌரிசங்கரி (லண்டன்), பாய்க்கியராணி (பிரான்ஸ்), யுனித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திருமதி சுவர்னா கமலன் (லண்டன்), காலஞ்சென்ற முகுந்தன் மற்றும் அஜந்தன, நிரஞ்சன (லண்டன்), நிருபரன், றவீனா, சாயிலக்ஷ்மி, அனீக்கா, நிக்ஷன், நிலக்ஷன், சஞ்சீவன், சுமங்கலா ஆகியோரின் பாசமிகு பாட்டியும் கைலாவின் பிரியமுள்ள பூட்டியும ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 591, காலி வீதி, கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் இன்று (10-05-2005) செவ்வாய்க்கிழமை காலை தொடக்கம அஞ்சலிக்காக வைக்கபட்டு, நாளை (11-05-2005) புதன்கிழமை பி.ப. 2 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, கல்கிசை பொதுமயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

*உதவி அரசாங்க அதிபர் பணிமனை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.*

தகவல்:
வ.இராசதுரை
(மருமகன்).

(45193)(46-38-15-18)


## வேலையாள்கள் தேவை

புடைவை விற்பனையில் அனுபவம் வாய்நத விற்பனையாளர்களும் காசாளர்களும் (35 வயதுக்குட்பட்டவர்கள்) உடனே தேவை. 16-05-2005 ஆம் திகதிக்கு முன்பு நேரில்வரவும். பெண்களும் பயிலுநர்களும் விரும்பப்படுவர்.

தொடர்பு: **புதிய சோபனா ஆடையகம்**
16, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம். (45190)(15,18,38)

## தேவை

- தரம் 6, 7, 8 ENGLISH MEDIUM கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
- தமிழ்மொழி கற்பிக்கக்கூடிய ஆசிரியர்கள் தேவை.
- அலுவலக எழுதுநர் ஒருவர் தேவை.

தொடர்பு: **கற்சுமி கல்வி நிறுவனம்**
166, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0776510149. (45190)(15-18-38)



## இசைப்பிரியர்களே!

### அன்று தலைநகரில் இன்று தாய்நகரில்

முன்னணியான 'இசைவாருதி' யாழ். ஜேம்ஸ் அன்ரனிஸ் **பிரண்ஸ்** இசைக்குழுவும் தமிழீழ எழுச்சிப்பாடகர் **ஜே.ஆர்.சுகுமார்** சுன்ராமி பாடல் புகழ் **வசீகரன்** மற்றும் இளைய தலைமுறையின் துள்ளிசைப் பாடகிகளான **T.திவ்யாஞ்சலி**, ராதிகாவுடன் முன்னணிப் பாடகர் **S.K.**நாதன் சிங்கப்பூர் மலேசியா புகழ் **S.**தயாளன், நிகன்ராஜ் இவர்களுடன் நவீன இசைக்கருவிகளின் மூலம் புத்தம்புதிய, இனிய இடைக்காலப் பாடல்களை அள்ளி வழங்க காத்திருக்கிறார்கள் என்பதை இசை ரசிகர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**பிரண்ஸ், இசைக்குழு சுகுமார் தொடர்புகளுக்கு**

**11/ A.V.**றோட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**T.P.077 6366038**

அத்துடன் இசையில் ஆர்வமுள்ள பெண் பாடகிகளும் தொடர்பு கொள்ளலாம். (45188)(51-18-11)


## ஆறாத துயரத்தில் வந்தது ஆறாம் மாத நினைவலைகள்

பிறப்பு
25
-
12
-
1953



இறப்பு
10
-
11
-
2004

### திருமதி குகதாசன் கமலினி

இருபத்து இருவருடம்
என்னோடு வாழ்ந்திருந்து
பெருமைக்குள் பெருமை பல
பெற்றெனக்குத் தந்தவளே!
அருமை மகளைப்போல்
அப்போதும் உனைக் காத்து
உரிமையுடன் வாழ்ந்ததெலாம்
ஊர் உலகம் தான் அறியும்!

குககமலவாசம்,
அம்பலவாணர் வீதி,
காளிகோயிலடி, உடுவில், சுன்னாகம்.

**த.குகதாசன்** (கணவர்),
**த.தங்கம்மா** (மாமி).

(45194)(26-18-38-15)


## தபால் மூலம்

மார்க்கோனி நிறுவனம் இலத்திரனியல் கல்விக்காக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். எமது விளம்பரங்களை இலங்கையின் பிரபல தமிழ், சிங்கள, ஆங்கில முன்னோடிப் பத்திரிகைகளிலும் காணலாம். தபால் மூலம் குறைந்த கட்டணத்தில் இலத்திரனியல் மற்றும் செலுலார் பயிற்சி நெறிகளை கற்க விரும்புபவர்கள் கட்டணங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வங்கிக் கணக்குகளிற்கோ அல்லது தபாற்கந்தோரில் காசுக்கட்டளை மூலமாகவோ அனுப்பலாம். அல்லது கற்கை நெறி பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள மேலதிக ரூ5 முத்திரை ஒட்டிய நீள கடித உறையை வைத்து எமது முகவரிக்கு அனுப்பலாம். (மேலதிக முத்திரை,நீள கடித உறை அவசியம்) கற்கை முடிவில் சான்றிதழைப் பெறலாம். இந்தத் திட்டத்தில் வயது வேறுபாடின்றி ஆண்,பெண் அனைவரும் இணைந்து கொள்ளலாம். இலங்கையில் இருக்கும் அனைவரையும் இதில் இணைந்து பயன் பெறும்படி கேட்டுக்கொள்கிறோம்.

கட்டண முடிவுத் திகதி :- 31 - 05 - 2005

### 1.Dip. in Advanced Electronics (Repairing)

Full Basic Electronics, Basic Engineering Science,Handling of Digital Meters,Transistor & IC Circut Designing, Making lot of Interesting usefull circuits, Wireless Remote Controling & Transmitting(full), Radio Technology(full), TV Technology(full), Computer Monitors & UPS, VCD,DVD. 5 - 6 moth Course, முழுக்கட்டணம் - ரூ 2500/=

பகுதிகளாக அனுப்ப விரும்புகிறவர்கள் முதலில் 1000 பின்னர் 1000,500.

### 2.Dip. in Cellular Technology (Repairing)

(1)Cellular Batteries & Maintenance. (2) GSM Phone's & SIM's Security setup & Codes. (3) Analog & Digital, AF & RF, Networks (Basic) (4)Cellular maintenance tips for users & Technicians (5)User Interface Softwares (Ring Tones,Pictures, Phone Book,SMS) (6)Professional Cellular Service Softwares (7)Type of Cellular Service Cables, G.S.M Service Codes, International GSM codes, Circuits & Service Diagrams, Professional Cellular tools (8) Introduction of computer Hardwares. (9)Mobile Phone Repairing. 3 month Course, முழுக்கட்டணம் - ரூ1400/= (பகுதிக்கட்டணமாயின் 1000 பின்னர் 400)

### 3.Cer. in Home Electronics & Cellulars (பெண், ஆண்)

பாவனையாளர்களுக்கான கற்கைநெறி. இதில் அன்றாட வாழ்வில் தேவைப்படும் மின்னியல்,இலத்திரனியல்,செலுலார் தொடர்பான பகுதிகள் உள்ளடக்கப்படும். அடிப்படை இலத்திரனியலும் மின்னியலும்,மற்றும் இலத்திரனியல், மின்னியல் சாதனங்களின் அடிப்படைக் கட்டமைப்பு, சாதனங்களில் அவதானிக்க வேண்டிய முக்கிய விடயங்கள்,செலுலாரில் பாவனையாளருக்குத் தேவையான அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்படும். இதனை வீட்டில் உள்ள அனைவரும் பயிலலாம். தகைமை எதுவும் அவசியமில்லை. முழுக்கட்டணம் - ரூ 600/=

### 4.Cer. in Electronics for Kids (சிறுவர்களுக்கு)

10-14 வயதிற்கு உட்பட்டவர்களுக்கானது. இதில் Basic Electronics, Transistor & IC Circuit Designing, Digital Meters, Introduction of Radio Technology. Practicals - LED Light Circuits, Sound Switch, Bird or Animal sound Circuits and FM mic Circuits and Simple Radio Circuit. பரிசோதனைகள்,செய்முறைகளுக்குரிய வீடியோ செய்யப்பட்ட VCD க்களும் மேலதிகமாக அனுப்பப்படும். முழுக்கட்டணம் - ரூ 600/=

செலுலார் திருத்துபவர்கள் இலத்திரனியல் கற்க வேண்டுமாயின் முழுக்கட்டணமாக ரூ 3900/= (2500+1400) அல்லது பகுதியாக ரூ 2000/= ( 1000+1000) அனுப்பலாம்.

வங்கி மூலம் அனுப்புவதாயின் : HNB Bank - 0090651986, Bank of Ceylon - 1070119, Commercial Bank - 8100025135. பின்வரும் தகவல்கள் மூன்று வங்கிகளுக்கும் பொதுவானவை Name - Marconi Technical Institute, Branch - Wellawatta, Address - 410, 2nd floor,Galle Road,Wellawatte, Account Type - Saving Account) அல்லது மணிஓடர் பத்திரமாயின் :- பணம் கொடுபடவேண்டிய இடம் - Wellawatta Post Office பெறுபவரின் பெயர் - Manager, Marconi Technical Institute. Bank ல் அல்லது Post office ல் பெற்ற பற்றுச் சீட்டையும்,தெளிவாக எழுதப்பட்ட உங்கள் முகவரியையும் பதிவுத் தபாலில் உடன் அனுப்பவும். (வங்கியினூடாக அனுப்பும் போது கொமிசன் வழங்கத் தேவையில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

**www.marconi institute.com**

செலுலார் மாணவர்களுக்கு பழுதுபார்க்கும் தொழில்சார் மென்பொருள் தொகுதி ஒன்றும் இலவசமாக வழங்கப்படும்

அனைத்து பாடத்திட்டங்களுக்கும் மேலதிகமாக வீடியோ செய்யப்பட்ட வெவ்வேறு VCD க்களும் அனுப்பப்படும். இதன் மூலம் மாணவர்கள் நேரடியாக வகுப்பில் பயிற்சியில் ஈடுபடுவதைப் போன்ற அனுபவத்தைப் பெறமுடியும். இதில் இலத்திரனியல் அடிப்படை உபகரணங்கள், கருவிகள், சேக்கிற் தயாரித்தல், பரிசோதனைகள், செலுலார் மென்பொருள் கணனிப் பகுதிகள், பழுதுபார்த்தல் என்பனவும் அடங்கும்.

**MARCONI TECHNICAL INSTITUTE**
410, 2nd floor, Galle Road, Wellawatta.TP: 2361362

# சேவை நலன் பாராட்டுவிழா

கிளிநொச்சி,மே10

லண்டனில் இருந்து வருகைதந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் பிளாஸ்ரிக் சிகிச்சையை மேற்கொண்ட டாக்டர் பிலிப்பின் சேவையைப் பாராட்டும் நிகழ்வு இன்று மாலை 4.30 மணியளவில் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி ஆஸ்பத்திரியின் டாக்டர்கள், உத்தியோகத்தர்கள், பணியாளர்கள் இணைந்து இந்தச் சேவைநலன் பாராட்டு விழாவை ஏற்பாடுசெய்துள்ளனர்.

(எ-305)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 11-12-1939

மறைவு 21-4-2004

அமரர்

சுப்பிரமணியம் யோகலிங்கம்

ஆண்டு ஒன்றான போதிலும்
உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு நீங்கவில்லை
என்றும் உங்கள் நினைவுகளுடனே நாங்கள்
இப்பூமியில் வாழ்கின்றோம்.

கொக்குவில் மேற்கு. கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

(45199) (54-29-14-17-15)

## மரண அறிவித்தல்கள்

### அகஸ்ரின் நேசம்மா



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட அகஸ்ரின் நேசம்மா நேற்று (09.05.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அகஸ்ரினின் அன்பு மனைவியும் திரேஸ்மலர் செல்வராஜ் (கனடா), ரவீந்திரன் (இந்தியா), அழகுராஜ் (கனடா), யஸ்ரின் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் கமலேஸ்வரி, குமாரி புலோமினா, சுலோசனா ஆகியோரின் மாமியாரும் முத்துக்குமார் (வெஸ்ரன் யூனியன், யாழ். முகவர்), ரட்ணேஸ்வரி (ஆசிரியை, யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பெரியதாயாரும் குணரட்ணம் (றொட் தளபாட நிலையம்), தியாகினி (அமெரிக்கா), ஜெயந்தன் (மங்களா தளபாட நிலையம், சிற்றி ரெக்ஸ் & ரெயிலஸ்), றொபேட், (ஏசியன் தளபாட நிலையம்), கேதீஸ்வரன் (இந்தியா), ஜதீஸ், ஜெனி, ஜெனோத், ரேக்கா, கார்த்திக், பிரதீப், பிரதாப், பிரசாத், தாவித், தக்கேயூ, மரியா, றேதா, கிசோக், ராகவி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எஸ்தர், கவினி, வருண், சரண் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (10.05.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி கு.திரேஸ்மலர் (மகள்).

*535 A, பரமேஸ்வரா சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி.*
*T.P.: 021 - 222 2316*

(45210)(29-14-17-15)

### திருமதி அப்புத்துரை பொன்னம்மா

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை பொன்னம்மா நேற்று (09.05.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகநாதன் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் ஆயிலியம், அமுதலிங்கம் (ஜேர்மனி), சிவகாமசௌந்தரி ஆகியோரின் அன்புத் தாயாரும் குகதாஸ், விவேகானந்தன், சிவானந்தபவானி, மகாலட்சுமி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்புச் சகோதரியும் கிருஷ்ணகுமாரி, மதுகரன் (ஜேர்மனி), நிரோஷன் (ஜேர்மனி), செந்துஜன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2005) செவ்வாய்க்கிழமை 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் தெற்கு.*

தகவல்:
சி.குகதாஸ்,
செ.விவேகானந்தன்

(45208)(29-14-17-15)

### வைரமுத்து மதிமுகராசா



சங்கிலியன் வீதி, நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து (வல்லிபுரம்) மதிமுகராசா 08.05.2005 அன்று அகாலமரணமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற வைரமுத்து (வல்லிபுரம்) மணிமேகலையின் அன்பு மகனும் பாசமிகு மதிவதனாவின் அன்புச் சகோதரனும் தவராசாவின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்ற மரியடோன் மற்றும் மரியதர்சனின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 10.05.2005) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.தவராசா (மைத்துனர்).

*இல.31/23, சங்கிலியன் வீதி, நல்லூர்.*

(45205)(29-14-17-15)

# வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நெடுந்தீவு பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் இன்றும், நாளையும் நாளைமறுதினமும் வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர்நோய் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ரி.தயாளன் அறிவித்துள்ளார். தடுப்பு மருந்து ஏற்றப்படும் இடங்கள் பின்வருமாறு:

இன்று காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை - நெடுந்தீவு 2 ஆம் வட்டாரம் பொது நூலகம் 10.30 மணி முதல் 11.30 மணி வரை - முதலாம் வட்டாரம் ஐக்கிய தீபம் சனசமூக நிலையம், 12 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணி வரை 2ஆம் வட்டாரம் வளர்மதி சனசமூக நிலையம் பி.ப. 1.30 மணி தொடக்கம் 2.30 மணிவரை 4 ஆம் வட்டாரம் சாராப்பிட்டி பொதுக் கிணற்றடி நாளை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை நெடுந்தீவு 6ஆம் வட்டாரம் சென்.ஜேம்ஸ் சனசமூக நிலையம், 10.30 தொடக்கம் 11.30 மணிவரை 10ஆம் வட்டாரம் பிரதேச சபை அலுவலகம், 12 மணி தொடக்கம் மாலை ஒரு மணிவரை 11 ஆம் வட்டாரம் சென்.அன்ரனிஸ் சனசமூக நிலையம், 1.30 தொடக்கம் 2.30 மணி வரை 12ஆம் வட்டாரம் பொது சுகாதார பரிசோதகர் அலுவலகம்-

நாளைமறுதினம் 12ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணி வரை நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையம், 10.30 தொடக்கம் 11.30 மணி வரை நெடுந்தீவு சுப்பிரமணிய வித்தியாலயம் 12 மணி தொடக்கம் பி.ப. ஒரு மணிவரை நெடுந்தீவு கிழக்கு குழந்தையேசு சனசமூக நிலையம். (த-180)

உ
ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

## மஹோற்சவகால வில்லிசை தொடர்

யாழ்.திருநெல்வேலி பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு

09.05.2005
முதல் 23.05.2005 வரை

தினமும் இரவு 9 மணிக்கு
வில்லிசைப் புலவர் கலாபூசணம்

க.நா.கணபதிப்பிள்ளை
(சின்னமணி)

குழுவினர் வழங்கும்

'ராமகாதை'

என்ற பொருளிலான தொடர் வில்லிசையைக் கேட்டு அகமகிழ்வடையுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உபயகாரர்களுடன் அடியார்கள்

(C/42759)(29-11-12)


மாகாண மட்ட ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புகள்

★ D.M.I. யாழ்நகர் சனி 3-6 மணி
★ கிறிஸ்ரல், நெல்லியடி
வெள்ளி, ஞாயிறு - 3.30 - 5.30 மணி
★ சுப்றா சித்தன்கேணி வியாழன் / சனி } 6.30 - 8.30 மணி

(45207)(29-11-12)

ராஜா யாழ்ப்பாணம்

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி, மணிவண்ணன், சுந்தர்ராஜன் நடித்த பிரியமான தோழி (ரீலஸ்)

காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு பிரகாஸ்ராஜ் மற்றும் புதுமுகங்கள் (பு.நே.) நடிக்கும் அறிந்தும் அறியாமலும்

(C/41381)(29-16-17)

நாதன்ஸ் சினிமா ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.

ஜெய் ஆகாஷ், மிஷா, ராஜ்கிரண், செந்தில், ராதாரவி நடித்த



செவ்வேல் (ரீலஸ்)

கா.நே.: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே.)

(C/41377)(29-16-17)

மனோகரா யாழ்ப்பாணம்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு.
சரத்குமார், அறிமுகம் ரமேஸ், பூஜா நடித்த

ஐதீஸ்

காட்சி நேரம்: 10.30a.m., 2.30 p.m.,6.30p.m.,9.30 p.m.

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

50 ஆவது நாளை நோக்கி
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர் நடித்த

காட்சிகள்:
11.00. 3.00. 7.00
10.00. (பு.நே.)






Focus Games Zone
120, Arasady Rd.
(யா/இந்து மகளிர் கல்லூரி முன்பாக)

இணைய சேவையில் தனித்துவமான சேவையினை வழங்கிவரும் Focus இன் புதிய அறிமுகம் Computer Games (கணனி விளையாட்டுக்கள்) உங்கள் பொழுதுபோக்கு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க பலவகையான புதிய புதிய Games உடன குதூகலமான ஆரம்பம்.

(45201) (14-17-16-12-29)

இன்று மட்டும் ஒரு மணிநேரம் இலவசம்!
வாருங்கள்! வந்து விளையாடிப் பாருங்கள்!




இன்று வெளியீடு
ஐங்கரன் ஒறிஜினல்
ஓடியோ CD வெளியீடு
★ அது ஒரு கனாக்காலம்
★ அறிந்தும் அறியாமலும்

சீடி சிற்றி

(45196) (14-17-15-12-29)

205/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## கீரிமலை அந்தியேட்டி மடாலய அறிவித்தல்

சிவனேயச் செல்வர்களே!

கீரிமலை தீர்த்தக்கரையிலே பிதிர்க்கடன்களை நிறைவேற்றவென நம்முன்னோராலே தாபிக்கப்பட்ட மடாலயம் போர் அனர்த்தம், சுனாமி அனர்த்தங்களால் சேதமடைந்திருந்தது. இம்மடாலய புனருத்தாரணத்தைத் தற்போது சிறப்பாகச் செய்துள்ளோம் என்பதை அறியத்தருகின்றோம்.

★ இம்மடாலயம் புனரமைப்புக்கு முன்னின்று சகல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய பிரம்மஸ்ரீ க.சந்திரசேகர சர்மா அவர்களுக்கும்-

★ குறுகிய நாள்களில் கட்டட வேலைகளைச் செய்து உதவிய ஊரெழு கிழக்கு கட்டட ஒப்பந்தகாரர் திரு. சண்முகநாதன் (சண்) அவர்களுக்கும் பணியாளர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**குறிப்பு:** காலை 7 மணி முதல் ஒரு மணிவரை மடாலயம் திறந்திருக்கும்.

சிவஸ்ரீ மு.தம்பித்துரைஐயா, ந. பரமேஸ்வரன்
மடாலய தர்மகர்த்தாக்கள்.

(C/42757) (54-14-17-15-12-29)

## மரண அறிவித்தல்கள்

### சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன்



நெடுந்தீவு மேற்கு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 48/9, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை கதிர்காமநாதன் (கதிரமலை) 07.05.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை - சின்னப்பிள்ளையின் அன்பு மகனும் வைத்துலிங்கம் பத்தினிப்பிள்ளையின் அன்பு மருமகனும் சந்திராவின் அன்புக் கணவரும் றமேஸ் (பிரான்ஸ்), றாஜி, தேவி (யாழ். பல்கலைக்கழகம், கலைப்பிரிவு முதலாம் வருடம்) றூபி (உயர்தரம் 2007, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), சுஜி (மாணவி, யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கௌரி (பிரான்ஸ்), ஈசன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும் சுஜிவன், துஷிந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் அம்மாச்சி, சின்னம்மா, சின்னையா, சின்னத்துரை (அமரர்), கிளி, சின்னமணி, பத்தினி, இரத்தினம், செல்லம்மா, செல்லையா, ராசா (அமரர்), சொர்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் விசுவரட்ணம்,லட்சுமி (அமரர்), தவமணிதேவி (அமரர்), கதிரமலை (பிரான்ஸ்), மலர், லலிதா (பிரான்ஸ்), குகன் (அமரர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.05.2005) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
றமேஸ்
(மகன் - பிரான்ஸ்).

*48/9, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.*
*T.P.: 0214590588, 0776002640*

(45204)(29-14-17-15-12)

### சிவசுப்பிரமணியம் விவேகானந்தன்



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய சிவசுப்பிரமணியம் விவேகானந்தன் அவர்கள் நேற்று (09.05.2005) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - அன்னபூரணம் அவர்களின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா தம்பதிகளின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக் கணவரும் சண்முகானந்தன் (லண்டன்), இந்திராதேவி (ஆஸ்திரேலியா), நிர்மலாதேவி, காலஞ்சென்ற சர்வாநந்தன் (வீதி அபிவிருத்தி அதிகார சபை), சியாமளாதேவி (கொழும்பு), செல்வதேவி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் விஜயலக்சுமி (லண்டன்), காலஞ்சென்றவர்களான பத்மநாதன், உருத்திரமூர்த்தி மற்றும் மனோறஞ்சிதராணி, சர்வாநந்தா (ஆசிரியர், D.S. சேனநாயக்கா கல்லூரி - கொழும்பு), குணசீலன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் மீனா, கணேஷ், சுமதினி, மகிழினி ஆகியோரின் பெரியப்பாவும் விதுஷி, விதுஷன், கவிதா, நந்திதா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.05.2005) புதன்கிழமை அன்று காலை ஒரு மணிக்கு கோயில் வீதியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி உருத்திரமூர்த்தி
நிர்மலாதேவி (குஞ்சு)
(சகோதரி)
திருமதி ம.சர்வாநந்தன்

*61/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.*

(45206)(29-14-17-15)

## வீரவன்ஸவுக்கு எதிராகப் பொலீஸில்

# 'சண்டே லீடர்' ஆசிரியர் செய்த முறைப்பாடு குறித்து விசாரணை

கொழும்பு. மே. 10

சண்டே லீடர் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க, தமது உயிருக்கு ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினரான விமல் வீரவன்ஸவினால் அச்சுறுத்தல் விடுக்கப்படுவதாகத் தெரிவித்து பொலீஸில் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு தொடர்பில் விசாரணைகளைத் தாங்கள் ஆரம்பித்துவிட்டனர் என பொலீஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

லஸந்த விக்கிரமதுங்கவிடம் இருந்து இது குறித்து தாங்கள் வாக்குமூலம் பெறவுள்ளனர் என பொலீஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

பத்திரிகையாளர் தராக்கியை விட சண்டே லீடர் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க 'படுமோசமான பயங்கரவாதி' என அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல்வீரன்ஸ, மஹரகமவில் அண்மையில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் வைத்துத் தெரிவித்திருந்தாராம்.

இது தொடர்பில் லஸந்த பொலீஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில், தமது வாழ்வுக்கு அச் சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும், இது குறித்து விமல்வீரவன்ஸவை, விசாரிக்குமாறும் அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இம் முறைப்பாடு தொடர்பாகவே விசாரணை நடத்துமாறு குற்றப் புனாய்வுப் பொலீஸாருக்கு பொலீஸ்மா அதிபர் உத்தரவிட்டிருக்கின்றார். (எ-க)

## வடக்கு - கிழக்கில் இன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லும் இடம்பெறக்கூடாது ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தியே இந்தக் ஹர்த்தால் நடத்தப்படுவதாக மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேந்திரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

**யாழ்ப்பாணம்**

மட்டு.சந்திவெளியில் நேற்று இடம்பெற்ற சம்பவத்தைக் கண்டித்து யாழ். குடாநாட்டில் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்குமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் அழைப்பு விடுத்துள்ளது.

வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற அலுவலகங்கள் என்பனவற்றை முழுமையாக மூடியும் வாகனப் போக்குவரத்துக்களை முற்றாக நிறுத்தியும் ஹர்த்தாலுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றும் -

மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் ரயர்கள் போட்டு எரிப்பதைத் தவிர்க்குமாறு - அவசர நோயாளர் வாகனச் சேவைகளைத் தடுப்பதைத் தவிர்க்குமாறும் அனைத்துத் தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என்று கழகம் விடுத்த செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வன்னியில் இன்றும் நாளையும் பேரணிகள்**

கிளிநொச்சி மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ள கண்டனப் பேரணி இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரி முன்றிலில் இருந்து ஆரம்பமாகும். கண்டனப் பேரணியின் இறுதியில் கிளிநொச்சி அரச அதிபர், போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படும்.

கிளிநொச்சி மாவட்ட மாணவர்கள், ஆசிரியர்கள் இந்தக் கண்டனப் பேரணியில் ஒன்றுதிரள்வர்.

இதற்கிடையில் - மேற்படி சம்பவத்தைக் கண்டித்து நாளை புதன்கிழமை கிளிநொச்சி மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றையும் ஏற்பாடு செய்துள்ளன.

மட்டு.சந்திவெளிச் சம்பவத்தைக் கண்டித்து முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த முள்ளியவளை, புதுக்குடியிருப்பு, மல்லாவி ஆகிய இடங்களில் தனித்தனியே கண்டனப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன. பிரதேச செயலகங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கங்களின் மாவட்ட அலுவலகங்களில் மகஜர்கள் கையளிக்கப்படுவதுடன் பேரணிகள் நிறைவுபெறும்.

முல்லைத்தீவு மாவட்ட மாணவர் ஒன்றியம் இந்தப் பேரணிகளை ஒழுங்குசெய்துள்ளது.

இதேபோல், முல்லைத்தீவு மாவட்ட வெகுஜன அமைப்புகளின் ஏற்பாட்டில் நாளை புதன் கிழமை அங்கு பூரண கடையப்பு நடைபெறவுள்ளது.

வவுனியா, திருகோணமலை, மன்னார், மாவட்டங்களிலும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில், வடக்கு- கிழக்கில் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள பூரண ஹர்த்தாலுக்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் என்பன ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளன. (எ-13-410-353)

## அரசின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேசப் பொதுக்கட்டமைப்பு விடயம் தொடர்பில் அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், அது தாமதமாவதற்கான காரணம், இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் வழங்க வேண்டிய ஒத்துழைப்பு ஆகியன குறித்து இன்றைய கலந்துரையாடலில் ஜனாதிபதி விரிவாக விளக்குவாரென ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் கூறின. (க-3)

## பொதுக்கட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் உரையாற்றும் போது கூறியது குறிப்பிடத்தக்கதாகும்.

இலங்கை அரசினதும் விடுதலைப் புலிகளினதும் சமாதானச் செயலகங்கள் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான ஏற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தயாராகக் காத்திருக்கின்றன.

ஆனால், அரசியல் தலைமைகள் இது குறித்து இறுதி முடிவு எதனையும் எடுக்காததால் இரு தரப்பினரதும் சமாதான செயலகங்கள் இவ்விடயம் தொடர்பாக எந்த நடவடிக்கை யையும் மேற்கொள்ளாமல் கடும் மௌனம் சாதித்து வருகின்றன. (க-3)

## பொதுக் கட்டமைப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கைக்கு இந்த உதவிகள் வந்துசேர வேண்டியுள்ளன. நிதி உதவிகளும் வரவேண்டியுள்ளன. அவற்றை எவ்வாறு வழங்குவது, அந்த நிதியை என்ன செய்வது என்பதெல்லாம் உதவும் நாடுகளுக்கு நன்கு தெரியும்.

எனவே, இவற்றைப் பெறவேண்டும். அதற்குப் புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு அவசியம். வடக்கு - கிழக்கில் மீள் கட்டுமானத்தை மேற்கொள்ள அது முன்மொழியப்பட்டுள்ளது.

மிகவிரைவில் இதற்கான ஒப்பந்தம் கைச்சாத்தாகும். என்றாலும், உதவி வழங்குவோர் கூறும் எல்லாவற்றுக்கும் அரசு தலை சாய்க்காது - என்றார் அமைச்சர் கதிர்காமர். (எ-க)

## இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பா.அரியநேந்திரன், செல்வி கே. தங்கேஸ்வரி ஆகியோருக்கும் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோருக்குமிடையில் நடைபெற்ற பேச்சின் போதே இந்த முகாமை அகற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தையடுத்து ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் அமைதியான முறையில் கலைந்து சென்றுள்ளனர்.

இதேவேளை, சம்பவ இடத்துக்கு வருகை தந்து நிலைமையைச் சுமுகமான முறையில் தீர்த்துவைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி கூறினார்.

நேற்றைய போராட்டத்தின் போது விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களும் அங்கு பிரசன்னமாகி இருந்தனர் என்ற இராணுவத்தினரின் கூற்றையும் அவர் மறுத்தார். முழுக்க "முழுக்க பொதுமக்களாலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இதில் சீருடையுடன் புலிகளின் 50 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர் என இராணுவப் பேச்சாளர் கூறியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இது முற்று முழுதான பொய்'' என்றார் ஜெயானந்தமூர்த்தி. (க-3)

## புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் எதுவுமே நிறைவேறாதபோதும் இராணுவ அச்சுறுத்தல்களையும், நெருக்குவாரங்களையும் படைத்தரப்பு தீவிரப்படுத்தியிருப்பது மக்கள் மத்தியில் பேரச்சத்தையும் கொந்தளிப்பையுமே ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரின் புதிய கெடுபிடிகள், இராணுவ முகாங்கள் மற்றும் காவலரண்களை மக்கள் வாழ்விடங்களில் அமைப்பதற்கு எதிராக மக்கள் அமைதிவழியில் தமது எதிர்ப்பைக் காட்ட முனைந்தபோது மனிதாபிமானமற்ற முறையிலும் கொடூரமான முறையிலும் அரச படைகள் மக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கித் தாக்குதலை மேற்கொண்டுள்ளன.

மக்களின் அமைதிவழிப் போராட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதுபோன்ற சம்பவங்கள் மக்களிடையே போர் நிறுத்த சூழல் குறித்த நம்பிக்கையைத் தளர்த்தி, உணர்வு, ரீதியான கொந்தளிப்புக்கும் வழிவகுக்கும் என்பதோடு நிலைமைகள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகலாம் எனவும் அஞ்சுகிறோம் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)


கணனிக் கற்கை நெறிகளிற்கான புதிய பிரிவுகள் ஆரம்பம்

14.05.2005
16.05.2005 } பகல் 10 மணி

அனைத்து Diploma கற்கை நெறிகளுக்குமான வார, வாரஇறுதிப் பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குநர்,
IIS, யாழ்ப்பாணம்.
(சி-42735)(15-17)

புவியியல் 2006,2007 A/L
ஆசிரியர்: B. மயூரன் (B.A. Hons)
வகுப்புகள் நடைபெறும் இடங்கள்
ஞானோதயா கல்வி நிலையம் - சாவகச்சேரி
பருத்தித்துறை NCA கல்வி நிலையம்
நியூ Match சென்ரர் கொடிகாமம்
திகழ் ஒழி கல்வி நிலையம் -வரணி
சயன்ஸ் அக்கடமி - நெல்லியடி
(C-42760) (15-17)

ஒற்றைத் தலைவலியா...?
எவ்வளவு காலமாக இருக்கிறது?
10 வருடம், 20 வருடம் அல்லது 30 வருடமா?
எவ்வளவு காலம் கஷ்டப்படுகிறீர்களென்பது பிரச்சினையில்லை.
எங்களிடம் நிரந்தரத் தீர்வு உண்டு.
மேலதிக விவரங்களுக்கு எழுதுங்கள்
FAIR PHARMA (PVT) LTD
(MANUFACTURERS OF AYURVEDIC MEDICINES)
Level 5/ East Tower/1C, WORLD TRADE CENTER, COLOMBO - 01,
Phone: 5517897, 5551879, Fax: 5517756
E-mail: fppvtl@lankabellnet.com Website:www.fppvtl.org
A BOI Approved & ISo 9001 : 2000 Qms Certified Company.
(சி-42740)(15-17)


## நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 21 . 07 . 1927 — மறைவு 27 . 04 . 2005

**அமரர் சபாரத்தினம் கனகரத்தினம்**
(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், பெருந்தெருக்கள் திணைக்களம்)

*தூண்டா மணி விளக்காய்*
*துயர் துடைக்கும் அருமருந்தாய்*
*தித்திக்கும் தேன் பாகாய்*
*தேசமெலாம் தெளிந்தவரே!*
*இல்லையென்று சொல்லிவிட*
*இயலவில்லை எங்களுக்கு*
*நிறைந்துள்ளீர் எம்மனதில்*
*நீங்காது இருந்திடுக.*

எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (11.05.2005) புதன்கிழமை மு.ப.11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*மெய்கண்டான் வீதி,*
*சரசாலை தெற்கு,சாவகச்சேரி.* (45198) (15-17)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.


தொழிற்பயிற்சி நெறிகள்

வெளிநாடுகளில் இலகுவான முறையில் வேலைவாய்ப்பைப் பெறக்கூடியவாறு 100% தொழில்சார் தொழிற்பயிற்சி அளிக்கப்படும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

* RADIO, T.V AND VIDEO DECK REPAIRING
சகல இன றேடியோ,ரீ.வீ,டெக் மற்றும் எலற்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, Ups, Printer, Scanner என்பன திருத்தும் முறை (காலம் 10 மாதங்கள்)
* MOTOR REWINDING AND ELECTRICAL WIRING
சகல இன, (f) பான், ரான்ஸ்போமர்கள் றிவைண்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three Phase இணைப்பு முறை என்பன (காலம் 07 மாதங்கள்)
* AIR CONDITIONING AND REFRIGERATION
சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயர் கொண்டிசன் திருத்தும் முறை (காலம் 07 மாதங்கள்)
* MOTOR CYCLE MECHANISAM
சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை (காலம் 06 மாதங்கள்)
* AUTO WIRING (காலம் 03 மாதங்கள்)

ஆரம்பம்:-14.05.2005 ,16.05.2005

மேலதிக விவரங்களுக்கு:
JAFFNA TECHNICAL INSTITUTE
இல. 07, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-42744)(29-11-12)


## மரண அறிவித்தல்கள்

### மேரி யோசப்பின் சிந்துஜா

(சிந்து - ராசாத்தி)

மாதகலைச் சேர்ந்த மேரியோசப்பின் சிந்துஜா அவர்கள் 08.05.2005 ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (11.05.2005) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் மாதகல் புனித தோமையர் சேமக்காலையில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தகவல்:
அன்ரனி தேவகுமார் (நியூ அஜஸ்மின் படகுத் தொழிற்சாலை)

*வேலுப்பிள்ளை கடையடி, மாதகல்.* (45211) (15-17)

### சின்னத்தம்பி வடிவேலு

புலோலி மேற்கு, அல்வொல்லையைச் சேர்ந்த சின்னத்தம்பி வடிவேலு அவர்கள் 09.05.2005 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் இன்று (10.05.2005) பி.ப. 3 மணிக்கு சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்லூரி வீதி, பருத்தித்துறை.* (C-42761) (15-17)

தகவல்: குடும்பத்தினர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 10.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.